Free Circulation Germany- England
மணி: 74 - ஓசை: 337 ஐப்பசி. October. 2024

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950

30 TH years IN EUROPE
Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A




# மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை கொண்டுவருவாரா அநுர குமார?



இலங்கையில் இருந்து ஆர்.பாரதி

## இனத்தைப் பெருக்க இடைவேளையைப் பயன்படுத்த வேண்டுகோள்!

- புதின்



அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துகள்





யேர்மனியில் வளர்ந்து வரும் பெருவிழாவாக
**தமிழர் தெருவிழா**

ஆடற்கலாலயம் 35 வருடங்கள் ஆற்றிய சேவையின் இனிய அறுவடைகள்

யேர்மனியில் நாளைய மாற்றும் திரைப்பட இயக்குனர் சிபோ சிவகுமாரன்

இதழ்: 337






# அப்புவின் குமிழ்சிரிப்பு



மாதவி

ஊரில் வீட்டு வாசலில் உள்ள படலையில் நின்று அப்புமார் ஊரைப்பார்ப்பார்கள்.

அவர்கள் தம் இளமைக்காலத்தில் செய்த பல கைங்கரியங்கள் அவர்கள் மனத்தில் ஓடும். முதுமை என்பது இளையவர்களுக்கு வழிவிட்டு நிற்கும் ஒரு காலம். தெருவில் போவோர் வருபவர் எல்லாம், என்ன அப்பு காற்று வாங்குகிறீங்களா.

எனக்கு ஆயிரம் வேலை இருக்கு, இல்லை என்றால் ஒருக்கால் என்றாலும் வந்து உங்களுடன் கதைப்பேன் என்று சொல்லிச் செல்வார். இன்னொருவர் உங்கள் காலம் போல் அல்ல இன்று. எல்லாமே கடினம்தான். ஏதோ என்னால் முடிஞ்சதைச் செய்தேன், நாடக உல கில் முன்னுக்கு வந்திட்டேன், என்பார்.

ஒருசிலர் மட்டும் அப்புவைக்கண்டு சைக்கிளை நிறுத்துவர். அதில் சிலர் அப்பு நான் சரியாக களைத்துவிட்டேன் காலை 8 மணிக்கு தோட்டத்துக்கு போனேன் மின்சாரம் இல்லை. டீசல் வேண்டி மிசினாலை இறைத்துவிட்டு இப்பதான் வருகிறேன்.என்பர். துலா மிதிச்சுப்போட்டு அப்பு அப்ப பள்ளி க்கூடம் போய் பின் அதிபரானவர்தான் இப்ப அப்புவாச்சு.இன்னும் ஒருவர் மகனுக்கு ரிவிசனுக்கு நேரம் போச்சு. சூமில் வகுப்பு இருக்கு, நான் போனால்தான், படிப்பான். அப்பா என்றால் பிள்ளைகள் படிப்பில் அக்கறை வேண்டும். அந்தக் காலம் போல் இல்லை இந்தக்காலம் அப்பு.

அப்புவிட்டை எல்லாவற்றுக்கும் விடையிருக்கு. ஆனால் எவ்வளவு சொல்லியும் அப்பு ஒருவார்த்தை பேசவில்லை.

படலையை விட்டு வந்து, வீட்டு சாய்மனையில் இருந்து கண்களை மூடிம்திறந்தார்.

அவர் இதழ் ஒரத்தில் குமிழ் சிரிப்பு ஒன்று உதிர்ந்தது. உன்னிப்பாக பார்த்தால் மட்டுமே அந்தச்சிரிப்பு தெரியும். மேலும் மேலும் உன்னி ப்பாக பார்த்தால் அதன் அர்த்தம் புரியும்.

அப்பு இப்போ கண்விழித்து சுவரை பார்க்கிறார். கலை,இலக்கியம்,கல்வி,விவசாயம் என அவர் தொட்டு பிரகாசிக்காத துறை எதுவும் இல்லை. அத்தனை சான்றுகளும் சுவரில் தொடங்குகிறது. அப்பு இத்தனையும் சாதித்துவிட்டு அமைதியாகயாக பிறர் சொல்வதை எல்லாம் கேட்டு இரசித்தபடி உதிர்ந்த புன்சிருப்பே அந்தக் குமிழ்சிரிப்பு. அவர் அவர் தம் காலத்தில் செய்யவேண்டியது எதுவோ அதனை செய்துவிட்டு போக வேண்டி யதுதான். அவர் காலத்தின் பின் சுவரில் மாட்டி இருக்கும் சான்றிதழ்கள் எல்லாம், வெற்றுக்காகிதமாகும். இதுதான் வாழ்க்கை என்று இறுதிக் கணங்கள் கற்றுத்தரும்.

யாரும் ஒரு அப்பு உங்கள் கதைகளைக்கேட்டு ஒரு புன்னகையை பதிலாகத்தந்தால் அவர்களின் வாழ்வை குறைவாக எடைபோட்டு விடாதீர்கள். எல்லாத்தையும் பண்ணிவிட்டு ஒன்றுமே தெரியாதவன் போல் இருக்கும் சிவனிடம் 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பும்', அந்தச் சிரிப்பும் அப்புவின் சிரிப்புமா திரித்தானோ!





அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 337



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276


# மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை கொண்டுவருவாரா அநுர குமார?



இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி

அநுர குமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று அரசாங்கத்தை அமைத்திருப்பது இலங்கை வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனை. இலங்கையின் வரலாற்றில் முதலாவது இடதுசாரி சிந்தனை உள்ள ஜனாதிபதியாக அநுர குமார நடைபெற்று முடிந்துள்ள ஜனாதிபதி தேர்தல் இலங்கையில் பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்திருக்கின்றது. 2019 ஜனாதிபதித் தேர்தலில் சுமார் 4 லட்சம் வாக்குகளை மட்டுமே பெற்ற அநுரா குமார திசநாயக்கா தற்போது 56 லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்று ஜனாதிபதியாக இருக்கின்றார்.

**இந்த ஐந்து வருட காலத்தில் அவர் பெற்றுக்கொண்ட இந்தப் பெரும் வெற்றிக்கு காரணம் என்ன?**

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் உருவாகிய பொருளாதார நெருக்கடியும் அதே காலப்பகுதியில் எதிராக மக்கள் நடத்திய கிளர்ச்சியும் தான் ஜேவிபியின் எழுச்சிக்கு காரணமாக இருந்தது. ஆட்சியில் காணப்படும் அதிகார துஷ்பிரயோகம், குடும்ப ஆதிக்கம் மற்றும் ஊழல்கள் என்பன தான் நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சி அடைவதற்கு காரணமாக இருந்தது என மக்கள் கருதினார்கள்.



'கோட்டா கோ கம' என்ற போராட்டம் வெறுமனே கோட்டாபய ராஜபக்ஷ வீட்டுக்கு அனுப்புவதை மட்டும் இலக்காகக் கொண்டதல்ல. முற்றிலுமான ஒரு அரசியல் மாற்றத்தை – அதாவது சிஸ்றம் ஒன்றை அவா்கள் கோரினார்கள். அரகலயவின் பின்னணியில் ஜே.வி.பி.யின் சம்பந்தம் இரகசியமான ஒன்றல்ல.

சிஸ்றம் சேஞ் ஒன்றைக் கொண்டுவரக் கூடியவர்களாக ஜே.வி.பி. அல்லது தேசிய மக்கள் சக்தி அடையாளம் காணப்பட்டது. ராஜபக்ஷக்கள் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டாலும், பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்கள் என்று நீதிமன்றத்தினாலும், மக்களாலும் அடையாளம் காணப்பட்டவர்கள் தொடர்ந்தும் ஏதோ ஒரு வகையில், அதிகாரத்தைச் செலுத்தக்கூடியவர்களாகவே இருந்தார்கள்.

நெருக்கடியிலிருந்து நாட்டைப் பாதுகாத்தவர் என்ற பெருமையை ரணில் விக்கிரமசிங்க கொண்டிருந்தாலும் கூட, அவர் ராஜபக்ஷக்களைப் என்ற குற்றச்சாட்டிலிருந்து அரகலயவைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்ட செயயற்பாடுகளை அவர்கள் தமது கட்டமைப்புக்களைப் பயன்படுத்தி கிராமிய மட்டத்திலும், கீழ் மட்ட மக்கள் மத்தியிலும் முன்னெடுத்தார்கள். முற்றிலுமான ஒரு மாற்றத்தைக் அநுரகுமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியால் மட்டும்தான் கொண்டுவர முடியும் என்று மக்கள் நம்பினார்கள்.

பழைமையான மரவு ரீதியான கட்சிகளால் மாற்றங்களைக் கொண்டுவர முடியாது என்பது மக்களுடைய உணர்வாக இருந்தது. குறிப்பாக சிங்கள மக்கள் நினைத்தார்கள். அதனால்தான் அநுர குமாரவை அவர்கள் ஜனாதிபதியாக்கியுள்ளார்கள்.

அநுரகுமார ஆட்சியைத் தொடர்வதற்கு நாடாளுமன்றத்தின் பலம் அவசியம். மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் வைத்துக்கொண்டு



27 ஆம் பக்கம் பார்க்க...



# உள்ளத்தின் குரல்

**இந்தப் புத்தகத்தை உங்களுக்கு அறிமுகம் செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.**

**"உலகத்து செல்வங்கள் எங்களது விருப்பங்களை பூர்த்தி செய்யலாம். ஆனால் உள்ளத்தின் செல்வம் தான் எங்களது தேவைகளை பூர்த்தி செய்கின்றது."**

பிரேம் ராவத்
எழுத்தாளர் மற்றும் கின்னஸ் உலக சாதனையாளர்




நியுயோர்க் டைம்ஸின் சிறந்த புத்தக விற்பனை நிரலில் இடம் பெற்ற புத்தகம்

Available on

Ullaththinkural.com
PremRawat.com

## பிரேம் ராவத்

இன்றைய நவீன வாழ்க்கையின் இரைச்சல்கள் மிகவும் மோசமாக இருக்கலாம். அத்துடன் அவை எங்களை சோர்வடையச் செய்வதுடன், சௌகரியமற்ற உணர்வையும் ஏற்படுத்தலாம். இந்த அற்புதமான, விவேகம் நிறைந்த புத்தகத்தில் பிரேம் ராவத் அவர்கள், வெளி சத்தங்களை குறைத்து எவ்வாறு நாங்கள் எங்களது உள்ளத்தின் குரலை கேட்பது என்பது பற்றி கற்பிக்கின்றார். எங்களின் உள்ளே இசைக்கின்ற அந்த மென்மையான அமைதியின் பாடலை கேட்பதற்கு கற்பிக்கின்றார். இதனை நாங்கள் கற்று, நடைமுறைப்படுத்தும் பொழுது, நாங்கள் இந்த உலகத்தின் கொந்தளிப்புகளை எதிர்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

தனது வாழ்நாள் முழுவதையும் அமைதிக்காக அர்ப்பணித்த பிரேம் ராவத் கடந்த 55 வருடங்களுக்கும் மேலாக தனது காலத்தால் அழியாத அமைதியின் செய்தியை நாடுகள், மதம் மற்றும் வாழ்க்கை முறைகளை பொருட்படுத்தாமல் உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு அளித்து வருகின்றார். உள் அமைதி என்பது சாத்தியம் மட்டுமன்றி மனிதர்களின் பிறப்புரிமை என கூறும் அவர், மிகுந்த அர்ப்பணிப்பு, ஞானம் மற்றும் நகைச்சுவையுடன் தனது செய்தியை 100 க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு வழங்கியுள்ளார்.


### எழுத்தாளர்

புகழ்பெற்ற கல்வியாளரும் எழுத்தாளரும் எழுதிய சர்வதேச அளவில் அதிகம் விற்பனையாகும் அமைதி சாத்தியம் என்ற புத்தகம் நமது பிஸியான வாழ்க்கையின் இரைச்சலை எவ்வாறு அமைதிப்படுத்துவது மற்றும் நமது தனித்துவமான உண்மையான குரலைக் கேட்பது எவ்வாறு என்பதையும் சுட்டிக்காட்டுகிறது

எழுத்தாளரின் இதயப்பூர்வமான மற்றும் மென்மையான அணுகுமுறை, "பிரச்சனைகளை தீர்ப்பதற்கான" வழிகளை வழங்க விரும்பும் மற்றைய படைப்பாளர்களில் இருந்து அவரை வேறுபடுத்துகிறது. பிரேமைப் பொறுத்தவரை வாழ்க்கை என்பது பிரச்சனைகளை தீர்ப்பதற்காக தரப்பட்ட ஒன்று அல்ல. ஆனால் ஒவ்வொரு தருணத்திலும் உணரவும் அனுபவிக்கவும் வேண்டிய ஒரு அழகான பயணம் ஆகும். இது சக்திவாய்ந்த, அறிவு பூர்வமான மற்றும் கருத்துக்கள் பொதிந்த கதைகளால் நிரம்பியுள்ளது.

**இந்தப் புத்தகம் உங்களைப்பற்றிய உங்களின் புரிதலை, உங்களின் வாழ்வின் கண்ணோட்டத்தை மாற்றக்கூடியது.**

**ஐரோப்பிய** (Europe)+UK
**தொடர்புகளுக்கு:**




**0049 1590 66 52 650**

# தனித்து நின்ற பெண்





அ.முத்துலிங்கம்
(கனடா)

அந்த உணவகத்துக்குள் நுழைந்தபோது நான் முதலில் பார்த்தது அந்த இளம் பெண்ணைத்தான். இரண்டு நாற்காலிகள் போட்ட சதுரமான மேசையில் தனியாக உட்கார்ந்திருந்தார். விருந்துக்குப் புறப்பட்டதுபோல ஒப்பனை செய்யப்பட்ட முகம். நல்ல ஆடையில் அலங்காரமாக காணப்பட்டார். என்னை இழுத்தது நீண்டுபோன அவருடைய கண்கள்தான். முகத்தில் என்ன உணர்ச்சி என்று சொல்லமுடியவில்லை. மகிழ்ச்சி அல்லது எதிர்பார்ப்பு இரண்டும் கலந்து கூட இருக்கலாம். கபில நிறத் தேகம். இந்தியராகவோ, ஈழத்தவராகவோ கயானா நாட்டுக்காரராகவோ இருக்கலாம். நிச்சயமாக சொல்லத் தெரியவில்லை.

காதலர்கள் பலர் மேசைகளில் எங்களைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். நண்பன் விதம்விதமான உணவு வகைக்கு ஆணை கொடுத்தான். என் கவனம் பெண்மீதுதான். அவளில் அமைதியின்மை தெரிந்தது. செல்பேசியில் ஏதோ எழுதி அனுப்பினார். குறுஞ்செய்தியாக இருக்கலாம். பதில் ஒன்றும் வந்ததாகத் தெரியவில்லை. சிறிது நேரம் பார்த்துவிட்டு டெலிபோனில் யாரையோ அழைத்தார். மறுபக்கத்தில் ஒருவரும் எடுக்கவில்லை. எரிச்சலுடன் செல்பேசியை மேசையில் எறிந்துவிட்டு மறுபடியும் வாசலைப் பார்க்க ஆரம்பித்தார்.

எங்கள் உணவு வந்துவிட்டது. என்னால் அமைதியாக உண்ண முடியவில்லை. அந்தப் பெண்ணையே பார்க்கத் தோன்றியது. பரிசாரகன் மறுபடியும் அவர் முன்னேபோய் நின்றான். 'யாரோ நண்பர் வருவதற்காக காத்திருக்கிறேன். அவர் தொழில் சம்பந்தமான முக்கிய கூட்டத்தில் இருக்கிறார். விரைவில் வந்துவிடுவார்.' அப்படித்தான் ஏதோ சொல்லியிருக்க வேண்டும். மறுபடியும் செல்பேசியை எடுத்து நீண்ட குறுஞ்செய்தி ஒன்று அனுப்பினார். அவருடைய அழகான முகத்தில் பதற்றம் வந்து இறங்கியது. மெனு அட்டையை மேலும் கீழுமாகப் படித்தார். பின்னர் வாசலைப் பார்க்க ஆரம்பித்தார்.

நாங்கள் உணவை முடித்து ஒருமணி நேரம் தாண்டிவிட்டது. உணவு வாசனை நிறைந்திருந்தது. அந்தப் பெண் என்ன நினைத்தாரோ பரிசாரகனை அழைத்து தன் உணவுக்கு ஆணை கொடுத்தார். உணவு வந்தாலும் அதைத் தொடவில்லை. செல்பேசியை எடுத்துப் பார்ப்பதும், வாசலை நோக்குவதுமாக நேரத்தைக் கழித்தார். பின்னர் ஏதோ நினைத்து உணவை உண்ண ஆரம்பித்தார். உணவகம் நிறைந்து ஒரே சத்தமாகிவிட்டது. பக்கத்து மேசையில் இருந்து ஒருவர் வந்து அவருடைய மேசையில் சும்மா இருந்த நாற்காலியை தான் கடன் வாங்கலாமா என்று கேட்டார். அவருக்கு அழுகை வந்தது. 'இல்லை. என் நண்பர் வருகிறார். எடுக்கவேண்டாம்' என்றார். பின்னர் குனிந்தபடியே உணவை கரண்டியால் அள்ளி வாயில் போட்டார். பரிசாரகர் வந்து பணிவாக எதையோ கேட்டபோது இவர் தலையை மட்டும் ஆட்டினார்.

நாங்கள் உணவை முடித்துவிட்டு இனிப்பை சுவைத்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது. இரண்டு சீனப் பரிசாரகிகள் ஒரு தட்டிலே கேக் ஏந்தியபடி நடன அசைவுகளுடன் வந்தனர். கேக்கின்மேல் ஒரு மெழுகுதிரி எரிந்தது. உரத்த குரலில் பிறந்தநாள் வாழ்த்து பாடலை பாடியபடியே மேசையை அணுகினர். எல்லோருடைய பார்வையும் அந்தப் பெண்ணின்மேல் விழுந்தது. இரண்டு பரிசாரகிகளும் மெய்க்காவலர்போல அவருடைய இருபக்கத்திலும் நின்றனர். அவர் மெழுகுதிரியை ஊதி அணைத்துவிட்டு கேக்கை வெட்டினார். பின்னர் தன்கையால் ஒரு சிறு துண்டை எடுத்து தன் வாயினுள் வைத்தார். அவருக்கு ஊட்டவோ, அவர் ஊட்டிவிடவோ ஒருவரும் இல்லை. பரிசாரகிகள் திரும்பிப் போயினர்.

நாங்கள் இனிப்பை முடித்துவிட்டு கோப்பி குடித்துக்கொண்டிருந்தோம். அன்று நண்பர் பேசியது ஒன்றுமே என் நினைவில் இல்லை. பார்வையும் நினைவும் அந்தப் பெண் மேலேயே இருந்தது. மறுபடியும் பெண் ஒருமுறை வாசலைப் பார்த்தார். அவர் முகத்தில் அவமானமும் அளக்க முடியாத சோகமும் கலந்திருந்தது. கைகாட்டி பரிசாரகியை அழைத்து அவள் காதுகளில் என்னவோ சொன்னார். சிறிது நேரத்தில் அவர் சாப்பிட்ட கணக்கை கொண்டுவந்து கொடுத்தபோது கடன் அட்டையை நீட்டினார். அது வேலை செய்யவில்லை. பின்னர் தன் கைப்பையை திறந்து காசை எண்ணிக் கொடுத்தார்.

பரிசாரகர் 'மீதிக் கேக்கை கட்டித் தரவோ?' என்று கேட்க அவர் வேண்டாம் என தலை ஆட்டினார். எழுந்து நின்று கதிரையில் மாட்டியிருந்த மேலாடையை எடுத்து அணிந்தார். கைப்பையை தோளிலே மாட்டினார். பரிசாரகர்கள் வந்து மேசையை சுத்தம் செய்து அடுத்த வாடிக்கையாளருக்கு தயார் செய்தார்கள். அப்பொழுதும் அந்த பெண்ணுக்கு புறப்பட மனம் வரவில்லை. வாசலை பார்த்தபடி அப்படியே தனியாக நின்றார்.

**பெயன் மழை துறந்த**
**புலம்பு உறு கடத்துக்**
**கவை முள் கள்ளிக்காய்விடு**
**கடு நொடி**
**துதை மென் தூவித் துணைப்**
**புறவு ,ரிக்கும்**
**அத்தம் அரிய என்னார்**
**நம் துறந்து**
**பொருள் வயிற் பிரிவாராயின்**
**இவ்வுலகத்துப்**
**பொருளே மன்ற பொருளே**
**அருளே மன்ற ஆரும்**
**இல்லதுவே.**

**குறுந்தொகை – 174**
**(வெண்பூதியார்)**

In the desolate> rain-forsaken
land / The twisted kalli‘s pods
Open with a crackle /
Frightening the mating pigeons
with their close-knit downy
feathers. / He has left me
languishing.
'In search of wealth,' he said. /
He did not mind the risks on the
way.
If it comes to that, then in this
world
wealth has all support / and
love must stand alone.

(பாடலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் சாகித்திய விருதுபெற்ற ம.லெ.தங்கப்பா அவர்கள். இந்தப் பாடலை நினைக்கும் போதெல்லாம் மேலாடை நுனியை கழுத்துடன் சேர்த்து பிடித்துக்கொண்டு எழுந்து தனியாக நின்ற இந்தப் பெண்ணின் நினைவு மனதில் வந்து போகும்.)

**நன்றி.தமிழர் தகவல் (கனடா)**





அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்


Luckyfly
நீங்கள் விரும்பிய நாட்களில் இலங்கை
சுற்றுலா செல்ல டிக்கெட் வசதி செய்து தருகிறோம்...
it's time to
TRAVEL
AND EXPLORE THE WORLD
SRI LANKA
SPECIAL TOUR
குடும்பத்துடன்
இன்ப சுற்றுலா
Travel
World
Explore your adventure with us
ஸ்ரீலங்கா
சென்றுவர குறைந்த
விலையில்
மகிழ்ச்சியாக செல்ல...
LUCKYFLY இணையதளத்தின்
மூலமாக உங்கள் விருப்பம் போல்
பயணம் இடத்தை
நீங்களே தேர்ந்தெடுக்கும் வசதியுடன்...
தமிழர்களின்
பாரம் பரிய உணவு வகைகள்,
தங்குமிடம், வாகன ஒழுங்குகள்,
இலங்கை முழுவதும் பார்க்க
கூடிய சுற்றுலா இடங்கள்
அனைத்தும் சிறந்த முறையில்...
இன்றே அழையுங்கள்!
info@lucky-fly.de
www.lmtourslk.com
0234 2399032
0179 14 84892
COLOMBO TO
JAFFNA
49€
TRANSPORT
CHARGES



# புட்டினின் போர்க்கால வேண்டுதல்!


## காதல் செய்வீர்! வேலை இடைவேளையின் போது உறவு கொள்ளுங்கள்!! குழந்தைகள் பெறுவீர்!!!



ஐங்கரன் விக்கினேஸ்வரா

ரஷ்ய ராணுவத்தை உலகின் இரண்டாவது பெரிய ராணுவமாக விரிவுபடுத்த புட்டின் நடவடிக்கை எடுத்துள்ளார். ரஷ்ய துருப்புக்களின் எண்ணிக்கையை 180,000 ஆல் அதிகரிக்கவும், மொத்தப் படையை 2.38 மில்லியனாக உயர்த்தவும், 1.5 மில்லியன் துணை படையையும் இந்த திட்டம் உருவாக்கிறது. இதன் பிரச்சார யுக்தியாகவே ரஷ்யாவில் பிறப்பு விகிதத்தை அதிகரிக்க, காதல் செய்வீர், மழலை பெருவீர், எனும் புட்டினின் போர்க்கால வேண்டுதல் என்பது வெறுமனே இனத்தொகையை கூட்டுவது மட்டுமன்றி, நீண்ட கால போர்த்திட்டத்திற்கு அமைய ரஷ்ய இராணுவத்தை பலமாக்குவதாகும் என்றே மேற்குலக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், நாட்டின் இன வீழ்ச்சியை எதிர்த்துப் போராட, வேலை இடைவேளையின் போது உடலுறவு கொள்ளுமாறு ரஷ்யர்களை வலியுறுத்தும் கொள்கையை அறிமுகப்படுத்தி உள்ளமை சர்வதேச ரீதியில் சர்ச்சையை உருவாக்கி உள்ளது. ரஷ்யாவின் பிறப்பு விகிதம் குறைந்து வருவதற்கு பதிலளிக்கும் விதமாக, ஒரு அசாதாரண முயற்சியை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தொடங்கியுள்ளார். ரஷ்யர்கள் தங்கள் வேலை இடைவேளையின் போது உடலுறவு கொள்ள ஊக்குவிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். அதுவே தற்போது பலராலும் விமர்சிக்கப்படும், வேலை இடைவேளையின் போது உடலுறவு கொள்ளுமாறு ரஷ்யர்கள் வலியுறுத்தப்படுகிறார்கள் எனும் புட்டினின் அறிக்கையை உலகம் பல்வேறு கோணங்களில் பார்க்கிறது. இந்நடவடிக்கையானது ரஷ்ய நாட்டின் கருவுறுதல் விகிதத்தை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது தற்போது ஒரு பெண்ணுக்கு சுமார் 1.5 குழந்தைகளாக உள்ளது. ரஷ்ய மக்கள்தொகை நிலைத்தன்மைக்கு தேவையான 2.1 விகிதத்தை விட குறைவாகவே உள்ளது. ரஷ்ய மக்களைப் பாதுகாப்பதே எங்கள் மிக உயர்ந்த தேசிய முன்னுரிமை என்று புட்டின் தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் எதிர்கால தலைவிதி நம்மில் எத்தனை பேர் சுகதேகியாக இருப்போம் என்பதைப் பொறுத்தது. இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை எனவும் ரஷ்ய ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். இதனை நிவிர்த்தி செய்யவே, பிறப்பு விகிதத்தை அதிகரிக்க வேலை இடைவேளையின் போது உடலுறவு கொள்ளுமாறு ரஷ்யர்கள் வலியுறுத்தப்பட்டனர் எனும் அறிக்கையால் பலர் வியப்புக்குள்ளாகினர்.




உக்ரைனில் நடந்து வரும் மோதலால் ஒரு மில்லியனுக்கும் அதிகமான இளைய குடிமக்களின் குடியேற்றத்தால் மோசமாகி விட்ட ரஷ்யா மக்கள்தொகை வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ள நிலையில் இந்த வேண்டுதல் வந்துள்ளது.

ரஷ்ய மக்கள்தொகை சரிவை மாற்றியமைப்பது ஒரு முதன்மையான தேசிய முன்னுரிமை என்று புட்டின் தெளிவுபடுத்தியுள்ளார். நாட்டின் எதிர்காலம் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது என்று அறிவித்தார். இதேவேளை ரஷ்ய சுகாதார மந்திரி டாக்டர் யெவ்ஜெனி ஷெஸ்டோபலோவ் புதிய பிறப்பு கொள்கையை ஆதரிக்கிறார். குழந்தைகள் இல்லாததற்கு வேலைப்பளு என்பதனை நிராகரித்தார். வேலை இடைவேளையின் போது குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றார். இந்த புதிய கொள்கையானது பிறப்பு விகிதத்தை அதிகரிப்பதற்கான பரந்த கிரெம்ளின் முயற்சியின் ஒரு பிரச்சார விடயமாகும். மாஸ்கோவில் உள்ள பெண்களுக்கு அவர்களின் இனப்பெருக்க ஆரோக்கியத்தை மதிப்பிடுவதற்கு இலவச கருவுறுதல் சோதனைகள் இப்போது வழங்கப்படுகின்றன. அத்துடன் ரஷ்ய பாராளுமன்ற உறுப்பினர் (MP Tatyana Butskaya) தட்யானா பூட்ஷ்கயா முதலாளிகள் தங்கள் ஊழியர்களின் பிறப்பு விகிதங்களைக் கண்காணித்து அறிக்கையிட வேண்டும் என்று முன்மொழிந்து உள்ளார். இது ஒவ்வொரு ஆண்டும் பிறப்புகளின் எண்ணிக்கையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

செலாயன்பின்ஸக் (Chelyabinsk) பகுதியில், இளம் பெண்களுக்கு அவர்களின் முதல் குழந்தை பிறந்ததற்கு +8,500 பவுண்ட்ஸ் ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது. அதேவேளை கருக்கலைப்புகளை அணுகுவதையும், விவாகரத்து கட்டணத்தை அதிகரிப்பதையும் ரஷ்ய அரசாங்கம் கடினமாக்குகிறது. அத்துடன் அரசியல் பொது நபர்கள் மற்றும் தேவாலயத் தலைவர்கள் அதிக பிறப்பு விகிதங்களை ஒரு தேசிய கடமையாக்க வாதிடுகின்றனர். அன்னா குஸ்னெட்சோவா மற்றும் ஜன்னா ரியாப்ட்சேவா போன்ற ரஷ்ய அரசியல்வாதிகள் பெண்கள் இளம் வயதிலேயே குழந்தைகளைப் பெறத் தொடங்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளனர். ரஷ்ய ராணுவத்தை உலகின் இரண்டாவது பெரிய ராணுவமாக விரிவுபடுத்த புட்டின் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ரஷ்ய ராணுவத்தை பெரிய அளவில் விரிவாக்கம் செய்ய அதிபர் புட்டின்

28 ஆம் பக்கம் பார்க்க...



அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



# இது கதை அல்ல விதை



மணிமேகலை, மாதவி இருவரும் இரட்டைக்குழந்தைகள். அட டா! ஆறே ஆறு நிமிட வித்தியசத்தில் மாதவி தங்கையாகவும், மணிமேகலை அக்கா வாகவும் வந்து பிறந்துவிட்டார்கள்.

ஆனால் எல்லாவற்றிலும் மணி மேகலையின் தாய் கவிதா மாதவி மீது காட்டும் வித்தியாசத்தை மணிமேகலை யால் புரிந்து கொள்ள முடியவில்லை. கடந்த சில மாதங்களாக மணிமேகலை க்கும், மாதவிக்கும் இருந்த பிரச்சினை அன்று இரவு உச்சம் தொட்டது.மணி மேகலை இரவு உணவை தவிர்த்து உறக் கத்திற்கு 7 மணிக்கே சென்றுவிட, தன் அம்மாவிடம் தனக்கு உள்ள பிரச்சினை களை மாங்கு மாங்கு என்று ஒப்படைத்த வண்ணம் இருந்தாள் மாதவி.

அம்மா நீங்கள் அக்காவுக்குத்தான் கடுமையானவேலைகள் கொடுக்கி றீங்களாம். எனக்கு ஏதும் அப்படிக்

## மாதவி (யோமனி)

கடுமையாகக் கொடுப்பது இல்லையாம், நான்உங்கள்செல்லமாம்.என்று எல்லாம் அம்மாவிடம் பொரிந்து தள்ளியபடி இருந்தாள் மாதவி. ஆனால் வீட்டு வேலைகள் என்றால் அது கணவனாக இருந்தாலும்,பிள்ளைகளாக, இருந் தாலும் அவர் அவர் கடமைகளைச் சரியாகச் செய்யவேண்டும் என்பதில் கவிதா உறுதியானவள்.

கவிதாவின் சகோதரர்கள் கவி தாவுக்கு வைத்தபெயர் பொலிஸ். பொலிஸ் இப்போ படுக்கை அறைக்கதவு வரை சென்று 'மணிமேகலை எழும்பி வாறீங்களா' என்று கேட்கவில்லை.' எழும்பி இப்ப வாறீங்கள் எனக் கட்டளை யிட்டா.' இடியப்பம் ஆறப்போகுது வந்து உடன் சாப்பிடவும். அம்மா பொலீசாக, உருக்கொள்ளும்போது உள்ள குரலுக்கு, அப்பா முதல் எல்லோருக்கும் பயம்தான்.

மணிமேகலை மள மள என்று இடியப்பத்தை சம்பலோடு தொட்டுச் சாப்பிட்டாள். இப்ப அம்மா' மெதுவாகச் சாப்பிடுங்கோ சொதியிலும் விடுங்கோ விக்கிப்போடும் 'என்றா. பொலீசாக அம்மாவாக ஆயிரம் சவுக்கடி கொடுத் தாலும், அம்மாவாக ஒரு வார்த்தை பேசினாலே போதும் அக்கணமே உருகிப் போவார்கள். மாதவி ஒன்றும் நடக்கா தது போல் இடியப்பத்தைச் சாப்பிட்டு முடித்தாள்.

இப்போது கவிதா மணிமேகலை யுடனும், மாதவியுடனும் உங்களுடன் ஒரு 5 நிமிடம் கதைக்கவேண்டும் இருங்கோ என்றாள். குரலில் இப்ப இருந்த தொனி அம்மாதான். பொலீசாக இல்லை. ஆனால் எப்ப கதைக்குபோது பொலீசாக மாறலாம் அதற்கு உத்தரவாதம் இல்லை.

வீட்டு வேலைகளில் உங்களுக்கு அக்கா என்பதால் கடினமான வேலைகள் தருவதாகவும், தங்கை மாதவிக்கு அவள் சின்னவள் என்று சுலபமான வேலை கள் தருவதாகவும் யோசித்து உங்கள் மனதை அலட்டிக்கொள்கிறீங்கள். வீடு துப்பரவு செய்தல், கட்டில் விரிப்பு, கோப்பை கழுவி வைத்தல், குப்பை களை வெளியில் உள்ள வாளியில் போடு வது, இதுவெல்லாம் எனது வேலைச் சுமையைக் குறைக்க என்று நீங்கள் செய்வதாக எண்ணவேண்டாம். சுமை என்பது எதுவோ பெண்களுக்கு அதி கம்தான். ஆனால் எந்தப்பெண்ணும் அதனை பெரிதாக கண்டு கொள்வ தில்லை என்பதால் கணவன்மார்கள் கூட அதனை அறிவதில்லை. தொலை க்காட்சி தொடரில் வரும் பட்டிமன்றம், பெண் விடுதலை எல்லாம் முன்னதாகவே எழுதப்பட்ட தீர்ப்புக்குப் பின், ஒப்புக்கு வாதிடும் ஒரு நிகழ்ச்சியாக பல தடவை களில் அமைந்துவிடுகிறது.

உங்களுக்கு மட்டுமல்ல வாரத்தில் ஒரு நாள் அப்பாதானே சமைக்கிறார். அப்பாதானே உடுப்புகள் மினுக்கின்றார். இவை எல்லாம் எல்லோரும் எல்லாம் செய்யவேண்டும். எதிலும் பாகுபாடு என்று இருக்கப்படாது.இது என் தனி ப்பட்ட கருத்து. இதனை உங்களுக்கு நான் திணிப்பதாக எண்ணவேண்டாம். என்னை பொலீஸ்! பொலிஸ்!! என்று அப்பாமுதல் நண்பர்கள் வரை சொல்வது, நினைப்பது யாவும் எனக் குத் தெரியும். அந்த பொலிசுக்குள்ளும் அம்மா உண்டு.

நாளை காலை எழுந்து இந்த மேசையில் பாருங்கள். ஒரு துண்டில் A, B என இருபகுதி இருக்கும். காலையில் யார் முதல் எழும்பி இந்த துண்டைப் பார்க்கிறார்களோ அவர்கள் இந்த A, B இல் எந்த வேலை வேண்டுமானாலும் தெரிவு செய்து செய்யலாம். இனி எதுவா னாலும் அது உங்கள் தேர்வு.

காலை விடிந்தது முதல் வேலையாக மணிமேகலை எழுந்து B. பகுதியில் இருந்த வேலையை முடித்தாள். பின் எழுந்த மாதவி A. பகுதி வேலையை முடித்தாள்.



தங்கை மாதவி B பகுதி வேலையை வாசித்து பார்த்தாள், உண்மையில் B பகுதியே A ப்பகுதியை விடக் கடினமாக இருந்தது. அவளால் அக்கா மணிமேக லையை இப்போ அக்காவாக பார்க்க முடியவில்லை. தீர்மானம் எடுக்கும் உரிமையை அவள் எடுத்ததுமே அவள் அம்மாவாகிவிட்டாள்.

கவிதா காலை எழுந்து பார்த்தபோது வீட்டு வேலைகள் யாவும் பிள்ளைகள் வடிவாக செய்து முடித்து இருந்தார்கள். பிள்ளைகள் கல்லூரிக்கு புறப்படுகி ன்றார்கள். கவிதாவும் புறப்படுகின்றாள். நாளை காலை அவர்களுக்கான வேலை க்குரிய துண்டை அவள் எழுதப்போவ தில்லை. அதற்கான அவசியமும் தாய்க்கு இல்லை.

மறுநாள்மீண்டும்விடிந்தது,மேசையில் A, யும் இல்லை Bயும் இல்லை. ஒரே வரியில் கண்ணதாசனின் பாடல் வரி ஒன்று எழுதப்பட்டு இருந்தது. 'நமக் கென்று பூமியிலே கடமைகள் உண்டு அதை நமக்காக நம் கையால் செய்வது நன்று' என்று இருந்தது.

இன்று கவிதாவும் இல்லை காகிதமும் இல்லை. ஆனால் பிள்ளைகள் வாழ்வு அர்த்தம் உள்ள கவிதையானது. இது கதை அல்ல விதை.

(AI படங்கள் பூங்கோதை)



அன்னை மடியில்
02-04-1967

இறைவன் அடியில்
12-09-2024

நாட்டிய விசாரதா, நாட்டிய வாணி
## திருமதி கவிதா சிவகணேசன்

யாழ்ப்பாணம் குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும் பேர்கன், நோர்வேயை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி கவிதா சிவகணேசன் அவர்கள், 12.09.2024 வியாழக்கிழமை நோர்வே பேர்கனில் இறைவனடி சேர்ந்தார்.

## "நாட்டிய விஷாரதா" கவிதா சிவகணேசன் மறைவிற்கு வெற்றிமணியின் இதய அஞ்சலி

Dr. சிவ கணேசன் அவர்களின் அன்பு மனைவியும். Dr. மாளவி. Dr. சாரங்கன். ஷாமளி. வர்ணவி அவர்களின் அன்புத்தாயாரும்.சஞ்சீவ். அனிக்சன். ஆகியோரின் பாசமிகு மாமியாரும். வீரன். அதீரன் ஆகியோரின் அன்பான அம்மம்மா வும். குரும்பசிட்டி அமரர் அ. குகதாசன்.(கொழும்பு ஸ்ரூடியோ யாழ்ப்பாணம்) சாங்கீதபூசனம் அமரர் நேசம்மா குகதாசன் அவர்களின் அன்பு மகளும். குகநேசன் (கண்ணன்) (லண்டன்) அவர்களின் அன்பு அக்காவும் . ஷோபனா குகதாசனின் அன்பு தங்கையும் ஆவார். இவர் காலம் சென்ற க. நாகலிங்கம் (முன்னாள் மகாஜனாக்கல்லூரி கனிஷ்ட பிரிவு தலைமை ஆசிரியர்) செல்லம்மா தம்பதிகளின் அன்புப்பேத்தியுமாவர். இவர் காலஞ்சென்ற தில்லையம்பலம் இலட்சுமிபிள்ளை அவர்களின் அன்பு மருமகளும் ஆவர். பரதக்கலையில் அதி ஈடுபாடு கொண்டவர். அன்னை பூபதி நடனப்பளியில் பல நடன மணிகளை உருவாக்கியவர். தாயகத்தில் போராட்டம் நடைபெற்ற வேளை.கணவன் Dr. சிவ கணேசன் அவர்களுக்கு களத்தில் மருத்துவ உதவிகளை வழங்கிட ஒத்தாசை புரிந்தவர். சங்கீதம் பரதம் என கலைகள் மேல் இளவயது முதல் ஆறாத பற்றுடையவர். கடமை கட்டுபாடு திட்டமிடல் என்பவற்றில் சிறந்து விளங்கிய நாட்டியக்கலைஞர் கவிதா சிவ கணேசன் அவர்களுக்கு வெற்றிமணி யின் இதய அஞ்சலி.

அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



# மேற்கத்திய மருந்தும் நாமும்



நாட்டியக் கலாநிதி
**கார்த்திகா கணேசர்**
(அவுஸ்திரேலியா)

மருந்து தயாரிக்கும் கம்பெனிகள் மிகப் பெரும் பணத்தைச் சம்பாதிக்கும் உலகளாவிய நிறுவனங்கள். மேற்கத்திய வைத்தியம் கற்ற டாக்டர்கள் இந்த மருந்துகளை மட்டுமே அறிந்தவர்கள். இவர்களால் இந்த மருந்துகள் தாராளமாக விலைப்படுகிறது. இவ்வாறு நான் கூறுவதால் மேற்கத்திய வைத்திய முறையான Allopathy வைத்தியத்தை நான் குறைத்து மதிப்பிடவில்லை, அதன் முக்கியத்துவத்தை நாம் அறிவோம்.

அதே சமயம், எமது ஆயுர்வேதம், சித்த வைத்தியம் போன்றவற்றை நாம் முற்றாகப் புறக்கணித்துவிட முடியாது. இவர்கள் மருந்துகளை தாமே மூலிகைகள் கொண்டு தயாரிப்பவர்கள். நோய் தீர்க்க வல்லவை. இவை எல்லாம் நாம் அறியாததா? நமது குடும்ப வைத்தியர் கூறுவர், வைத்தியரிடம் போய், ‘நோயை மாற்றி விடுங்கோ‘ எனக் கேட்கக் கூடாதாம். ஏனெனில் ஒரு நோயிலிருந்து பிறிதொரு நோய்க்கு அவர் மாற்றி விடுவாராம், அதனால் ‘நோயைக் குணப்படுத்தி விடுங்கோ‘ எனக் கேட்க வேண்டுமாம். இது வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் ஆழ்ந்த கருத்து உடையது.

மேற்கத்திய வைத்திய மருந்துகளோ சில பாதக விளைவுகளைக் கொண்டுவரக் கூடியவை. அதுதான் பக்க விளைவு ளனைந நககநஉவ என்பார்கள். இந்த விஷயத்தில் வைத்தியரின் மருந்தை உண்ணும் வைத்தியமும், நோயாளியும் கவனமாக இருக்க வேண்டும். இவை பற்றி எல்லாம் கூற சில சமயங்களில் வைத்தியருக்கு நேரம் இருக்காது. மருந்து வாங்கும்போது கெமிஸ்ட் இடம் கேட்டால் அவர்கள் விவரமாகக் கூறுவார்கள். இது அவர்கள் கடமையும் கூட. அது மட்டுமல்ல, மருந்தின் குணங்கள் யாவற்றையும், எவ்வாறான நிலையில் இருக்கும் நோயாளிகள் எதை அருந்தக் கூடாது என்ற அத்தனையையும் விவரமாக ஒரு கடதாசியில் அடித்துத் தருவார்கள். நீங்கள் வீட்டில் வைத்துப் படித்து விவரமாக அறிந்து கொள்ளலாம்.

வைத்தியர் எழுதிய மருந்து சரியில்லை என கெமிஸ்ட் எண்ணினால் அதை அவர் நோயாளிக்குக் கொடுக்காது மேலும் வைத்தியரிடம் விசாரிக்கும் தகுதி அவருக்கு உண்டு. டாக்டரும் கெமிஸ்ட்டும் றெயில் வண்டியும் தண்டவாளமும் போன்று இயங்க வேண்டியவர்கள். எனது மாணவி ஒருத்தி பல்கலைக் கழகத்தில் medical science படித்து வருகிறாள். ஏதோ பேச்சுவாக்கில் நான் கூறினேன், ‘நோய்க்கான மருந்துகளை மருந்து கொம்பனிகளில் இதற்கென பயிற்றப்பட்ட chemistry படித்தவர்களே தயாரிக்கிறார்கள். நாம் கண்டறிந்த formula-it மருந்தாக்கி பல மிருகங்களில் பரீட்சித்த பின்தான் மனிதருக்குக் கொடுத்துப் பார்த்து நோய் குணமானால், அந்த மருந்து தயாரித்து விற்பனைக்கு வரும். இத்தனையும் ஐந்து வருடங்களுக்கு மேல் வரை பரீட்சார்த்த நிலையில் இருந்து வெளிவரும். அதன் பின் மருந்து கம்பெனிகள் டாக்டரிடம் சாம்பிள் மருந்துகளையும் அவற்றின் குணங்களையும் துண்டு பிரசாரமாக அடித்து அனுப்புவார்கள். இதைப் படித்த டாக்டர்கள் நோயாளிக்குக் கொடுப்பார்கள்‘ என்றேன். டாக்டருக்கு மருந்து தயாரிப்புப் பற்றி எதுவும் தெரியாதா என்று அவள் திகைத்தாள். இது அவளுக்கு ஏதோ புதிய செய்தியே.

தற்போது இந்தியாவிலேயே மிகப்பெரிய அளவில் மேற்கத்திய வைத்தியமும், ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யுனானி வைத்தியம் போன்ற பாரம்பரிய முறைகளையும் இணைத்து வைத்தியம் சில இடங்களில் நடைபெறுகிறது. இதை மத்திய அரசே நடத்தி வருகிறது. நமது நீண்ட நாள் நண்பர் டாக்டர் தெய்வநாயகம் தலைமையில் நடைபெற்று வந்தது. இப்பொழுது அவர் காலமாகி விட்டார். ஆனால் இந்த சேவை நடைபெறுகிறது. இவர் Edinburgh Medical College-இல் சுவாசம் சம்பந்தமான நிபுணத்துவம் பெற்றவர். உலகளாவிய ரீதியில் மதிக்கப்பட்டவர்.

மூலிகைகளின் மகிமையை மேற்கத்திய நிபுணர்கள் என்றோ அறிந்திருந்தார்கள். எனது கணவர் 1969-இல் Boots Drug Company என்ற மருந்து தயாரிக்கும் கம்பெனியில் மருந்து தயாரிப்பு பற்றிய பயிற்சி பெற்றவர். இந்த காலகட்டத்திலே அவர் எழுதிய யுசை ஆயடை தபாலில் எமது வீட்டு முகவரி எழுதியிருந்தார். நாம் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்கள். முகவரியில் திருநெல்வேலி என எழுதப்பட்டிருந்ததை நோட்டமிட்ட இவரது தலைமை ஆய்வாளர், Are you from Thirunelvely? என வியப்பாகக் கேட்டாராம். என் கணவரோ சாதாரணமாக ஆமா என்றாராம். அவரோ, We import Thirunelvely Sana. It is a wonderful medical plant என்றாராம். எனது கணவர் ஆராய்ந்தபோது அறிந்தது, இது எமது மூலிகை ஆன சூரத் தாமரையே. பார்த்தீர்களா 50 வருடங்களுக்கு முன்பே உலகளாவிய மருந்தைத் தயாரித்து விற்பனை செய்யும் Boots Drugs Company நமது மூலிகைகளைப் பயன்படுத்தி உள்ளது.



எமது மலையாளத் தோழியின் தந்தையர் மேற்கு நாடுகளுக்கு மூலிகைகளை ஏற்றுமதி செய்யும் தொழில் புரிபவர். இதை நான் 1987-இல் அறிவேன்.

இன்றோ நிலைமை மாறி மேற்கத்திய மருந்து கம்பெனிகள் இந்தியாவிலேயே நிலம் வாங்கி அதில் மூலிகைகளைப் பயிரிட்டு வருகிறார்கள். அதில் வேலை பார்ப்பவர்கள் இந்தியரே. இவ்வாறு அவர்கள் மேற்கத்திய வைத்தியர்களையும் உருவாக்கி அவர்கள் மூலம் எமது மூலிகைகளைத் தயாரித்து விற்பனை செய்ய, நாமோ மேற்கே எதற்கும் மேலானது என்ற நம்பிக்கையை வளர்க்கும் அடிமை மனப்பாங்கை வளர்த்து வருகிறோம்.வாழ்க வளமுடன்!




# தலைகீழாக வைக்கப்பட்டிருந்த ஊர்ப் பெயர்ப் பலகைகள்








கவிதா லட்சுமி (நோர்வே)

இந்த ஆண்டின் நடைப்பயணம் சென்ற ஆண்டைப் போலில்லாமல், மிகவும் ஒரு சவாலான யாத்திரையாக அமைந்தது. இரண்டு வாரமாக 350 கி.மி தூரத்தை நடந்திருக்கின்றேன்.


பிரான்ஸ் நாட்டின் ஒரு பகுதியில் இருந்து சன்டியாகோ தி கொம்பஸ்தெல்லா நோக்கி பயணிப்பதே இலக்கு.. நாளும் ஒரு மலையைக் கடந்தாக வேண்டும். ஒவ்வொரு மலைத் தாழ்வாரங்களிலும் ஒரு குட்டிக் கிராமம் எமக்காகக் காத்திருந்தது. சில வேளைகளில் இரண்டோ மூன்றோ மலைகளைத் தாண்டி, மூன்று கிராமங்களைத் தாண்டியும் பயணம் நீண்டது.

எனக்கு நடை பிடிக்கும். அதைவிட கடலும் காடும் ஊர்களும் வயல்களும் என்று இந்த இயற்கையோடும், மண்ணோடும் இயைந்த வண்ணம் நடக்கப் பிடிக்கும். ஆனால் இந்த மலை ஏற்றங்களோ எனக்குக் கொஞ்சமும் ஒத்து வராதவை. அப்பப்போ நோர்வேயின் பிரசித்தி பெற்ற மலைகளில் (அதுவும் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கித்தான்) ஏறி இருக்கிறேனே தவிர, இப்படியாக ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று என்று மலைகளை கடக்கும் வித்தையை நான் பயின்று இருக்கவில்லை. ஆனாலும் ஒரு முறை ஏறிவிட்டால் பிறகு இறக்கம்தானே என்ற எண்ணம் கொடுத்த நம்பிக்கையோடு தினமும் எனது நடைப் பயணம் தொடர்ந்து கொண்டே இருந்தது. ஒரு விடயத்தை எடுத்து விட்டால் அதை முடிக்க வேண்டும் என்ற எனது குணமும் இதற்கு உதவி புரிந்தது.

கடந்து வந்த ஒவ்வொரு ஊரும் அத்தனை அழகு. இயற்கையோடு இணைந்து கற்களை அடுக்கிச் சுவர் எழுப்பிய வீடுகள். வண்ணப் பூச்சுகள் இல்லை. சுவர்களின் நெடுக கொடிகளும் வேர்களும் படர்ந்து கிடக்கும். அதற்கேயான குட்டித் தோட்டங்கள்,பழ மரங்கள், பூஞ்செடிகள். வான்கோவின் வர்ணங்களிற் கண்ட அத்தனை பூக்களும் அதே வளைவுகளோடு கண்களுக்குப் புலப்பட்டன.

ஆனாலும் இந்த ஊர்களில் மக்களைச் சந்திப்பது மிக அரிது. ஒவ்வொரு ஊரும் தொடங்கும் போதே ஒரு பெரும் சவக் காலையுடன் ஆரம்பிக்கும். தேவாலயத்தின் மணியோசை அடிக்கும். தெருவெங்கும் மயான அமைதி. தூரத்தில் ஒரு உணவகமோ ஒரு விடுதியோ சில ஆட்களுடன் உயிர் பெற்று இருக்கும்.

இந்த பயணத்தில் தெருக்களில் கிராமங்களில் மலை அடிவாரங்களில் இளைஞர்களை நான் கண்டது மிக அரிது. இக்கிராமத்து வாழ்க்கையை நகரத்து மனிதர்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்ட வண்ணம் நானும் நடந்து கொண்டிருந்தேன். இந்த மனிதர்களிடம் எந்தப் படபடப்பும் இல்லை, எந்த அவசரமும் இல்லை, பதட்டம் நிறைந்த முகங்கள் இல்லை. அவர்களுடைய



கருப்பு வெள்ளை
நிழற்படங்கள் எப்பவும் அழகு ...
அதைவிட அழகு சொந்தக்காலில்
நிற்கமுயற்சிக்கும் முதுமை

வாழ்க்கையை போலவே முகங்களும் இயல்பாய் நிதானமாய் இருந்தன. அந்தரங்க அமைப்புக்கள்

ஒரு ஊருக்குள் சென்ற போது திடீரென்று ஒரு விடயம் வினோதமாகப் பட்டது. ஒரு ஊரின் எல்லையில், ஊர்ப் பெயர்ப்பலகை தலைகீழாக எழுதி வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பெயர்ப் பலகையைச் சுற்றிப் பூக்கள், செடிகளின் அலங்கரிப்பு வேறு. இலங்கையில் தமிழைத் தாறுமாறான எழுத்துப் பிழை, பொருட்பிழைகளோடு எழுதும் பொறுப்பற்ற நிர்வாகங்களைப் போல இங்கும் இருக்கிறார்கள் போல என்று எண்ணிக் கடந்துவிட்டேன்.

மறுநாள், மீண்டும் அந்த ஊரைக் கடந்து சென்ற போதும், அந்த ஊரின் பெயர் தலைகீழாக மாற்றப்பட்டு அந்த ஊர் முடிந்துவிட்டது என்பதற்கான குறியீடாக பெயர் மீது ஒரு கோடும் இடப்பட்டுடிருந்தது. அப்போதுதான் இதில் ஏதோ ஒரு விடயம் இருக்குமோ என்று எனக்குத் தோன்றியது. மறுநாளும் மற்றுமொரு ஊரின் பெயரும் இப்படியாகவே தலைகீழாக மாற்றப்பட்டிருந்தது. இது என்னடா ஒரே வினோதமாக இருக்கின்றதே என்ற எண்ணத்தில் யாரையாவது இதைப்பற்றிக் கேட்டு விட வேண்டும் என்று மனம் விரும்பியது.

அப்போது அந்த கிராமத்தில் வாழும் ஒரு மனிதருடன் பேச்சுக் கொடுத்தேன். இக்கிராமங்களில் வாழும் மனிதர்கள் யாரும் ஆங்கிலத்தைக் கேட்கவோ பேசவோ முனையவில்லை. அவர்கள் அவர்களது மொழியே போதும் என்று இருக்கும் மனிதர்களாக உள்ளனர். நம் சமூகத்தைப் போல ஆங்கிலத்தை ஒரு பெரும் அறிவாக கருதும் சமூகமல்ல இது.

நான் பேச்சு கொடுத்த அந்த மனிதரும் தட்டுத் தடுமாறி ஆங்கிலம் பேசினார். ஆனாலும் நாங்கள் பேசிக் கொண்டோம்.

இந்த ஊரின் பெயர்களை ஏன் தலைகீழாக எழுதி இருக்கிறார்கள் என்று பெரும் ஆர்வத்தோடு கேட்டேன். அதற்கு அந்த மனிதர் தந்த பதிலில் ஊர் மக்களின் மேல் பெரும் மதிப்பு உண்டாயிற்று.

அந்த ஊரில் உள்ள மக்கள் இப்போது பெருகிவரும் இயந்திரமயமாக்கலை விரும்பவில்லை என்றும், மனிதர்களின் உழைப்பைப் பறித்துக் கொள்ளும் இயந்திரங்களைக் கொண்டு வரும் அரசை எதிர்க்கிறோம் என்பதை காட்டுவதற்காகவே இந்த பெயர்ப் பலகைகள் தலைகீழாக மாட்டி வைக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்ல எங்கள் வேலைகளை, நிலங்களை, விவசாயங்களை, நாங்கள் தலைகீழாய் நின்றேனும் செய்து முடிப்போம் என்பதை அரசுக்கு எடுத்துக்காட்டும் ஒரு குறியீட்டு எதிர்ப்பு வடிவம்–தான் தலைகீழாகப்

28 ஆம் பக்கம் பார்க்க...

டொட்மூண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்
சனிக்கிழமை 15.00– 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)
கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag
தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3
தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00–17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen
யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 –19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும் யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்





# அப்பாமார் அடங்கத் தொடங்க அம்மாமார் ஆட்சியைக் கைப்பற்றுவர்

"அது உன்டை அப்பாவுக்கு முறைக்கு அக்காவும் அத்தானும் கீழ போய் ஆசீர்வாதம் வாங்கு" எண்டு மேடையில சொல்லி மாமி அனுப்ப சிவாவும் மேடையால கீழ இறங்கிப் போய் குனிய, சிவான்டை மனிசி குனியேலாமக் குனிய, "நல்லா இரு அப்பு, நல்லா இரு மோனை" எண்டு ஆசீர்வதிச்சிட்டு, பொம்பிளையின்டை கையில நளெநடழிந ஐ திணிச்சிட்டு, இனி எப்பிடி ஏறி சாப்பிடப் போறது எண்டு ரெண்டு பேரும் யோசிக்கத் தொடங்கிச்சினம். ஒரு காலம் இவை இல்லாம நல்லது கெட்டது ஒண்டும் நடக்காது ஆனா இப்ப அவை ரெண்டுபேரும் வேற ஆற்றையும் உதவி இல்லாம வீட்டை விட்டு வெளீல போய் வரக்கூட ஏலாது.



"வாருமன் சாப்பிடுவம்" எண்டு அவர் சொல்ல, "கொஞ்சம் பொறுங்கோ என்ன இளந்தாரியே ஏறிப்போக" எண்டு சொல்லி அவ உதவிக்கு ஆரும் இருக்கினமா எண்டு பாக்கத்தொடங்கினா. வயசு போகப் போக அப்பாக்கள் அமைதியாவதும் அம்மாக்களின் புறுபுறுப்பது கூடுவதும் இயற்கை. ஒரு வயதுக்கு (முதிர்ச்சிக்கு) அப்பால் ஆண்களின் தேவைகள் குறைவடையத் தொடங்கி விடும். அவன் ஞானத்திற்கு முன்னைய பற்றற்ற நிலைக்கு வந்து விடுவான். மனைவிக்கு இன்னும் கூடப் பணிந்து போவான், எங்கயாவது எருமைக் கடா வந்தால் எமனுடன் ஏறிப் போக யோசிக்க மாட்டான். ஆனால் பெண்கள் அப்படி இல்லை. பெண்கள் சந்தர்ப்பம் பாத்து சாதிப்பதில் வல்லவர்கள். அப்பாமார் அடங்கத் தொடங்க அம்மாமார் ஆட்சியை கைப்பற்றி அந்தாள் தனக்கு முந்தி செய்த பழி பாவங்களை மறக்காமல் இப்பிறப்பிலேயே தண்டனை வழங்குவார்கள். அரசன் அன்றும்,தெய்வம் நின்றும்,மனிசி இருந்தும் செய்வார்கள்.

" அவருக்கு இப்ப மறதி வந்திட்டு, மருந்து போட்டதுகூட ஞாபகம் இருக்காது" எண்டுதான் ஆரும் வந்தால் அவரைப்பபத்தி அறிமுகம் தொடங்கும் . பிறந்த நாளில இருந்து அடக்கப்பட்டதன் தாக்கமும், விரும்பினதை செய்ய முடியாமப் போன ஏக்கமும், வந்த இடத்தில இருக்கிற அடக்குமுறையும் சேந்து பொம்பிளைகளில அப்பப்ப வெளிப்படும். பொம்பிளைகளுக்கு அதிலேம் அம்மாக்களிற்கு அதிகாரம் செய்ய விருப்பம். பெண்கள் நல்ல நிர்வாகிகள் ஆனால் என்ன தங்களுக்கு தேவையான எல்லாத்தையும் மட்டுமே, அதுவும்,அதிகார நிர்வாகமே செய்வார்கள். இது எல்லாம் வீட்டுக்குள்ள தான், வெளீல வந்தால் அந்தாளை கவனமாக் கையை பிடிச்சி கூட்டிக் கொண்டு போவினம். என்ன அடிக்கடி தாங்கள் தான் சரி நீர் பிழை எண்ட நச்சரிப்பும் இருக்கும். கடைசிக் காலத்தில பெத்தவைக்கு பெரிய பிரச்சினை சொத்துப் பிரச்சினை. சரி வயசு போட்டுது பிள்ளைகளுக்கு இருக்கிறதை குடுப்பம் எண்டா, சொத்தைப் பிரிச்சுக் குடுக்கிறதுக்கு அம்மாமருக்கு விருப்பம் இருக்காது. கடைசிவரை அதைத் தாங்கள் தான் ஆளோணும் எண்ட ஆசை இருக்கும். அதோட சிலவேளை ஒரு வியாக்கியானம் வைச்சு ஏற்றத்தாழ்வோட பிரிச்சுக் குடுப்பினம், "ஏனப்பா எல்லாத்துக்கும் சமனா இப்பவே குடுமன்" எண்டு அப்பாமார் சொன்னாலும்,"உங்களுக்கு ஒண்டும் விளங்காது சும்மா இருங்கோ" எண்டு அதட்ட அவையும் அடங்கீடுவினம்.



**Dr.T. கோபிசங்கர்**
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

இன்றி அமையாத எங்கடை கூட்டு வாழ்க்கை கொஞ்சம் கொஞ்சமா இல்லாமல் போக, இப்ப என்னெண்டால் மகள் கலியாணம் கட்டி மாப்பிளையோட வீட்ட வந்து இருக்க, தனிக்குடி த்ததனம் போக விரும்புவது அநேகம் பெற்றோர் ஆகத் தான் இருக்கும். சீதனம் குடுத்

திட்டம் எண்டதால, கொஞ்சம் உரிமையில்லாத் தன்மையை உணருவது தான் காரணமோ தெரியேல்லை. எங்கடை சனத்தில கட்டினாப் பிறகு வாற சண்டையில அடிக்கடி வாறது மகள் மாரு க்கு அம்மாமாரோட வாற சண்டை தான். மாமி-மருமகள் இப்படித் தான் எண்டு முதலே முடிவெடுக்கிற தால அது பெரிய சண்டையா இருக்காது.

அதோட எல்லாரும் வீட்டோட மாப்பிளை எண்டதால மாமியார்-மருமோள் நேரடிச் சண்டை இருக்காது. மாமியார் மருமோள் சண்டை நேர நடக்காட்டியும் நாசூக்கா சொல்லிற கதைகளில மாட்டுப் படிறது மனிசன்மார் தான். கண்டோன்ன ரெண்டு பேரும் கதைக்கிறதைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம். ஆனாலும் அடுத்த மாசம் கோல் ஒண்டு வரும்." என்ன மாதிரி அரிசி மா அனுப்பவே"" வேணாம் மாமி""ஏன் போன கிழமை ரெண்டு கிலோ தானே அனுப்பினான், எங்களுக்கு ரெண்டு பேருக்கே கிழமைக்கு 4 கிலோ வேணும்""அதே அப்பிடியே கிடக்கு" ஆஆஆஆஆஆ.."அவன் சரியா மெலிஞ்சு போனான் வடிவாச் சமைச்சுக்குடும்" எண்ட இழுவையோட கோல் முடியும்.

உடன மகனுக்கு கோல் ."என்னடா வடிவாச் சாப்பிடிறியோ, உடம்பு கவனம், கண்டபடி வெளீல சாப்பிடாத" எல்லாத்துக்கும் ஓமெண்டப் பழகின மகன் இதுக்கும் ஓம் எண்டு போனை வைக்க மனிசீன்டை கோல் "என்ன உங்கடை அம்மா உளவு பாக்கிறாவே, நான் எவ்வளவு சமைக்கிறன் எண்டு", நான் ரெண்டையும் உடயளள க்கு ஏத்தி இறக்கவே நேரம் இல்லை இதுக்குள்ள அரிசி மா ஏன் முடியேல்லை, மிளகாய்த்தூள் எவ்வளவு இருக்கு எண்ட

23 ஆம் பக்கம் பார்க்க...

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை

Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!

உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.

தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974
www.Nandys.de | email: info@nandys.de

அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்


நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்
Jaffna Bazar Jewellery
தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்
2024ம் ஆண்டின் புதிய வரவு! புத்தம் புது அழகிய டிசைன்களில் தங்க நகைகள்
பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்
திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.
Branch:
Jaffna basar.
Taunus Str 31,
60329 Frankfurt Main
தித்திக்கும் தீபத் திருநாள் வாழ்த்துக்கள்
உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்
KADHIR
Lalla
Basmati Rice
Jaffna Bazar
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425
அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

# நித்தமுத்த சுத்தபுத்த சத்தபெரும் காளி பதம்!

**சக்தியால் உலகம் வாழ்கிறது**
**நாம் வாழ்வை விரும்புகிறோம்**
**ஆதலால்,**
**நாம் சக்தியை வேண்டுகிறோம்.**

சக்தி : நல்ல வல்லெழுத்துச் சேர்ந்த மொழி. விக்கிரமாதித்தனும் காளி தாசனும் வணங்கிய தெய்வம். " உலகத்தார் இந்தப் பராசக்தியை நல்ல மழையருள் புரியும் சரத்காலத்தின் முதல் ஒன்பது இரவும் வணங்கிப் பூஜைகள் செய்யவேண்டும்." என்பது பூர்வீகர் ஏற்பாடு. மிகப் பயனுடைய காரியம் . மேலான வழி . இவ்வாறு நவராத்திரியின் மகிமை பற்றி பாரதியார் அவரது கட்டுரையில் குறிப்பிட்டுருப்பார்.

**அன்புவழிவாகி நிற்பள்,**
**துன்பெலாம் அவள் இழைப்பள்,**
**ஆக்க நீக்கம் யாவும்**
**அவள் செய்கை – இதை**
**ஆய்ந்து, உணர்ந்தவர்க்கு உண்டு**
**உய்கை – அவள்**
**ஆதியாய், அநாதியாய், அகண்ட**
**அறிவாவள், உன்றன்,**
**அறிவும் அவள்**
**மேனியிலோர் சைகை – அவள்**
**ஆனந்தத்தின் எல்லையற்ற**
**பொய்கை.**
**இன்ப வழிவாகி நிற்பள், துன்பெலாம்**
**அவள் இழைப்பள்,**
**இஃதெலாம் அவள்**
**புரியும் மாயை – அவள்**
**ஏதுமற்ற மெய்ப்பொருளின் சாயை**
**மேலுமாகி, கீழுமாகி, வேறுள**
**திசையுமாகி,**
**விண்ணும் மண்ணும்**
**ஆன சக்திவெள்ளம் – இந்த**
**விந்தையெல்லாம்,**
**ஆங்கது செய் கள்ளம் – பழ**
**வேதமாய், அதன் முன்னுள்ள**
**நாதமாய், விளங்குமிந்த,**
**வீர சக்தி வெள்ளம் வீழும் பள்ளம் –**
**ஆக**
**வேண்டும், நித்தம்**
**என்றன் ஏழை உள்ளம்.**

நூற்றாண்டுகளுக்கு முன் ஆற்றிய கவியெல்லாம், இன்றும் மங்காது ஜொலிப்பதற்கு, மெய்ப்பொருள் காட்டி நிற்கும் அவற்றின் தன்மையே முதன்மை வகிக்கிறது. பரம ஞானம் என்றால் என்ன ? என்ற சமுத்திரக் கேள்விக்கு, சுலபமாய் பதில் தர பாரதி என்னும் சித்தனால் தான் முடியும்.



**ஆதியாம் சிவனும்,**
**அவன் சோதியான சக்தியும் தான்**
**அங்கும் இங்கும்**
**எங்கும் உளவாகும் – ஒன்றே**
**ஆகினால், உலகனைத்தும்**
**சாகும் – அவை**
**அன்றியோர் பொருளுமில்லை,**
**அன்றி ஒன்றுமில்லை, இதை,**
**ஆய்ந்திடில் துயரமெல்லாம்**
**போகும் – இந்த**
**அறிவுதான் பரம ஞானம் ஆகும்.**

ஆஹா ! இவ்வரிகளை உணர்ந்தோத உவகை நீர் விழிகளில் பொங்கி உளவீரம் வந்து சேர்கிறது. தவம், கல்வி, தெய்வத்தை சரண்புகுதல் என்பவற்றை எப்போதும் செய்ய முடியாதவர் நவராத்ரி ஒன்பது தினங்களாவது செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. நவராத்ரி பூஜையின் பொருள் மிகவும் தெளிந்தது என்று கூறும் பாரதியாரால், நவராத்ரி தேவியர் மூவர் மீதும் பாடப்பட்ட மந்திரத் திரவிய கவிகளை நவராத்ரி 9 நாட்களும் மனனம் செய்து சேவித்தாலே, மாபயன் கிட்டும். ஐயமில்லை.

சகலமும் சக்தி என்று ஆகும் போது சஞ்சலம் ஏதுக்கு? அவள் தாய்.வேண்டியன அனைத் தும் தருவாள்.அவள் ஸம்ஹாரி.அறியாமை மிகுந்து எழும் அநீதிகளை அடியோடு அறுக்கவல்லவள். அவள் பேரழகி. நமக்கு உளஎழில் ஈவாள். அவள் எல்லையற்றவள். நம் அகந்தனில் நீள் விசும்பு காட்டி நிற்பாள்.

சொல்லிலிலடங்கா சுந்தரியை, சொல்லிச் சொல்லிச் சுபீட்சம் காண, இதோ! இக்கட்டுரையில் உங்களுக்கு ஒரு புதிர் தர விழைகிறேன். ஒன்பது ராத்திரிகளும் மூன்றாகப் பிரித்து துர்கா,லட்சுமி, சரஸ்வதி என்ற முறையில் நவராத்திரியை அனுட்டிப்பது நாம் அறிந்ததே. அதனை அடிப்படையாகக் கொண்டு, முப்பெரும் தேவிகள் பற்றி பாரதி எழுதிய கவிதைகளில் இருந்து எனக்கு மிகவும் பிடித்த ஒன்பது அடிகளை இங்கு தருகிறேன். அவை ஒவ்வொன்றும் எந்தக் கவிதையில் இடம்பெறும் அடிகள் என்பதனைக் கண்டறிய வேண்டும். இதுவே உங்களுக்கான முதல் புதிர்.

அவ்வண்ணம் உங்களுக்குப் பிடித்த 9 வரிகளை வெற்றிமணியோடு பகிர்ந்து கொள்ளுங்கள். மேதினியில் பயனுண்டாகும். அடுத்த தலைமுறையினர்க்குச் சென்றடையும்.



**கலாநூரி**
**திவ்யா சுஜேன்**
**(இலங்கை)**

1.வில்லை யசைப்பவளை –
இந்த வேலை யனைத்தையும்
செய்யும் வினைச்சியைத்

**தொல்லை**
**தவிர்ப்பவளை – நித்தம்**
**தோத்திரம் பாடித்**
**தொழுதிடு வோமடா.**

2. துன்பமே இயற்கையெனும்
சொல்லைமறந் திடுவோம்
இன்பமே வேண்டி நிற்போம்
யாவுமவள் தருவாள்.

3. சொல்லி னுக்கெளிதாகவும்
நின்றிடாள்
சொல்லை வேறிடஞ் செல்ல
வழிவிடாள்

4. அமரர் போல
வாழ்வேன், -- என்மேல்
அன்பு கொள்வை யாயின்

5. பாரதி சிரத்தினிலும் -- ஒளி
பரவிட வீற்றிருந் தருள் புரிவாள்

6. எல்லை யற்ற சுவையே! --
எனை நீ
என்றும் வாழ வைப்பாய்.

7. நாதமொ டெப்பொழுதும் --
என்றன்
நாவினி லேபொழிந்
திடவேண்டும்

8. எள்ளத் தனைப் பொழுதும்
பயனின்றி
இரா தென்றன் நாவினிலே
வெள்ள மெனப்பொழி வாய்

9. நாடி யருகணைந்தால், – பல
ஞானங்கள் சொல்லி
இனிமைசெய்வாள்

வையம் முழுதும் படைத்தளிக்கின்ற சக்தியின் அளப்பெரும் கருணையில் திளைப்போம். புகப் புகப் புக இன்பம் தரும் அவள் பொன் மலர்ப்பதங்களில் சரண் புகுவோம். ஆங்கே விரியும் சுதந்திர வெளியினில் நித்திய இன்பத்தைத் துய்த்துத் துய்த்து அமைதி கொள்வோம். ■








# ஒவ்வொரு வருடமும் எப்படா வரும் என்று காத்திருக்கும் அளவுக்கு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது தமிழர் தெருவிழா













மேற்படி நிகழ்வு 06,07,08, புரட்டாதி 2024 மூன்று தினங்கள் கோலாகலமாக நடைபெற்றது. டோட்முன்ட் நகர மத்தியில் அமைந்த விஸ்த்தீரணமான இடத்தில் ஏராளமான பார்வையாளர்களை வரவேற்று இத் தெருவிழா சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மத்தியில் அமைக்கப பட்டிருக்கும் அரங்கம் ஆடல்,பாடல் என்று தொடராக நிகழ்ச்சிகளை வழங்கிக் கொண்டிருக்க,எந்த நேரமும் மக்கள் பெருகி வந்து பார்த்து மகிழ்ந்து கொண்டே இருந்தார்கள். குடும்பமாக நானும் கலந்து கொண்டேன்.கலந்து கொண்ட மக்களில் கலகலப்பைக் காணக் கூடியதாக இருந்தது.நீண்ட நாள் சந்திக்காமல் இருந்தவர்கள் சந்திக்கின்ற களமாகவும் இந்நிகழ்ச்சி சிறப்பைப் பெறுகின்றது.

பறை,காவடி,கிராமிய நடனங்கள், பொய்க்கால் குதிரை, போன்ற கலாச்சார நிகழ்வுகள் இந்த விழாவின் நோக்கத்தைப் பறைசாற்றின.இந்த நிகழ்ச்சியைத் திறம்பட முன்னெடுத்துச் செல்லும் விழாக்குழுவுக்கு பாராட்டைத் தெரிவிக்கலாம். இவ்வருடம் ஆறாவது வருடம் என்று நினைக்கிறேன். இம்முறை அதிக அளவில் கடைகள் நிறைந்திருந்தன. பாரம்பரிய உணவுகளான,ஒடியல் கூழ்,மூலிகைப்பிட்டு,அப்பம்,தோசை என்று அசத்தியிருந்தார்கள்.இவற்றையெல்லாம் யேர்மனியர் விரும்பி உண்டதைப் பார்க்கக் கூடியதாக இருந்தது.நம்ம நாட்டு பனங்கள்ளுக்கூட அங்கிருந்து போத்தலில் அடைத்து வரவழைத் திருந்தார்கள்.அது பெரு மளவு விற்பனையாகியது. மரக்கறிகள், உடுப்புக் கடைகள், தாவரங்கள் பழவகைகள் என்று நிறைத்து வைத்திருந்தார்கள்.

மகிழ்ச்சியான பொழுது.ஒவ்வொரு வருடமும் எப்படா வரும் என்று காத்திருக்கும் அளவுக்கு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது,தெருவிழா. யேர்மனியில் Rheinische straße வில் நிரந்தரமாக அமைய இருக்கும் வள்ளுவர் சிலையின் மாதிரி வடிவமும் இந்நிகழ்ச்சியில் பார்வைக்கு வைத்திருந்தார்கள். “ஆவணகம்“திரு அன்ரன் அதிக தூரத்தில் இருந்து குடும்பமாக வந்து கலந்து கொள்வார். பண்டையகால பொருட்களுடன், ஏடுகள்,விதவிதமான பணங்கள்,முத்திரைகள் என்று காட்சிப் படுத்தியிருந்தார். இவரின் செயல் பாராட்டப் படவேண்டியதே.

சங்கங்கள்,கழகங்கள் என்று புத்தகங்ளைப் பார்வைக்கு வைத்திருந்தார்கள். நல்ல நிகழ்ச்சியொன்றைப் பார்த்த திருப்தியுடன் திரும்பியிருந்தோம்.“வெற்றிமணி“அங்கும் ஒலித்துக் கொண்டிருந்தது. விழாக்குழுவுக்கு பாராட்டுகள்.




பொன் புத்திசிகாமணி (யேர்மனி)



# இலங்கையில் பழங்குடிகள்

இலங்கையின் பழங்குடிகள் என்று கருதப்படுகிற இனக்குழுவினர் தமிழில் வேடுவர்கள் என்றும் சிங்களத்தில் வத்தா (Vadda) என்றும் அழைக்கப்படுகின்றனர். நாட்டின் வடமத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளிலும் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர். சிங்கள மற்றும் தமிழ் மக்களோடு கலந்து வாழ்ந்து வருவதனால் சிங்கள மொழியை பேசுகிறவர்கள் சிங்கள மொழி பேசுகிற வேடர்கள் என்றும் தமிழ் மொழியை பேசுகிற மட்டக்களப்பின்



ஒளிப்படத்தில் என்னருகில் இருப்பவர் ஊருவரிக்கே கோத்திரத்தின் ஊருவரிக்கே திசாகாமியின் இளைய புதல்வரும் வேடுவ குலத்தின் தலைவருமாக விளங்குகிற ஊருவரிக்கே வன்னியலத்தோ. தம்பானையில் வசித்து வருகிறார்.

பாட்டாலிபுரம், இலக்கந்தை, சந்தோசபுரம், வெருகல், இலங்கைத்துறை மாங்கேணி, காயங்கேணி, பனிசங்கேணி, மதுரங்குளம், கிரிமிச்சை, உறியக்காடு, கதிரவெளி, கட்டுமுறிவு, அமந்தனாவெளி, வாகரை, புன்னைக்கிளங்கு, குஞ்சான்குளம், மட்டக்களப்பு வேடர் குடியிருப்பு, தளவாய், சித்தாங்கேணி, களுவன்கேணி, நாசிவன் தீவு, இறால் ஓடை, பொண்டுகள் சேனை, கொங்கனை, பால்சேனை, திராய்மடு, வாகனேரி, முறுத்தானை, போன்ற பகுதிகளில் வசித்து வருகிறவர்களை தமிழ் வேடர்கள் என்றும் அழைக்கிற வழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது. இலங்கையில் வேடர்களின் உருவாக்கம் தொடர்பில் பல கதைகள் சொல்லப்படுகின்றன, மகாவம்சத்தின் அடிப்படையில் விஜயனுடைய வருகையின் போது அவனை மணந்த குவேனிக்கு பிறந்த இரண்டு குழந்தைகளின் வழி வந்தவர்கள் வேடர்கள் என்கிற நம்பிக்கை மகாவம்சத்தை நம்புகிறவர்களிடம் காணப்படுகிறது. ஆனால் விஜயனுக்கு முந்தைய இயக்கர், நாகர் என்கிற ஆதிக்குடிகளில் இயக்கர்களின் வழி வந்தவர்களே வேடர்கள் என்று வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். தென்னிந்திய பழங்குடி மக்களை ஒத்த மரபுகள் இவர்களிடத்திலும் காணப் படுவதான வரலாற்று சான்றுகளும் உள்ளது என்கிறனர் வரலாற்று ஆசிரியர்கள்.

இலங்கையில் வாழ்ந்து வருகிற வேடர்கள் தொடர்பில் பல ஆய்வாளர்கள் காலத்திற்கு காலம் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர், இவர்களில் கிபி 23-77ம் ஆண்டு காலப்பகுதியில் வாழ்ந்த பிளீனி, 5ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வருகைதந்த சீனரான பாஹியன் தேரர், கிபி 400 களில் இலங்கைக்கு வந்த கிரேக்கரான பெலேடியஸ் மற்றும் இபன்பதுனா, போர்த்துக்கேயரான டீ மெரிக்நொலி,கப்ரன் யோஆ றிபேரோ, ஒல்லாந்த ஆளுனர் றைக்லொப்ஸ் வென்,பிரித்தானியரான றோபேட் நொக்ஸ் உட்படவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். எனினும் மேற்குறிப்பிட்டவர்கள் வழங்கிய இலங்கையில் வேடர்கள் தொடர்பான தரவுகள் போதுமானதாக இல்லை, ஆனால் சுதந்திரத்திற்கு பின்பு காலத்திற்கு காலம் வேடர்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டவர்களில் சிரான் தெரணியகல, பேராசிரியர் சேனக்க பண்டாரநாயக்க, யசாஞ்சலி கருணாதிலக போன்றோர் குறிப்பிடத்தக்க தரவுகளையும் தகவல்களையும் அளித்துள்ளனர்.

இலங்கையில் வேடர்கள் தொடர்பில் கண்டறியப்பட்ட கல்வெட்டு ஆதாரங்களில் “வேரகலை சிலா சாசனம்“, “கொச்வா கந்த சிலாசாசனம்“, “சிதுல்பவ்வ சிலா சாசனம்“ மற்றும் “நாடுக்காடு சாசனம்“ ஆகியவை முதன்மை யானவையாக கொள்ளப் படுகின்றன, இவற்றில் கிபி 13- 14ம் நூற்றாண்டிற்குரியதான நாடுகாடு சாசனத்தில் மட்டக்களப்பில் நான்கு வட்டாரங்களுக்கு அதிபதியான “புலா“ என்னும் வேடர் தலைவன் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.



சர்மிலா வினோதினி

1921ம் ஆண்டின் சனத்தொகை கணக்கெடுப்பின்படி அக்காலப்பகுதியில் வாழ்ந்த வேடர்களின் எண்ணிக்கை 4510ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது. எனினும் பிற்பட்ட காலங்களில் நாட்டில்



வாழ்ந்து வருகிற ஏனைய இனங்களோடு ஏற்பட்ட கலப்பு மற்றும் வாழ்வியல் முறை மாற்றங்கள் வேடர் சமூகத்தின் இருப்பினை மெல்ல மெல்ல மாற்றியமைக்கத் தொடங்கினாலும் இன்னும் தமது அடையாளங்களை பேணிபடி வாழ்ந்து வருகிற இந்த நாட்டின் ஆதிக் குடிகளாக கருதப்படுகிற வேடர் சமூகத்தினரின் கலை கலாச்சார வாழ்வியல் பண்புகள் தனித்துவமானவை.

இயற்கையோடு வாழுகிற வேடுவ சமூகத்தின் சூழல் இருப்பிற்கு ஏற்ப அவர்களது உடலின் பௌதீக இயல்புகள் தீர்மானிக்கப்படுவதாக அறிய முடிகிறது, குறிப்பாக குள்ளமான உடல், நீண்ட தலை, அகலமான தாடை, தட்டையான மூக்கு, நன்கு வளர்ந்த தாடியும் மீசையும், சுருளான தலைமுடி, ஆழமானதும் கூர்மையானதுமான கண்கள், மங்கல–ான மண் நிறம் கலந்த தேகம் என்று இவர்களுடைய அங்க அடையாளங்கள் அடையாளப் படுத்தப்படுகின்றன. ■

22 ஆம் பக்கம் பார்க்க...

ASJ Asia Shop & Jewelry
பசுமையான மரக்கறிவகைகள், கடல் உணவு மற்றும் சமையலுக்கு தேவையான மளிகைப் பொருட்கள் அனைத்துக்கும் நாடுங்கள்.
பணம் அன்றைய திகதியில் அதி கூடிய பெறுமதியில் இலங்கைக்கு அனுப்ப நாடுங்கள்.
தரமான புதிய டிசைன்களில் தங்க நகைகளுக்கும் என்றும் நாடுங்கள்
MONEY TRANSFER
Grevener. Str. 222
48159 Münster
Tel : 0251 32709030
0160 5643105
Öffnungszeiten | Montag bis Samstag
9.30 bis 21.00

அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்





சேவியர்
(தமிழ்நாடு)

## நடுப்பக்கம்

# எங்கள் திண்ணைப் பேச்சு எங்க போச்சு

**வீடுகளில் வாரம் ஒரு முறை குறைந்த பட்சம், அரை நாள் டிஜிடல் விடுமுறை விடலாம்**

பரபரப்பான காலை வேளையில் திடீரென மேலதிகாரி அழைத்தார். " ஒரு கிளையண்ட் கொஞ்சம் முரண்டு பிடிக்கிறாருப்பா, நீ போய் நேர்ல பாத்து பேசிட்டு வா". என்றார்.!

'என்ன சார், அவங்க இருக்கிறது ஸ்ரீநகர்ல, அவர் கிட்டே டெய்லி பேசிட்டு தான் இருக்கோம்.. மெயில் பண்ணிட்டு இருக்கோம் – இதுல நேர்ல போய் எதுக்கு பேசிகிட்டு.. டைம் வேஸ்ட்.. மணி வேஸ்ட்' என இழுத்தேன். 'நேர்ல பாத்து பேசினா எல்லாம் சரியாயிடும் .. சொன்னதை செய் – என்றார்'. மேலதிகாரி சொன்னால் மறுத்துப் பேச முடியுமா ? சென்னையிலிருந்து பிளைட் புடித்து ஸ்ரீநகர் போனால், சிடுமூஞ்சி கிளையண்ட் மகிழ்ச்சியாக வரவேற்றார். கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தோம், பிரச்சினைகள் எல்லாம் சுமூகமாக முடிந்தன. கைகுலுக்கி விடைபெற்றோம் !

எனக்குப் புரியவில்லை. எத்தனையோ முறை மின்னஞ்சலிலும், டீம்ஸ் காலிலும், போனிலும் பேசியும் முடியாத விஷயம் நேரடியாகச் சந்தித்து மெலிதாய்ப் புன்னகை பரிமாறி, கைகுலுக்கிக் கொண்டபோது முடிந்தது வியப்பாக இருந்தது. நேரில் சந்தித்துப் பேசுவதற்கு இருக்கின்ற மரியாதையும், மதிப்பும் டிஜிடல் வெளியில் கொடிகட்டிப் பறந்தாலும் கிடைப்பதில்லை என்பது புரிந்தது. மனம் அப்படியே ரிவர்ஸ் கியரில் பழைய காலத்துக்குப் படியேறியது.

வாழ்வின் மகத்தான தருணங்களை விரல்விட்டு எண்ணி விடலாம், அதில் அதி அற்புதமான பொழுதுகள் எல்லாமே பிறரோடு இணைந்து நாம் செலவிட்ட தருணங்களாகவே இருக்கும்.

மேலாண்மையில் நிறைய நூல்களை எழுதியவரும், உரைகளில் உலகளாவியப் புகழ் பெற்றவருமான சைமன் ஸ்னக் சொல்லும் சிந்தனை ஆழமானது. "நாம் தொழில்நுட்பத்தை அதிக அளவுக்கு பயன்படுத்தப் பயன்படுத்த, மனிதரோடு உறவாடும் நேரம் குறைந்து கொண்டே வரும்.சமூக வலைத்தள அங்கீகாரங்களில் கிடைக்கும் போதை ஒரு மாயை! இது உண்மையில் மனித உறவுகளைக் களவாடுகிறது. அதிக தொழில்நுட்பப் பயன்பாடு தனிமையையும், திருப்தியின்மையையும் தந்து விடக் கூடும்" என்கிறார் அவர்.



மனிதன் பிறரோடு இணைந்து வாழப் படைக்கப்பட்டவன். அவன் தனித்து இயங்குகின்ற உயிரினம் அல்ல. அதிலும் குறிப்பாக தமிழன், பிறரோடு கலந்து வாழ்வதையும், பிறருக்காகக் கரைந்து வாழ்வதையும் வாழ்வியல் நெறியாகவே வைத்திருந்தவன். தமிழரின் இலக்கியங்கள் முழுவதும் மனித உணர்வுகளாலும், உயரிய சிந்தனைகளாலும் நிரம்பியவையே.பிறரன்பைப் பேணியதன் அடையாளம் தான் தமிழர் வீட்டின் திண்ணைகள். திண்ணைகளில் நீராகாரமும், ஓய்வெடுக்கத்தேவையான பொருட்களையும் வைத்து விட்டு, வந்து தங்குகின்ற வழிப்போக்கரை தன்னை விட உயர்ந்தவராய்க் கவனிக்கும் தமிழனின் பண்பை உலகில் எங்கேனும் காண முடியுமா? அந்த அன்றைய வாழ்க்கை முறை இன்றைக்கு மிகப்பெரிய வியப்பே! திண்ணைகள் திருடப்பட, நான் கடுக்கு கிரில் கேட்டுக்கு உள்ளே அல்லவா இன்றைய தமிழனின் வீடு சுருங்கிவிட்டது.

எனது பால்ய வயதில் கிராமங்களில் நடந்து திரியும் போது, பெரும்பாலான வீடுகளில் திண்ணைகள் இருக்கும். அந்தத் திண்ணைகளில் யாரேனும் உட்கார்ந்திருப்பார்கள். திண்ணை திண்ணையாக அரட்டையடித்தே விடுமுறை நாட்கள் சுவாரஸ்யமாகக் கழிந்து விடும். அந்தத் திண்ணைகளில் சண்டையிட்டுக் கொண்டவர்கள் வாழ்க்கையில் ஒற்றுமையாகவே இருந்திருக்கிறார்கள்.

குட்டிச் சுவரில் அமர்ந்து நண்பர்கள் அடிக்கும் அரட்டை, இப்போது நினைத்தாலும் சுவாரஸ்யத்தின் உச்சம். எல்லோரிடமும் ஏதோ ஒரு கதை இருக்கும். கதைகளைப் பகிர்ந்து கொள்ளும்போது இன்னும் அதிகமாக


17 ஆம் பக்கம் பார்க்க...







அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



# எங்கள் திண்ணைப் பேச்சு எங்க போச்சு

அவர்களோடு ஒரு பிணைப்பு ஏற்படும். நண்பர்கள் மட்டுமல்லாமல் அவர்களுடைய குடும்பத்தினரோடும் ஒரு அன்பும், நட்பும் நிரம்பவே இருக்கும். எந்த வீட்டில் சந்திக்கிறோம், எந்த வீட்டில் சாப்பிடுகிறோ, எந்த வீட்டில் உறங்குகிறோம் என்பதே அறியாத அன்றைய சமத்துவ உறவு இன்றைக்கு வியப்பின் உச்சம்.

அவையெல்லாம் இப்போது அருங்காட்சியகத்துக்குச் சென்று விட்டன. பழங்கதைகள் எல்லாம் புனை கதைகள் போல தோற்றமளிக்கின்றன. உலகம் டிஜிடல் மயமாகிவிட்டது. வாட்சப் வாசலில் தான் சேவல் கூவுகிறது. ஃபேஸ்புக் பக்கங்களில் தான் கதைகள் முளைத்தெழுகின்றன. எக்ஸ் பக்கத்தில் தான் அரட்டைகள் அரங்கேறுகின்றன. வேர்களை வெட்டிவிட்டுக் கிளைகள் பூக்களை வரைந்து கொள்கின்றன. ஏன்,வீடுகளிலேயே அறைகள் ஒவ்வொன்றும் தனித் தனியே இயங்குகின்றன. சாப்பாடு ரெடியாகிவிட்டதென சமையலறையிலிருந்து செய்தி அனுப்புகிறார் அன்னை. மாடியில் தன் அறையில் கொரியன் சீரியல் பார்த்துக் கொண்டிருக்கும் மகள், சாப்பாட்டுக்காக கீழே இறங்கி வருகிறாள். தட்டில் பரிமாறப்படுவதைக் குறித்த எந்த உணர்வும் இல்லாமல் சாப்பாட்டு நேரம் முடிகிறது! மீண்டும் டிஜிடல் கதவுகளை அடைத்துக் கொள்கிறாள் மகள். இப்படியே நகர்கின்றன இன்றைய நவயுக நாட்கள்.

எப்போதுமே தொடர்பில் இருக்கிறோம், ஆனால் ஒருபோதும் தொடர்பில் இல்லை என்பது தான் நிஜம். முன்பெல்லாம் கிராமத்தில் ஒரு புது நபர் வந்துவிட்டாலே ஊரே உற்றுப் பார்க்கும். அவரால் கிராமத்துக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதை உறுதிப் படுத்திய பின்னரே ஊர் சகஜ நிலைக்கு வரும். ஊரில் ஒருவருக்குப் பிரச்சினை என்றால் ஊரே பாய்ந்து வரும். இன்றைக்கு?! விபத்தில் அடிபட்டுக் கிடப்பவரைக் காப்பாற்றக் கூட ஆட்கள் ஓடி வருவதில்லை, அதற்குப் பதிலாக அவர்கள் டிஜிடல் குடை விரித்து காட்சியைப் பதிவு செய்கின்றனர்.

மக்களுடைய வாழ்க்கையானது சிரிப்பு, தொடுதல், விளையாடுகள் போன்றவற்றிலிருந்து விடுபட்டு லைக், ஷேர், வியூ எனும் நிலைக்கு மாறிவிட்டது. தங்களுடைய பதிவுக்கு அதிக ரீச் கிடைக்க வேண்டும் என ஆசைப்படுகின்ற அளவுக்கு, தங்களுடைய நட்பு வலுவாக இருக்கவேண்டுமென ஆசைப்படுவதில்லை. தங்களுடைய பதிவு வைரல் ஆகவேண்டுமென யோசிக்குமளவுக்கு, தங்கள் உறவு உண்மையாக வேண்டுமென யோசிப்பதில்லை. டிஜிடலில் உணர்வுகள் பரிமாறப்படுவதில்லை, தகவல்கள் மட்டுமே பரிமாறப்படுகின்றன. எல்லோரிடமும் இன்று பத்துப் பதினைந்து குழுக்கள் இருக்கின்றன. நமது டிஜிடல் குழுக்களில் ஆயிரம் நண்பர்கள் இருக்கலாம், அவர்கள் தினமும் காலை வணக்கம் மெசேஜ் அனுப்பலாம். ஆனால் நம்முடைய தேவையில் யார் வந்து கதவைத் தட்டுகிறார் என்பதே முக்கியம்.

முன்பெல்லாம் கோடை விடுமுறை வந்தாலே தொலை தூரத்தில் இருக்கிற தூரத்துச் சொந்தங்களை நோக்கி கட்டுச் சோறும் கட்டிக் கொண்டு கிளம்பி விடுவோம். அப்போது தாத்தா பாட்டி மாமா மாமி என்பது மட்டுமல்ல, நம்ம வீட்டுக் கொல்லையில் நிற்கும் ஆடு மாடு கோழி கூட நமக்கான சொந்தங்கள் தான். இன்றைக்கு அவையெல்லாம் எங்கே? தனது சொந்த பெற்றோரைக் கூட சென்று பார்க்க தயங்கும் உறவுகளல்லவா நம்மிடம் பெருகிக் கொண்டிருக்கின்றன.

விருந்தோம்பலின் உச்சத்தில் இருந்த தமிழினம்! விதை நெல்லைக் கூட தோண்டி எடுத்து வந்து வழிப்போக்கருக்குச் சமைத்துக் கொடுத்த தமிழினம்! இன்று பகிரும் மனநிலையை விட்டு விலகிக் கொண்டே இருக்கிறது. காரணம் உறவுகளிடையே நேரடியாகப் பார்த்துப் பேசும் வழக்கம் குறைந்து வருவது தான்.

திண்ணைப் பேச்சுகளின் காலத் தில் மன அழுத்தம் என்பது அறவே இல்லை எனலாம். ஒருவருடைய துயரத்தைத் தாங்கவும், அதைத் தங்களுடைய துயரம் போல பாவிக்கவும் உறவுகள் ஏராளம் இருந்தன. இன்றைக்கு அப்படியில்லை.மன அழுத்தம் எப்போதுமில்லாத அளவுக்கு உச்சத்தில் இருக்கிறது. டிஜிடலில் எழுகின்ற உரையாடல்களில் எது உண்மை எது போலி என்பதே புரியாத நிலை இருக்கிறது. ஸ்மைலி - களால் கட்டமைக்கப்படும் உணர்வுகளில் உண்மை இல்லை. நல்ல நண்பர்களைக் கொண்டிருங்கள், அடிக்கடி நேரடியாகச் சந்தித்துப் பேசுங்கள் என்று தான் உளவியலார்கள் சொல்கின்றனர்! இன்றைய உளவியலார்களின் கண்டுபிடிப்பை, அன்றே தமிழன் திண்ணைக் கலாச்சாரத்தில் சொல்லிவிட்டானல்லவா!

நீண்டகால நட்பு என்பது நேரில் சந்திக்கின்ற மக்களிடம் மட்டுமே இருக்க முடியும். மற்றவையெல்லாம் ஈசல்களைப் போல மின்னி மறைகின்றன. இன்று இந்தப் புற்றில், நாளை இன்னொரு புற்றில் என்று தான் டிஜிடல் உறவுகள் வாழ்கின்றன. என்னோட ஸ்கூல் மேட்,என்னோட காலேஜ் மேட் என நாம் புளகாங்கிதம் அடையும் நீண்டகால நட்புகள் இனி வரும் காலங்களில் இருக்குமா என்பதே சந்தேகம் தான்.

சமூகம் வலிமையாகவும், உறவுகள் ஆழமாகவும் வளரவேண்டுமெனில் வெறும் டிஜிடல் மொழியல்ல, உடல் மொழியும், வாய்மொழியும் அவசியம். அத்தகைய சூழலுக்கு மீண்டும் ஒரு முறை நம் சமூகத்தை அழைத்துச் செல்லும் முயற்சியை நாம் செய்ய வேண்டும். அடிக்கடி சந்தித்துப் பேசுகின்ற சமூக நிகழ்வுகளை உருவாக்க வேண்டும்.அது சில குடும்பங்கள் ஒன்றிணைந்து நடத்துகின்ற சந்திப்புகள் ஆகலாம், சிறு சிறு விழாக்கள் ஆகலாம், சிறு சிறு சுற்றுலாக்கள் ஆகலாம். எது வசதியோ அதை செயல்படுத்தலாம், ஆனால் அடிக்கடி செயல்படுத்த வேண்டும்.

இணையவழி நிகழ்ச்சிகளை விட நேரடியாக சந்தித்துச் செய்கின்ற விஷயங்களை ஊக்கப்படுத்த வேண்டும். சில விளையாட்டு நிகழ்ச்சிகள். நூலகங்களில் சென்று வருவது போன்றவற்றை நடத்த வேண்டும். மாறி மாறி நண்பர்களின் வீடுகளில் சந்தித்து உரையாட வேண்டும். முழு நிலா இரவு சந்திப்புகள், இலக்கியக் கூட்டங்கள் போன்றவற்றை நடத்த வேண்டும். டிஜிடல் இல்லா சந்திப்புகளை அறி முகம் செய்ய வேண்டும். வீடுகளில் வாரம் ஒரு முறை நோ-காட்ஜெட்ஸ் என திட்டமிடலாம். குறைந்த பட்சம், அரை நாள் டிஜிடல் விடுமுறை விடலாம். உறவினர்களைச் சென்று சந்திப்பது, முதியோர் இல்லங்கள் சென்று சந்தி ப்பது என வாரம் ஒரு முறை ஏதேனும் ஒன்றை செயல்படுத்தவேண்டும்

இப்படி சின்னச் சின்ன மாற்றங்களை வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தினால் மீண்டும் ஒரு அன்பின் சமூகம் உருவாகும் என்பதில் சந்தேகமில்லை. அன்பினாலும், உறவுகளினாலுமே உலகம் கட்டமைக்கப்படுகிறது. அந்த உண்மையை உணரும்போது வாழ்க்கை அழகாகும். கருவிகள் எல்லாம் பின் இருக்கைக்குச் சென்றமரும்.









அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

17 வருட அனுபவம்



100% இலவச சேவை

நீங்கள் வீடு வேண்டுவதற்கான அனைத்து விதமான வங்கி கடன்களையும், மற்றும் வீடு சம்மந்தப்பட்ட ஆலோசனைகளையும், மிகச்சிறந்த முறையில் தமிழிலே உங்களுக்கு செய்து தரப்படும்.


Sudharshan Arasapillai

-Bankkaufmann-
-Zertifizierter Baufinanzierungsbetreuer (Univ. Passau)-

Bezirksleiter der Bausparkasse Schwäbisch Hall AG
im Hause der Volksbank Rhein-Lippe eG
Am Neutor 23, 46535 Dinslaken

Büro: 0281- 922 6994
Mobil: 01522-2684277
s.arasapillai@schwaebisch-hall.de

# நீங்கள் உண்மையில் ஒரு வாழும், சுவாசிக்கும் நகரமாகவே இருக்கிறீர்கள்





### உங்கள் உடலின் காவலாளிகள்!

நம் உடலின் அடிப்படையைப் பற்றி நாம் ஏற்கனவே நிறையவையும் கேட்டு இருக்கிறோம் - உடலில் பாக்டீரியா எனப்படும் நுண்ணுயிரிகள் மொத்தம் 40 டிரில்லியன் (40.000.000.000.000) அளவில் இருப்பதாகவும், அவை நம் உடலில் பல நல்ல வேலைகளைச் செய்கின்றன என்பதும் நாம் அறிந்த விஷயம். ஆனால், இப்போது புதிய விஞ்ஞானத் தகவல்கள் நம்மை இன்னும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன. நம் உடலின் ஒரு முக்கிய பகுதி வைரஸ்களால் நிரம்பி நிறைந்திருப்பதாகப் புதிய ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. வைரஸ்கள் என்றாலே, நாம் நினைப்பது நோய்களை உருவாக்கும் குற்றவாளிகள் என்று. ஆனால், உண்மையில், நம் உடலில் உள்ள பில்லியன் கணக்கான வைரஸ்கள் நம் எதிரிகள் அல்ல.அவை நம் உடலின் பாதுகாவலர்களாகச் செயல்பட்டு, சில சமயங்களில், நோயைக் கொல்லக் கூட உதவும்!

உங்களுக்கு ஒன்று தெரியுமா? நீங்கள் உண்மையில் ஒரு வாழும், சுவாசிக்கும் நகரமாகவே இருக்கிறீர்கள். உங்கள் உடலில் 40 டிரில்லியன் செல்கள் உள்ளன. இந்த நகரம், மனித நுண்ணுயிரிக் கூட்டமைப்பு எனப்படும் மைக்ரோபியோமுக்கு, மேலும் 40 டிரில்லியன் நுண்ணுயிரிகளைத் தங்க வைக்கிறது. இந்த நுண்ணுயிரிகள் உங்கள் உடலில் பல சாமானிய பணிகளைச் செய்கின்றன.




உதாரணமாக, அவை உங்கள் உணவைச் சிதைக்கின்றன, ஊட்டச் சத்துக்களை உற்பத்தி செய்கின்றன, வாயிலுள்ள அமிலத்தைச் சமநிலை படுத்துகின்றன, மேலும் உங்கள் உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்தைச் சீராக்குகின்றன. இதை விட, அவை தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகள் உங்கள் உடலினுள் வராமல் தடுக்கும் பணியைச் செய்கின்றன. இதில் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால் இந்தப் பாக்டீரியாவின் எண்ணிக்கை கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பது தான். அவை பெருகினால் அல்லது தங்கள் எல்லைகளை மீறினால், அதனால் ஏற்படும் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்த, ஒரு கொடிய எதிரி காத்திருக்கிறது: வைரஸ்கள். இவை குறைந்தது பத்து டிரில்லியன் அளவில் உங்கள் உடலில் பரவியிருக்கின்றன. அதுவும் அதிகமானவை உங்கள் குடலில் இருக்கும். அங்குப் பாக்டீரியாவை ஒழிக்கவும் அவற்றின் எண்ணிக்கையைச் சமநிலையாக்கவும் முக்கிய பங்கு வகிக்கின்றன.



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

இந்த வைரஸ்களில் பெரும்பாலானவை (97வீதம்) பாக்டீரியோபேஜ்கள் அல்லது பேஜ்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை பாக்டீரியாக்களை வேட்டையாடி கொல்லும் விசித்திரமான வைரஸ்களாகும். குறிப்பாக, இவை உங்கள் உடலின் செயல்களைத் தாக்குவதில்லை. மாறாக, தினமும் கோடிக்கணக்கான பாக்டீரியா க்களை அழிக்கின்றன. இந்த வைரஸ்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து மனித வைரோம் (virome) எனப்படும் உங்கள் உடலின் ஒரு வைரஸ் அமைப்பை உருவாக்குகின்றன. இது உங்கள் உடலின் ஆரோக்கியத்துக்கு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இவை எவ்வாறு உங்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கின்றன என்பதையும், அவ்வப்போது எதிர்பாராத பிரச்சனைகள் ஏற்படும்போது என்ன நடக்கிறது என்பதையும் நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

உங்கள் குடலில், "லாம்ப்டா பேஜ்" எனும் ஒரு வைரஸ் அமைதியாகப் பாக்டீரியாக்களின் கூட்டத்தில் நிற்கிறது, அது ஓர் இரையைத் தேடிக் கொண்டிருக்கிறது. இவ் வைரஸின் உடலில் ஆறுபாகங்களும், உடல் நீளமும், கோண வடிவங்கள் கொண்ட தலை அமைப்பும் genet ic தகவல்களை அடக்கி வைத்திருக்கும் பகுதியாக அமைந்துள்ளன. இதன் வேட்டைக்கு ஏற்றவையாகப் பாக்டீரியா வகைகள் இருப்பினும், இது குறிப்பாக Escherichia coli எனும் பாக்டீரியாக்களைத் தான் அதிகம் பிடிக்கின்றது. சில Escherichia coli பாக்டீரியாக்கள் நல்லவை.

28 ஆம் பக்கம் பார்க்க...

---

# காரைக்கவி கந்தையா பத்மானந்தனின் 'சீத்துவக்கேடு'

## நூல் பற்றி மூத்த பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்கள்...







காரைக்கவி கந்தையா பத்மானந்தனின் சீத்துவக்கேடு நூல் கடந்த 15.09.2024 கொழும்பு தமிழ்சங்கத்தில் வெளியிடப்பட்டது.இந் நூல் யாழ்ப்பாண மக்களின் குறிப்பாகத் தீவுப்பற்றின் வாழ்வியல் அம்சங்களைத் துணிந்து உள்ளதை உள்ளபடியே பதிவுசெய்துள்ளார். உதாரணங்கள் பலவற்றைச் சுட்டிக் காட்டலாம். பண்பாட்டியல் ஆய்வாளர்கள். சொல்லவிரும்பாத,சொல்லத்துணியாத ,ஒருவகையிலே சொல்ல மறைத்த பல்வேறு விடயங்களை இந்தநூலாசிரியர் சொல்லிச்செல்கிறார்.கிராமத்திலே என்ன சொல்லிலே.என்ன சொற்றொடரிலே மொழியைக் கையாளுகிறார்களோ அதனை அப்படியே கையாளுவது பாராட்டிற்குரியது. பேச்சுவழக்கு அகராதிகளுக்குப் பெருந்துணையாக இந்தநூலையும் பயன்படுத்த வேண்டும், மொழியியல் ஆய்வாளர்கள் இந்நூலைப் படிக்க வேண்டும் என்று பணிவுடன் பரிந்துரைக்கலாம் போலத் தோன்றுகிறது. வரலாற்றுச் செய்திகளையும் ,வாழ்வியல் அமிசங்களையும் இலாவகமாக இணைக்கும் இந்நூலாசிரியர் அதற்கு உதவும் பொருட்டும் பழந்தமிழ் இலக்கியங்களின் பாதையிலே பயணிக்கிறார். ஆற்றுப்படை இலக்கியங்கள் காட்டும் பண்பாட்டு அமிசங்களை இன்றைய நடைமுறைகளோடு ஒப்பிட்டுக் காட்டுவது பாராட்டிற்குரியது. இந்த நூலைப் படித்த போது காரைக்கவி கந்தையா பத்மானந் தனிடம் ஒரு ஆய்வாளன் உறங்கிக் கொண்டிருக்கிறான் என்பதும் ஆங்காங்கே கவிஞன் ஒருவன் எட்டிப்பார்க்கிறான் என்பதும் எனக்குப் புலனாகியது.

ஆய்வு நெறிமுறை என்ற நந்திதேவர் விலத்தி வழிகொடுத்து நூலாசிரியருக்கு வழிவிட்டிருக்கிறார். இந்தநூலைப்பற்றி நிறைய எழுதலாம் அதைவிட இன்னும் நிறையப் பேசலாம். வாசகர்கள் உண்டு சுவைத்துப் பரிமாற வேண்டும் என்று அவாவுறுகிறேன்.காரைக்கவி கந்தையா. பத்மானந்தன் இன்னும் நிறைய எழுத வேண்டும்.இந்த நூலையே "சிறாச்சுச்சீவி" "பொலிஸ்பண்ணி" "மேக்கப்பண்ணி" ஒரு ஆய்வு நூலாகவும் வெளியிடலாம் என்று பரிந்துரை செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்





# புலம்பெயர் தேசத்தில் இளையவர்கள் முன்னின்று நடாத்திய ஆடற்கலாலயத்தின் 35 ஆவது ஆண்டுப் பெருவிழா

ஆடற்கலாலயத்தின் 35 வது ஆண்டு விழா 14.09.2024 சனிக்கிழமை அன்று ஜெர்மனி டியூஸ்பேக் நகரத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 30 நடன நிகழ்வுகள் நடைபெற்றமை இந்நிகழ்வின் தனித்துவமான அம்சமாகும். ஆடற்கலைமணி திருமதி றெஜீனி சத்தியகுமார் அவர்கள்பதித்த விதை இப்போ கிளைகள் பரப்பி பெரு நிறுவனமாக வளர்ந்து வருகின்றமை கண்கூடு. புலம்பெயர் தேசத்தில் வளர்ந்த இளையவர்கள் முன்னின்று நடாத்திய ஒரு பெரு விழா. பற்பல துறை





சார்ந்தவர்கள் அவையை அலங்கரித்திருந்தனர். பெற்றோர்கள் புடைசூழ திருதிருமதி சத்தியகுமார் தம்பதிகள், பிரதமவிருந்தினர் செல்வி சிம்ரன் சிவகுமார் (இந்தியா), சிறப்பு விருந்தினர் திருமதி சாந்தினி துரையரங்கன் (யேர்மனி) சகிதம் அரங்கிற்கு அழைத்துவரப்பட்டனர். மங்கள விளக்கு ஏற்றி, இறை வழிபாட்டுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

நிமலன், தீபனா குரலில் லய கவிதை நிகழ்ச்சி ஸ்வரம், ஜதி கலந்து இராகமாளிகை தாளமாளிகையாக அமைந் திருந்தமை வித்தியாசமான ஒரு நிகழ்வாக இருந்தது. ஸ்வரக்குச்சா என்ற நிகழ்வில் ஆசிரிய மாணவர்களும் ஆசிரியர் றெஜினி சத்யகுமார் அவர்களும் இணைந்து அழகாக ஆடிய நிகழ்ச்சியை மிருதங்க கலைஞன் நட்டுவாங்கம் செய்தமையும் தனித்துவ அம்சமாகும். ஒரு இளம் மிருதங்கக் கலைஞன் நட்டுவாங்க கலைஞராக மேடையை அலங்கரித்தமை யேர்மனியில் நான் அறிந்த முதல் மேடை நிகழ்ச்சியாகும். கடல் பற்றி அமைந்த நிகழ்ச்சி, வர்ணம் போன்றன இந்நிகழ்வின் தனித்தன்மை எடுத்துக்காட்டின.

பக்கவாத்திய கலைஞர்களின் பங்களிப்பு இந்நிகழ்வின் இன்னுமொரு சிறப்பம்சமாகும். இளம் கலைஞர்களான லகிபன், அனுஷாந் தாளவாத்தியங்களையும், பிரசாந்த் வயலினையும், நிரூஜன், தாரணி குரல் இசையையும், வர்ணன் புல்லாங்குழல் இசையையும் லாவகமாக, சிறப்பாக வழங்கியிருந்தார்கள். சில நடனநிகழ்சிகளை சுரத்தட்டு இசையும் இணைந்து மெருகேற்றியிருந்தது. பக்கவாத்தியங்கள், நட்டுவாங்கத்தின் ஒருங்கிணைந்த தன்மை ஆற்றுகை செய்த கலைஞர்களுக்கு உந்துசக்தியை கொடுத்து மெருகேற்றின என்றால் அது மிகையாகாது.

அது அவை யோரையும் பரவசப்படுத்தியது எனலாம். ஆடற்கலாலயத்தில் றெஜினி ஆசிரியரிடம் பயின்று இப்பொழுது ஆசிரியர்களாக கடமையாற்றுகின்ற தீபனா,அபிரா,ரோஷிகா,ராதிகா, தர்ஷிகா,சுவேதா, ராஸ்மிகா ஆகியோர் இணைந்து நிகழ்வுகளை தயாரித்து, நட்டுவாங்கம் செய்தமை பாராட்டுதற்குரிய விடயமாகும். இது இக்கலாலயத்தின் வளர்ச்சியின் அடுத்த கட்ட படிநிலை எனக் கூறலாம்.

பிரதவிருந்தினர் சிம்ரன் சிவகுமார் அவர்கள் தன் உரையில் நிகழ்ச்சிகள் சிறப்பாக உள்ளன. நட்டுவாங்கம், பக்க வாத்திய காரர்களின் பங்களிப்பு அருமையாக உள்ளது என்று பாராட்டினார். புலம்பெயர் தேசத்தில் பரத நாட்டியம் அழகா வளர்கின்றது என்றும் தன்னை இங்கு அழைத்தமைக்கு நன்றியும் கூறினார்.

தொடர்ந்து அவர் ஒரு பதத்தினை அழகான பாவத்துடன் ஆற்றுகை நிகழ்த்திக் காட்டினார்.சிறப்புவிருந்தினர் சாந்தினி துரையரங்கன் நடந்த நிகழ்ச்சிகளை தொகுத்து கூறியதுடன் அவற்றில் உள்ள சிறப்புத்தன்மைகளையும் எடுத்துக் கூறி னார்.

விழா கிட்டத்தட்ட 12 மணித்தியாலங்களாக சிறப்பாக நடைபெற்றது. ஒரு நடன நிறுவனத்தின் ஆண்டு விழா தொடர்ச்சியாக நீண்டநேரம் இடம்பெற்றமை என்பது தனித்துவமே. நிமலன் சத்தியகுமார் அவர்களின் நன்றியுரையுடன் இனிதே விழா நிறைவு பெற்றது.

**படங்கள் : Malathy Digitals**
**தொகுப்பு: சாந்தினி துரையரங்கன். B.FA**







# தப்பெல்லாம் தப்பே இல்லை என்பது சரியா?



வார்த்தைகளுக்குள் அடங்கிப் போவதுதான் வாழ்க்கை அல்ல. தினம் தினம் சிந்தித்து செயலாற்றி நல் எண்ணங்களை விதைக்க நினைத்துச் செயற்பட்டு மடிவதுவே வாழ்க்கை. தப்பெல்லாம் தப்பே இல்லை என்பது சரியா? தப்புத் தப்புத்தான் என்று பிடிவாத மனத்தோடு வாழ்க்கையை வழிநடத்திச் செல்வதுதான் வாழ்க்கையா? சம்பவங்களும் சரித்திரங்களும் மனத்திலே குழப்பைத்தை ஏற்படுத்தினாலும் மனம் என்னவோ ஆராயத்தான் செய்கிறது. நான் என்ன பெண்ணிய சிந்தனையைப் பேசுகின்ற எழுத்தாளரா? இல்லை உண்மையை வெளிக் கொண்டுவர பெண்ணென்ன ஆணென்ன எல்லாம் ஓரினம் தான் என்று பாரபட்சமற்ற கருத்துக்களை முன் வைக்கும் ஒரு படைப்பாளியா? என்று சிந்தித்தால் பெண்ணிய சிந்தனை என்று சொல்லித் தப்புக்களை ஏற்றுக் கொள்ளும் ஒருத்தியாக இருக்க விரும்பாத ஒரு படைப்பாளி என்பதுதான் உண்மை.

இலக்கியம், அறிவியல், விஞ்ஞானம், ஆராய்ச்சி, ஆன்மீகம், சமூக வலைத் தளங்கள் இவையெல்லாம் எனக்குப் பிடிக்கும். இவற்றுடனேயே என் பொழுதுகள் கழிகின்றன. அனைத்திலும் ஈடுபடுகின்ற போது முறையாக ஒன்றைச் செய்ய முடியாது என்பது வாதமாக இருந்தாலும், வாழுகின்ற காலத்திலே வசப்படுகின்ற அனைத்தையும் அறிந்து விட வேண்டும் என்பதுவே என்னுடைய வாதமாக இருக்கின்றது. “கண்டது கற்கப் பண்டிதனாவான்“ என்பது எனக்காக எழுதிய வரிகள் போலத்தான் இருக்கின்றது. ஒரு முக்கியத்துவத்தை அறிந்தே அறிஞர்களும், விஞ்ஞானிகளும் ஒன்றைக் கண்டுபிடிக்கின்றார்கள். அவ்வாறு கண்டுபிடிப்பவற்றிலே சாதக பாதகங்கள் இருக்கவே செய்யும். அவற்றை முறையாக அறிந்தே அவற்றைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் பயனாளிகளுக்கு இருக்க வேண்டும்.

மனிதர்களுக்கு எந்தவித பயனுமில்லாத விடயங்களைச் சமூகவலைத் தளங்களில் பலர் பயன்படுத்துகின்றார்கள் என்னும் குற்றச்சாட்டுக்கள் எம்மத்தியில் இருக்கின்றது. ஆனால், அதற்குத் தீர்ப்பை நாம் கொடுக்க முடியாது. ஏனென்றால், எமக்குப் பயனில்லாதது. மற்றையவர்களுக்குப் பயனுடையதாக இருக்கும். மற்றவர்களுக்குப் பயனில்லாதது எமக்கும் பயனுள்ளதாக இருக்கலாம். இதைவிட சமூகவலைத்தளங்களில் ஆண்கள் பெண்கள் மீது செய்கின்ற பாலியல் வன்முறைகள் பற்றிப் பேசப்படுகின்றது. குற்றவாளியை மனநோயாளி என்று பச்சை குத்தி மன்னித்து விடுகின்றார்கள். இல்லை தூக்குத் தண்டனை, கொலை என்று தீர்ப்புக் கொடுக்கின்றார்கள். இரண்டும் இதற்குத் தீர்ப்பல்ல. கொலை செய்யப்பட்டவன் தன்னுடைய குற்றத்தை அறிந்து கொள்ளச் சந்தர்ப்பம் இல்லாமல் போகின்றது. மனநோயாளி என்னும் போது குற்றங்களுக்கு சந்தர்ப்பங்களாகப் போகின்றன. எல்லாம் மனத்திலேதான் இருக்கின்றது என்பது உண்மை. அதனால், மனத்துக்கு மருந்து, கலாசாரத்தில் கட்டுப்பாடுகள் ஆராயப்பட வேண்டியவையாக இருக்கின்றன.

வாழ்க்கையிலே தான், தன்னுடைய குடும்பம் என்று சந்தோசமாக அமெரிக்காவிலே வாழ்ந்து கொண்டிருந்த ஒருவர் திடீரெனத் துப்பாக்கியை எடுத்துத் தன்னுடைய மனைவி, பிள்ளைகளைச் சுட்டுக்கொன்றாராம். அவரைப் பரிசோதித்துப் பார்த்த போது அவருடைய மூளைக்குப் பக்கத்தில் ஒரு பெரிய ரியூமர் என்று சொல்லப்படுகின்ற ஒரு கட்டி இருந்திருக்கிறது. இதனால், அவருடைய மூளை அவருயை செயற்பாட்டில் பல மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கின்றது. இதேபோல் மூளையில் வளருகின்ற ரியூமர் கட்டிகளால் மிருகமாய் மாறுகின்ற பல உதாரண புருஷர்களை அறிவியல் உலகம் அடையாளம் காட்டுகின்றது. இதைப் போலவே மனத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்ற பல பெண்கள் செய்கின்ற தப்புக்கள் சமூகவலைத் தளங்களில் நியாயப்படுத்தப் படுகின்றன.



கௌசி சிவபாலன்
(யேர்மனி)

மனம் எப்போது எப்படி செயற்படும் என்று சொல்லமுடியாது. அதனாலேயே “மனம் ஒரு குரங்கு“ என்று சொல்கின்றார்கள். ஒன்றாக வாழந்து, மகிழ்ச்சியை அனுபவித்து, பிள்ளைகளைப் பெற்று வாழ்ந்த பெண், கணவனைப் பார்க்கவே பிடிக்கவில்லை என்று முகநூல் நண்பர்களைப் பிடித்துப் போகின்றது என்கின்றாள். கணவன் நேரக் கட்டுப்பாடு இல்லாமலே தன்னுடைய இச்சைக்கு அழைக்கின்றான் என்ற காரணத்தைக் காட்டி முகநூல் நண்பர்களுடன் ஆதரவு தேடுகின்றேன் என்கின்றாள். இந்தப் பெண்களின் மனத்துக்கு வயதுக் கட்டுப்பாடுகள் இல்லை. இளவயதானாலும், வயதானவன் என்றாலும் அவளுக்குத் தப்பேயில்லை. ஆண்களில் பெண்கள் தங்கி வாழ்ந்த காலத்தில் ஆண்களே பரவலாகச் சின்னவீடு வைத்திருந்து தப்புச் செய்த காலம் இருந்தது. கணவன் மௌத்கல்ய முனிவரைத் தாசிப் பெண்ணிடம் கூடையில் சுமந்து சென்ற நளாயினி, தன்னைத் தவிக்கவிட்டு மாதவியுடன் வாழ்ந்த கோவலனுக்காக மதுரையை எரித்த கண்ணகி போன்ற பல உதாரணப் பெண்கள் வாழ்ந்த காலம் இப்போது இல்லை. இன்று பெண் சுதந்திரம் என்று ஆனபின் பெண்களும் மனம் போன போக்கில் போகின்ற காலத்தை சமூக வலைத் தளங்கள் தருகின்றன.

இதேபோல தப்பான வீடியோக்களை சமூக வலைத் தளங்களில் பதிவிடுகின்ற பெண்களும் தமக்குரிய சாதகங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஆதாரங்களைத் தேடுகின்ற முறைகளை அறியக்கூடியதாக இருக்கின்றது. இங்கு நதி மூலம் ரிஷி மூலம் பார்க்கக் கூடிய நிலையில் நாம் இல்லை. அவர்கள் பார்வையில் தப்பெல்லாம் தப்பே இல்லை.

கண்ணகியை விட மாதவி கற்புக்கரசி என்று பட்டிமன்றத்தில் மாதவிக்கு நற்சான்றுப் பத்திரம் கொடுக்கும் வாதிகள் மாதவியின் தவற்றைச் சுட்டிக்காட்டுவதே இல்லை. திருமணமான கணவனுடன் தகாத உறவு கொள்ள மாதவி எவ்வாறு மனத்தைத் தயார் படுத்தனாள்.

“பிறப்பில் குன்றாப்
பெருந்தோள் மடந்தை“
என்று இளங்கோவடிகளால்
போற்றிப் பாடப்பட்ட மாதவி
“தலைக்கோல் எய்தித் தலை
அரங்கு ஏறி
விதிமுறைக் கொள்கையின்
ஆயிரத்து எண்கழஞ்சு
ஒரு முறையாகப் பெற்றனள்“

என்று போற்றப்பட்ட மாதவி மாற்றாள் கணவன் கோவலன் நெருங்கிய போது நீதி உரைத்து அவனை அண்ட விடாமல் செய்திருக்க முடியும். ஆனால், அங்கும் அவளுடைய மனம் அவளுக்குத் துரோகம் செய்தது. அக்காலத்தில் கணிகையர் பல குடும்பங்கள் சீரழியக் காரணமாக இருந்திருக்கின்றார்கள். அதேபோல தற்போது சமூகவலைத் தளங்கள் காரணமாக இருக்கின்றன. இராவணன் தங்கை சூர்ப்பனகை என்னும் இராமாயணக் கதாபாத்திரம் இராமனில் மயங்கினாள்.

வெய்யோனின் ஒளிவெள்கும்
வாறவனின் தோற்றம்
வாங்கார்விழி வடிவத்தை
வாங்கியவ ராங்கே
பொய்யவெனு மிடையாளாங்
கில்லாத போழ்தில்
மையலெனப் பெண்ணொருத்தி
பாதநடை பயின்றாள்.

28 ஆம் பக்கம் பார்க்க...





கொழும்பு பம்பலப்பிட்டியில் வீடு விற்பனைக்கு உண்டு

கொழும்பு பம்பலப்பிட்டியை அண்மித்து, இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் வீடு விற்பனைக்கு உண்டு. 10 மாடி வீடுகள் கொண்ட அப்பாட்மென்ரில் 2 வது மாடி.

3 படுக்கை. அறைகளும், 2 குளியல் அறைகளும், வேலையாட்களுக்கான அறையும், குளியல் அறையும், குசினியும், அழகான பெரிய ஹால், அமைந்த அழகிய நவீன வசதிகள் உடைய வீடு விற்பனைக்கு உண்டு.
(Apartment extend 1250 sqft)

- 3 bedrooms 2 bathrooms
- servant room and servant bath room
- living and dining and kitchen
- Fully air conditioned
- Hot water for bathroom
- Cable tv
- Telephone
- Party area at rooftop

நிரந்தர வாகனத்தரிப்பிடம் உண்டு.

40 மில்லியன் ரூபா



தொடர்புகளுக்கு:
Bastilouies@bluewin.ch

15 ஆம் பக்கத் தொடர்ச்சி....

# இலங்கையில் பழங்குடிகள்



## இலங்கையில் வேடர்களின் பரவல்

இலங்கையில் வசித்துவருகிற வேடுவர்களுக்கிடையில் பல்வேறுவகையான கோத்திரப் பிரிவுகள் காணப்படுகின்றன, ஆரம்பித்தில் 16 கோத்திரங்கள் காணப்பட்டதாகவும் பின்னர் அவை குறைவடைந்து தற்போது 06 கோத்திரங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தரவுகள் குறிப்பிடுகின்றன. ஊரு கோத்திரம், தலா கோத்திரம், நபுடன் கோத்திரம், உனாபான கோத்திரம், மொரான கோத்திரம், அம்பலவ கோத்திரம் என்பனவே அவையாகும்.


இவற்றில் உனிச்சி, பிம்தன்னை, தம்பானை, தமன்கடுவை, யக்குரை உல்பொதை போன்ற இடங்களில் ஊரு கோத்திரத்தினை சார்ந்தவர்களும், யக்குரே, அம்பாறை, பக்கிஎல்ல, களுகொலாப, தம்பானை, ஒலகொதகிய, ஹோனெபெத்த போன்ற பகுதிகளில் தலா கோத்திரத்தினை சார்ந்தவர்களும், தம்பானை, வட்டவனை, கந்தேகம்வெல, சொரபொரை, பிந்தனை, கல்லோருபாய போன்ற இடங்களில் நபுடன் கோத்திரத்தை சார்ந்தவர்களும், ஹோணபத்த, அம்பாறை, பக்கிஎல்ல, தானிகல ஆகிய இடங்களில் உனாபான கோத்திரத்தை சேர்ந்தவர்களும்,

நிக்கெல, ஹோணபத்த, சீதல வன்னிய, கொடதலாவை, உணுவதுர புபுல, பிங்கொடை, மகாஓயா, ஆகிய இடங்களில் மொரான கோத்திரத்தை சார்ந்தவர்களும், வாகரை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் அம்பலவ கோத்திரத்தை சார்ந்த வேடர்களும் வசித்து வருகிறார்கள் என்கின்றனர் ஆய்வாளர்கள். இது ஒரு புறம் இருக்க வாழ்க்கை முறையின் அடிப்படையிலும் வேடர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள். மரம், இலை குழைகளை அணிந்தபடி வேட்டையாடி வாழ்ந்த மக்கள் கல்வேடர்கள் என்றும், கரையோரப் பிரதேசங்களில் வாழ்கிற கடற்தொழிலை வாழ்க்கை முறையாக கொண்டுள்ள மக்களை கரையோர வேடர்கள் என்றும், சேனைப் பயிற்செய்கையினை வாழ்க்கை முறையாக கொண்டு சிறிய கல்லால் ஆன வீடுகளை அமைத்து வாழ்ந்து வருகிற வேடுவ சமூகத்தை கராம வேடர்கள் என்றும் அழைக்கின்ற வழக்கம் இருந்து வருகிறது.

## வாழ்வியல் முறைகள்

ஆரம்ப காலத்தில் வேடர்கள் ஒற்றையாக அல்லது இரண்டு மூன்று குடும்பங்கள் இணைந்த சிறு குழுக்களாக குகைகள் உட்பட்ட தமது வாழ்விடங்களில் வாழ்ந்து வந்தனர், குறித்த வாழ்விடம் அங்கு வாழ்ந்து வந்த குடும்பங்களின் பொது உரிமையாக இருந்தது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் அந்த வாழ்விடத்தின் சிறு பகுதியை ஒதுக்கியிருந்தனர். சுற்றாடலின் சமநிலை மற்றும் வளத்திற்கு கேடு விளைவிக்காத வகையில் உணவு தேடி வாழ்ந்துவந்தனர். வாழ்வதற்காக மட்டுமே உணவு தேவைப்பட்டது. இதனால் உணவு வரையறைக்கு உட்பட்டதாக இருந்தது, வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், மீன் பிடித்தல் போன்ற முறைகளின் மூலம் அவர்களுக்கான உணவு கிடைத்து வந்தது.

வேட்டையே பண்டையகால வேடர்களின் வாழ்க்கை வழியாக இருந்தது, இதனால் அவர்களுடைய கண்கள், கைகால்கள்



மற்றும் அங்க அசைவுகள் வேட்டைக்கு ஏற்ப தேர்ச்சி பெற்றவையாக இருந்து வந்தன. அங்கு வசித்து வந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் வேட்டையாடுவதற்கென சுமார் 25 தொடக்கம் 50 ஏக்கர் வரையான வனாந்தரப் பகுதிகள் ஒதுக்கப்பட்டு இருந்தன, இவை மரங்களினால் அல்லது கற்களினால் அடையாளப்படுத்தப் பட்டு இருந்தன. அங்கு எல்லை மீறல்கள் இடம்பெற்றிருக்கவில்லை, வில்லு, அம்புகள், கைக்கோடரி, மர ஈட்டி போன்ற இலகு ஆயுதங்களை பயன்படுத்தி மரை, மான், பன்றி, உடும்பு, குரங்கு, ஆமை, முயல், சருகுமான், முள்ளம்பன்றி, அழுங்கு போன்ற விலங்குகளையும், மயில், கிளி, காட்டுக்கோழி, பூவை போன்ற பறவை இனங்களையும் வேட்டையாடி உணவுத் தேவையை நிறைவு செய்தனர். இதேபோல கரையோரங்களில் வாழ்ந்த ஆதிவாசிகள் கடல், களப்புக்கள், ஓடைகள், வாவிகள் போன்றவற்றில் மீன்பிடித்தனர். இவற்றில் சிறிய நீர் நிலைகளில் நீர் வெளியேறும் வழிகளினூடாக நீரை வெளியேற்றல், நச்சு இலைகள், கொடிகளை நீரில் இடுதல் போன்ற முறைகளில் மீன்களை பிடித்தனர். இது “கரகெமன“ என்று அழைக்கப்பட்டது.

## ஆடை அணிகலன்கள்

இலங்கை வேடர்களின் ஆடை அணிகலன்களில் இடுப்பிற்கு கீழ் ஆண்கள் அணிந்து வந்த “ரிட்டி“ என்கிற மரப்பட்டைகளால் ஆன ஆடை முக்கிம் பெறுகிறது. பிற்காலத்தில் ஆண்கள் கோவணம் என்கிற துணியால் ஆன மறைப்பினையும் பெண்கள் இடுப்பிற்கு கீழ் துணிகளையும் அணிந்தனர். கால ஓட்டத்தில் இவர்கள் சார்ந்து வாழுகிற இனக்குழுமங்களின் ஆடை வழக்கத்தையும் உள்வாங்கி சாரம், கவுண், சேலை போன்றவற்றை அணிவதற்குப் பழகிக் கொண்டுள்ளனர். ஆபரணங்களாக யானைத்தந்தம், புலிப்பல், மான்கொம்பு, மற்றும் கருங்காலி மரத்தில் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்து வந்தனர். அண்மைக்காலத்தில் விதைகளை கொண்டு கோர்க்கப்படுகிற மாலைகள் மற்றும் இமிரேசன் ஆபரணங்களையும் அணிவதற்கு பழகியுள்ளனர்.

தொடரும்....






அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



II ஆம் பக்கத் தொடர்ச்சி...

# அப்பாமார் அடங்கத் தொடங்க அம்மாமார் ஆட்சியைக் கைப்பற்றுவர்

கேள்வி வேற, டொக்டர் உம்மை உடம்பைக் குறைக்கச் சொல்லிறார் ஆனா உம்மடை அம்மா என்னெண்டால் நான் சாப்பாடு தராம் நீர் மெலிஞ்சுட்டீராம் "எண்டு சொல்லீட்டு விடை எதிர்பார்க் காமலே கோல் உரவ ஆகீடும். இதை எல்லாம் கேட்டும் கேக்காத மாதிரி இருக்கிறது தான் அப்பாக்களின் சா(சோ)தனை.

வீட்டை பொம்பிளை பிள்ளைகள் இருக்கும் வரை அப்பாக்கள் அதிகாரம் செய்வதே மகள் எண்ட ஐ.நா சபையை நம்பித்தான். சண்டை வரேக்க அப்பாவி ன்டை பக்கம் கொஞ்சம் கூட ளரிழசவ இருக்கும். மகள்மாரைக் கட்டிக்குடுத்த உடனயே அம்மா மார் மீண்டும் இழந்த ஆட்சியை பிடிச்சிடிவினம். இதுவரை எல்லாம் தெரிந்திருந்த அப்பா இப்ப அம்மான்டை கணக்குப்படி ஒண்டும் தெரியாதவர்.

கட்ட முதல் பொம்பிளைப்பிள்ளைகள் அப்பாமாரோடேம் ஆம்பிளைப்பிள் ளைகள் அம்மாமாரோடேம் ஒட்டி இருந் தாலும். கட்டிப் போனாப்பிறகு அப்பா மாருக்கு மகனோட இருக்கிறது தான் comfortable. மகன் மார் கேக் காமலே பாத்துச் செய்வாங்கள், அதோட மருமோள்மாருக்கு மாமாமாரோட ஒத்துப் போகும். மனிசனிட்டைப் போய் "உங் கடை அப்பா பாவம், அம்மா என்ன சொன்னாலும் பேசாமக் கேப்பார், அம்மா தான் அவரைப் போட்டு பாடுபடுத்திறா" எண்டு சொல்லித் தன்ரை புருசனுக்கு பாடம் எடுப்பினம். மகனோடயோ இல்லா ட்டி மகளோடயோ இருக்கப் போகேக்கேம் சம்மந்திமார் இருக்கினமா எண்டு பாத் துத்தான் போறது. சம்மந்திமாரை சபை சந்தீல சந்திக்கேக்க சந்தோசமாக் கதை ச்சாலும் ஆனால் ஒரே வீட்டை இருந் தால் சண்டை தான். வளக்கும் வரை மூத்த ஆம்பிளைப் பிள்ளையும் கட்டிக் குடுத்தாப்பிறகு " அவன் பாவம்" எண்டு கடைசி ஆம்பிளைப்பிள்ளையிலேம் தான் அம்மாமாருக்கு விருப்பம். ஆனா லும் மனிசன் மார் இருக்கும் வரைதான் அம்மாமார் மகனுடன் இருப்பினம் அவருக்கு ஏதும்மெண்டால் அதுக்குப்பி றகு கூப்பிடாமலே மகளிட்டைப் போயிடு வினம்.



ஊர் தாண்டி, கடல் தாண்டிக் கட்டிக்குடு த்திட்டு " அய்யோ நான் பிள்ளையோட போய் இருக்கப்போறன்" எண்டு அம்மா தொடங்கி அந்தாள் ஏதும் சொல்லமுதல் ஓடிப்போய் அங்க இருந்து பாத்திட்டு கடைசீல சுடலை ஞானம் வர "கோம் பையன்மணலில தான் வேகவேணும்" எண்டு ஊரோட வந்திடிவினம். பெத்த தெல்லாம் கட்டிப் போய் தாங்கள் பெத்த தைப் பாக்கத் தொடங்க, வீடு வெளிச்சிப் போய் தனிச்சு இருக்கிறாக்களுக்கு வரும் ஒரு பயம் ஏதும் ஆருக்கும் நடந்தா எண்டு. இப்பவும் புறுபுறுக்கிற அம்மா " எனக்கு ஏதும் நடந்தால் இந்தாள் பாவம் தனிய இருக்காது, என்னை மாதிரி ஒருத் தரும் பாக்க மாட்டினம்" எண்டு கவலை வர திருப்பி ஒருக்காப் பிள்ளைகளிட்டைத் திருப்பிப் போவமோ எண்டு யோசிக்கத் தொடங்குவா ஆனாலும் போமாட்டினம். ஏனெண்டால் இவை இப்பதான் தங்களு க்கு எண்டு வாழுவினம், பிள்ளைகளோட போய் இருந்தா அது இருக்காது.

அப்பாவும் அம்மாவும் சண்டை பிடிக்கி றது பெரிசா பிள்ளைகளுக்கு தெரியாது, தெரிஞ்சாலும் கணக்கெடுக்காதுகள். தனிய இருக்கேக்க சண்டைதான் பொழுது போக்கா மாறீடும்.ஆனால் அம்மாமா ருக்கு மாத்திரம் அந்தக்காலத்தில இருந்து நடந்தது எல்லாம் பொருள், இடம், காலத்தோட ஞாபகம் இருக்கும் . தேவை வரேக்க deep memoryஐ கிண்டி எடுப்பினம். தேவேல்லாத ஒண்டுக்குச் சண்டை பிடிச்சு காகம் இருக்கத்தான் பனம்பழம் விழுந்ததெண்டு தொடங்கி, முழங்காலுக்கும் மொட்டைத்தலைக்கும் முடிச்சுப் போட்டுக் கதைசொல்ல அந் தாள் அதுக்கு ஒண்டும் சொல்லாமல் இருக்கும். அதுக்கும் " உங்கடை ஆக்கள் எண்டால் ஒண்டும் சொல்லாதேங்கோ" எண்டு பேசீட்டுக் கொஞ்சம் மூக்கைச் சிந்த , ஆனாலும் மாட்டிறது வீட்டுக்கு எப்போதாவது வாற ஒரு சொந்தம். வந்த வரை இருத்தி வைச்சு "கொஞ்சம் பொறு கோப்பி தாறன்" எண்டு சொல்லிப் போட்டு ," எனக்கு பொன்னம்பலத்தார்டை மகனை பேசினது நான் தெரியாம இந்தா ளைக்கட்டினது" எண்டு தொடங்குவா , இதுவரை சும்மா இருந்த அந்தாள் "நீதான் எண்டு தெரிஞ்சிருந்தா நானும் கட்டி இருக்க மாட்டன், லீவில வந்து நிக்கேக்க குஞ்சிஆச்சி சொன்னதுக்கு ஆரெண்டு பாக்காமல் நான் கட்டீட்டன்" எண்டு விட மாட்டார். வந்த ஆள் தான் பாவம் தலைப்பில்லா விவாதத்தை தனி ஆளா நிண்டு கேக்கவேணும். வந்த ஆள் ஏன் வந்தனான் எண்டதை மறந்து, கடைசீல தீர்ப்பில்லாச் சண்டையின்டை கதையைக்கேட்டுக் கொண்டிருந்திட்டு தாங்கேலாமல் ஒரு போன் கோல் வந்த மாதிரி எழும்பித் தப்பி ஓட வெளிக்கிட "இந்தா" எண்டு ஒரு வாழைப்பழச் சீப் பைக் குடுத்திட்டு, " சரி போட்டு வா, அடுத்த முறை வரேக்க நாங்கள் இருப்பமோ தெரியாது" எண்டு ஒரு ளநவெைஅநவெ வசனமும் சொல்லி விடுவினம்.

அந்தாள் இருக்கேக்க ராங்கியா தனக் கெண்டு ஒண்டும் பிள்ளைகளின்டை இதுவரை கேக்காத அம்மா கடைசிக் காலங்களில " எனக்கு ஏதும் நடந்தா அப்பாவைக் கவனமாப் பாக்கோணும் "எண்டதை மட்டும் சொல்லுவா. தான் இருக்கும் வரை தனக்கு மட்டும் தான் உரிமை எண்ட அகங்காரம், இல்லாத நேரத்தில தன்னை மாதிரி அவரைப் பாப் பினமோ, அவர் தனியச் சமாளிக்கமாட் டார் பாவம் எண்டு மனிசி கவலைப்படுற தெல்லாம் எல்லாருக்கும் விளங்கத் தொடங்கும்.

மனிசன்மாருக்கு தங்கடை மனி சிமார் வருத்தம் எண்டு சொன்னால் பயம் அதால வருத்தம் சொல்லாமலே, அடிக்கடி டொக்டிரட்டை கொண்டேக்காட டுவினம். ரெண்டு பேருக்கும் பிறப்பால் வராமல் பிணைந்ததால் வாழ்க்கையில் வந்த இந்த உறவு தொடரும் கதையாக இருக்கவேண்டும் எண்டதுதான் எல்லா ரின்டை ஆசையும்.

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

தாயகத்திலிருந்து வெளிவரும் தமிழர் பொருண்மியம்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பெற்றுக் கொள்ள QR code இனை scan செய்து whatsapp குழுவில் இணையுங்கள்

+94 777 304 010
+94 70 267 5575






# நாளைய மாற்றம் திரைப்பட இயக்குனர் சிபோவின் முயற்சி வீண்போகவில்லை



**வான்மதி** (யேர்மனி)

வெளியீடு : 01.09.2024 - Bochum, Germany

நாம் பிறந்தது முதல் காதில் கேட்டு வளர்ந்தது இலங்கை வானொலியில் ஒலித்த இந்திய சினிமாப் பாடல்களும், திரைக்கதை வசனங்களுமே. நாம் தேடிச் சென்று சினிமாக் கொட்டகையில் விரும்பிப் பார்த்து இரசிப்பது இந்திய சினிமாப் படங்கள். இந்த இரசனையுடன் வளர்ந்த எமக்கு, ஜெர்மனியில் ஒரு இயக்குனர் சிபோ சிவகுமாரன் படம் எடுக்கின்றார் என்றால், அதைப் பார்க்கும் ஆவல் இருப்பது ஒன்றும் ஆச்சரியம் இல்லை.

இந்த முழுநீளப் படத்தின் இயக்குனர், கதாசிரியர் சிபோ சிவக்குமாரன் அவர்கள் Degital Film Making & Animation கல்வியை ஜெர்மனியில் கற்றவர். இதற்கு முன்னமே ஜெர்மனி வாழ் மக்களை நடிகர்களாக்கி ஒரு தொடர் நாடகத்தைத் தயாரித்து வெளியிட்டவர். அவரின் திறமையைக் கண்ணுற்றவர்களின் ஊக்கம் நிறைந்த பேச்சினால், நாளைய மாற்றம் என்ற திரைப்படத்தைத் தயாரித்தார். இப்படம் இலங்கை, பரீஸ், ஜெர்மனி ஆகிய இடங்களில் படமாக்கப்பட்டுள்ளது. இப்படத்தின் இசையை பிரபாலினி பிரபாகரன், பிரசாந்த் கிருஷ்ணப்பிள்ளை, சு.வின் பிரசாந்த் ஆகியோர் வழங்கியிருந்தனர். mastering, dubbing பாரத் சிவநேசன் செய்திருந்தார். இது பெரிய திரையிலே படம் திரையிடப்படுவதற்குச் சாதகமாக அமைந்தது. பாடல்களைத் தயாநிதி தம்பிஜயா, பொத்துவில் அஸ்மின், சஞ்சய் சிவா அவர்கள் எழுதியிருந்தார்கள். பாடகர் ஸ்ரீனிவாஸன் அவர்களும் ஒரு பாடல் பாடியிருந்தார். சிறந்த கூட்டு முயற்சியில் இந்தத் திரைப்படம் வெளிவந்திருக்கின்றது.

நன்றியுணர்வு மேலோங்கிய சிபோ சிவக்குமாரன் அவர்கள் தன்னுடைய தயாரிப்பு, இயக்கத்தில் வெளியான தொடர்நாடகத்தில் நடித்த நடிகர்களுக்கு இத்திரைப்படத்திலும் சிறு காட்சிகளில் நடிப்பதற்கு ஏற்ற வகையில் கதையை அமைத்திருந்தார். ஒரு நடிகர் பட்டாளத்தை நடிக்க வைத்து ஒரு திரைப் படத்தை இயக்குவது என்பது இலகுவான காரியம் இல்லை. இந்த முயற்சியில் சிபோ சிவக்குமாரன் அவர்கள் வெற்றியடைந்துள்ளார் என்றே சொல்லலாம். யாருடைய நடிப்பையும் குறை கூற முடியாமல் இருந்தது. இலங்கையில் நடித்த நடிகர்கள் சிறப்பான முறையில் நடித்திருந்தார்கள். அங்கு நடைபெற்ற படைப்பிடிப்புக்கு அவர்களின் ஆதரவு



கிடைத்திருக்கலாம் என்பதை ஊகிக்கக் கூடியதாக இருந்தது.

நடிகர்கள் அனைவருக்கும் டப்பிங் கொடுக்கப்பட்டிருந்தது. சில இடங்களில் இதை அறியக்கூடியதாக இருந்தது. திரையில் வெளியிடப்படும் போது H.D Quality ஐ எதிர்பார்க்க முடியாது. கதை நகர்வு சிறப்பாக இருந்தாலும் தன்னுடைய அனுபவங்கள் அனைத்தையும் இத்திரைப்படத்தில் கொண்டு வந்துவிட வேண்டும் என்னும் நோக்கம் வெளிப்பட்டது. இலங்கையில் ஒரு ஆணைக் காதலித்த பெண், வெளிநாட்டு ஆசையுள்ளவரும், சாதிப் பாகுபாடு பார்ப்பவருமான தாயின் விருப்பத்தில் ஜெர்மனியில் வாழுகின்ற மனைவியை இழந்த ஒருவனைத் திருமணம் செய்து வாழுகின்ற போது ஏற்படுகின்ற பிரச்சினைகளைப் படமாக்கியிருக்கின்றார். வக்கீலுடன் பித்தலாட்டம் செய்கின்ற பகுதியே கதையில் தொய்வைக் கொண்டு வந்தது. இலங்கையில் இருக்கின்ற மக்கள் வெளிநாட்டில் வாழுகின்றவர்களைப் பற்றிக் கொண்டிருக்கும் மனநிலையை அழகாகக் கொண்டு வந்திருக்கின்றார்.

சாதிப்பிரச்சினையை தன்னுடைய தொடர் நாடகத்தில் கொண்டு வந்தது போலவே இத்திரைப்படத்திலும் கொண்டு வந்திருக்கின்றார்.பெண்களை ஆண்கள் எவ்வாறான நிலையிலே வைத்திருக்கின்றார்கள் என்பதைக் கதாநாயகனின் நடைமுறை என்று பொய்யாகக் காட்டுகின்ற உத்தியைக் கையாண்டு வெளிக் கொண்டு வந்திருக்கின்றார். பெண்ணிய சிந்தனை வெளிக் கொண்டு வருவதாகக் காட்டி பெண்களின் தில்லுமுல்லையே இப்படத்தில் காட்டியுள்ளார் என்று அறியக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையில் நடந்து முடிந்த இனப் படுகொலையைக் காட்டுவதற்காகவே கதையை வலிந்து புகுத்தியிருப்பது புரிந்தது. இது தற்போது இந்திய இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள் செய்கின்ற உத்தியே. திரைப் படங்களுடன் பயணம்செய்கின்ற எமக்கு இது தெரிந்ததே. யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் கதை நகர்வது பழக்கப்படாததாக இருந்தாலும், சிபோவின் முயற்சியை எப்போது உலகம் ஏற்றுக் கொள்ளும் என்பது கேள்வியே. சொல்ல வேண்டிய பல விடயங்கள் இத்திரைப்படத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

பணப்பசையுள்ள தயாரிப்பாளர் கிடைத்தால், தொடர்ந்தும் சிபோ இதுபோன்ற நல்ல படங்களை எமக்குத் தருவார் என்பதில் சந்தேகமில்லை. அவருக்கு இப்படத்தில் போலவே நடிகர்களின் ஒத்துழைப்பும் கிடைக்க வேண்டும். தன்னுடைய வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் சிபோவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். சிபோவின் முயற்சி வீண்போகவில்லை



Nandys Restaurant Bochum, Kortumstraße 9, 44787 Bochum/GERMANY | Tel: 0049 234 610 68 540

அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



**சிற்சபேசன்** (நியூசிலாந்து)

New Zealand Parliament celebrates majority women MPs சமத்துவமான சமதர்ம சிந்தனை என்பது நியூசிலாந்து சமூகப் பரப்பிலே இன்று நேற்று ஆரம்பமானதல்ல. அதுகூட, சிந்தனையாளர்களின் வட்டத்திற்கு வெளியே, சாதாரணமானவர்களிடையேயும் பரவலாகக் காணப்பட்டதாகும்.

நியூசிலாந்தின் பூர்வகுடி மவோரி மக்களாகும். ஐரோப்பியர் குடியேறிகளா கும். ஐரோப்பிய காலனித்துவத்தை மனப்பாங்கு ஆல்போல் தழைத்து, அறுகு போல் வேரூன்றியதாகக் கருதலாம்.

அதிலே, பெண்ணுரிமைக்குரல் நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே பெண்ணியக் குரல்கள் நியூசிலாந்தில் உரத்து ஒலிக்க ஆரம்பித்தன. ஊதியத்தில் ஆண்-பெண் பாகுபாடு களையப்படவேண்டும். பெண்களுக்கு எதிரான வன்முறை நிறுத்தப்படவேண்டும். திருமணச்சட்டம், விவாகரத்து, ஒய்வூதியம் போன்றவற்றில் பாகுபாடு நீக்கப்படவேண்டும் என்பதான கோஷங்கள் அதிகரித்தன.

அதுவே, சமத்துவத்தை அவாவுகின்ற நியூசிலாந்து சமூகத்தின் நாற்றுமேடையாகியது. பெண்உரிமைஎன்பதுவெற்றுக்கோஷங்களுடன் முடிந்துவிடவில்லை. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை வெறும் வார்த்தை ஜாலமாக நியூசிலாந்து கடந்துவிடவில்லை. அதனாலேயே, ஆண் - பெண் சமத்துவம் என்பதுடன் மட்டுமே தேடல் நின்றுவிடவில்லை. இனம் சார்ந்த சமத்துவம், மொழி சார்ந்த சமத்துவம், மதம் சார்ந்த சமத்துவம் என பல்வேறு நிலைகளிலும் சமத்துவம் குறித்த தேடல் தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. இவற்றிலே நியூசிலாந்துக்கொண்டிருக்கின்றது. பெண் உரிமை தொடர்பிலான, ஐநா தீர்மானங்களின் உள்ளார்ந்த கருத்துகளை, நியூசிலாந்து உள்வாங்கிக் கொண்டிருக்கின்றது.

திண்ணை வேதாந்தம் பேசுவது நியூசிலாந்தின் மரபல்ல. ஊதியத்தில் ஆண் - பெண் பாகுபாடின்மை தொடர்பான சட்டமூலத்தை நியூசிலாந்து நாடாளுமன்றம் 2018ல் ஏகமனதாக நிறைவேற்றியது.

தாய்மையுற்ற பெண்ணுக்கு கருகலைப்பு ஏற்படுகின்றபட்சத்தில், ஊதியத்துடன் கூடிய விடுமுறை கிடைக்கக்கூடிய சட்ட ஏற்பாட்டை நியூசிலாந்து நாடாளுமன்றம் 2021ல் நிறைவேற்றியது. அரசியல் கட்சிகளின் தலைமைப் பொறுப்பில் ஆண் - பெண் சமத்துவம் பேணப்படுகின்றது. தலைமைப் பொறுப்பில் பெண் இருக்கும்போது, துணைத்தலைமை ஆணாக இருப்பதுவும், தலைமைப் பொறுப்பில் ஆண் இருக்கும்போது, துணைத்தலைமை பெண்ணாக இருப்பதுவுமான மரபு கொண்டாடப்படுகின்றது.

மேலும் ஒரு படிநிலைகூட எட்டப்படுள்ளது. ஆணும் பெண்ணும் இணைந்த இணை-த்தலைமை முறையை சிலகட்சிகள் வகுத்திருக்கின்றன. நியூசிலாந்து நாடாளுமன்றத்திலே ஆண் - பெண் அங்கத்துவர்களின் எண்ணிக்கை அண்ணளவில் சமானமாக அமைந்துவிடுகின்றது. நியூசிலாந்தின் அரச துறைகளின் தலைமைப் பொறுப்பிலுள்ளவர்களின் எண்ணிக்கையில் ஆண் - பெண் பங்கு பெருவெட்டில் சமானமாக அமைந்துவிடுகின்றது.

# உலகிலேயே முதன்முதலில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கிய தேசம்




பூர்வகுடிகள் எதிர்த்தனர். காலவோட்டத்தில் இரண்டு தரப்பினரிடையே இணக்கப்பாடு ஏற்பட்டது. அதன்பின்னரும்கூட, நில ஆக்கிரமிப்புகள் இடம்பெற்றன. அதனால் நேரடி மோதல்கள்கூட நடைபெற்றன. இவ்வாறானதொரு உக்கிரமான காலகட்டத்தை கடந்துவருவதற்கு, சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே காணப்பட்ட சமதர்ம சிந்தனையே அத்திவாரமாகும். தானும் வாழவேண்டும். அடுத்தவரையும் வாழவிட வேண்டும் என்னும் சிந்தாந்தமே நியூசிலாந்து சமூகத்தின் மையவிசை என்று சொல்லலாம். அதனாலேயே, இனம் -மதம் - மொழி - பாலினம் உள்ளிட்ட பல்வேறு நிலைகளிலேயும் சமத்துவத்தை வளர்க்கும்

அன்றைய காலகட்டத்திலேயே, நியூசிலாந்து தேசமாக எழுச்சிகொள்ள ஆரம்பித்திருந்தது. பூர்வகுடிகளான மவோரிகளும், கடல்கடந்து வந்திருந்த ஐரோப்பியர்களும் கனவுகளிலே பங்காளிகளானார்கள். கனவு மெய்ப்படுவதற்கு அவாவினார்கள். ஒன்றுபட்டாலே, உண்டுவாழ்வு என்பதை தெரிந்துகொண்டனர். சமூக வாழ்விலே சமத்துவமே ஆரம்பப் புள்ளி என்பதைப் புரிந்துகொள்ள ஆரம்பித்தனர். பழமைவாதிகளின் குரல் ஈனஸ்வரமாகியது.

அதனாலேயே, இற்றைக்கு 130 ஆண்டுகளுக்கு முன்னர், 1893ம் ஆண்டு செப்டெம்பர் 19நாள் பெண்ணுக்கு வாக்குரிமை வழங்கும் சட்டம் நியூசிலாந்தில் நிறைவேற்றப்பட்டது. அதன்மூலமாக, உலகிலேயே முதன்முதலில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கிய தேசம் என்னும் பெருமை நியூசிலாந்துக்கு கிடைத்தது. உலகத்திற்கோர் புதுமையாகியது.


கண்டடைந்துள்ள முன்னேற்றங்கள் எளிதாக அடையப்பட்டவை அல்ல.

“மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம். வைய வாழ்வு தன்னில் எந்த வகையினும் நமக்குள்ளே தாதர் என்ற நிலை நிலைமை மாறி, ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே“ என்னும் எட்டயபுரத்துக் கவிஞனின் ஆத்மார்த்தமான கருத்தே நியூசிலாந்து சமூகச்சிந்தனையிலும் இழையோடியிருப்பதைக் கவனிக்கமுடிகின்றது.

ஆணும் பெண்ணும் நிகர் எனக் கொள்வதாலேயே அறிவில் ஓங்கி தேசம் தளைக்கமுடியும் என நியூசிலாந்து சமூகம் நம்புகின்றது. பாலினச் சமத்துவம், பெண் வலுவூட்டல், பெண் ஒரு மனுஷி என்னும் கோட்பாடுகளே, சமூகத்தின் வளர்ச்சிக்கான படிக்கட்டுக்கள் என்பதை நியூசிலாந்து அரிச்சுவடியாகக் கொண்டிருக்கின்றது. அதனையே தேசியத் திட்டமிடலிலும் வரி-

28 ஆம் பக்கம் பார்க்க...




**வெற்றிமணி திருமண சேவை**

யேர்மனியில் கற்றிங்கன் நகரில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உள்ள சைவ, வேளாள குல 30 வயது பெண்ணிற்கு ஏற்ற பட்டதாரி மணமகனை தற்போதைய பாடசாலையிலேயே கற்பிக்க கூடிய தூரத்தில் வரனை எதிர்பார்க்கும் பெற்றோர்.
தொடர்புகளுக்கு: 4915774318528

யேர்மனியில் Wirtschaftsingenieurin ஆக படிப்பை நிறைவு செய்த 35 வயது நற்குணமுள்ள சைவ வேளாள பெண்ணிற்கு பொருத்தமான பட்டதாரி மணமகனை யேர்மனியில் எதிர் பார்க்கும் பெற்றோர்
தொடர்புகளுக்கு: 4915774318528

MOBIL: 0091-9841026997| Email: kbr0452@yhoo.co.in



# கவலைகளால் எவை மாறும்?



பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)

இந்த உலகில் பிறந்த அனைத்து உயிர்களுக்கும் இன்பமும் துன்பமும் பொதுவானதாகும். இன்பத்தைக் கொண்டாடக் கூடிய உயிர்களால் ஒரு போதும் துன்பத்தைச் சுலபமாக எடுத்துக்கொள்ள முடியாதென்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை. வாழ்வின் பல்வேறு கட்டங்களிலும் கவலை மிக்க சூழ்நிலை களை நாம் கடந்தாக வேண்டியுள்ளது. எதிர்பாரா ஏமாற்றங்கள், சவால்கள், துரோகங்கள், இழப்புகள் என அனைத்தும் சேர்ந்து நம்மை விரக்திக்குள்ளாக்கி கவலைகளை அதிகரிக்க வைக்கின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் நாம் நினைவில் கொள்ளவேண்டியதெல்லாம் கவலைகளால் எந்த மாற்றமும் வரப்போவதில்லை என்பதுதான்.

கவலையானது நமது ஆற்றலைக் குறைக்கவல்லது. கற்பனைத் திறனைத் தவறாகப் பயன்படுத்துதலே கவலையின் உச்சகட்ட நிலையாகும். கவலைப்படுவதால் எமது உடலும் ஆரோக்கியமும் மாறுமே தவிர சிக்கல்கள் தீர்வதேயில்லை. தீரா சிக்கல்கள் நேரும்போதெல்லாம் உள்ளம் தானாகவே கவலைகொண்டு துன்பத்தைத் தேடும். சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழிகள் எப்போதும் இருந்துகொண்டுதான் இருக்கும் ஆனால் கவலைகளில் காலம் கழிவதால் நம்மால் சரியான தீர்வைச் சிந்திக்க முடியாமல் போய்விடும்.

வாழ்க்கை குறித்த நம் எதிர்பார்ப்புகள் நிறைவேறாது போகும்போது கவலைகளும் சூழ்ந்துகொள்கின்றன. நம்முடைய ஆசைகளை ஆராய்ந்து அவற்றைச் சரியாக மாற்றி உன்னதமான இலக்குகளை வைத்துக்கொள்வதால் கவலைப்படு வற்கான சில காரணங்களை நாம் குறைத்துக்கொள்ளலாம். கவலையானது நம் ஆற்றலை விழுங்கிக்கொண்டு நம்மைச் செயல் திறனற்றவர்களாக மாற்றிவிடும் சக்தி கொண்டது. தீர்வுகாணத் தெரியாமல் வருந்திக்கொண்டு நாளை தொடரவிருக்கும் துன்பத்தை மாற்ற விடாமல் இன்றிருக்கும் நிம்மதியைக் கெடுப்பதே கவலையெனும் உயிர்கொல்லியின் செயலாகும். அந்த உயிர்கொல்லியைச் சாகவிடாமல் இயக்கிக்கொண்டிருப்பது மனமெனும் குரங்காகும். அந்த மனதை நாம் கட்டுப்படுத்தும் வல்லமை மிக்கவர்களாக இருந்தால் கவலைப்படுவதால் எந்தப் பயனும் இல்லை என்னும் பேருண்மையை உணர்ந்து கவலைக்குக் காரணமானவற்றிற்குத் தீர்வு காண முடியும். நம்மால் மாற்ற முடியாத பற்றியங்களுக்காய் கவலைப்படுவதை விட அதை பக்குவத்தோடு ஏற்றுக்கொண்டு சாமர்த்தியமாகச் செயல்படுவதாலேயே அதற்கான தீர்வுகளை நாம் கண்டறிய முடியும்.

உங்கள் மனதைக் கட்டுப்படுத்தக்கூடிய சக்தி உங்களிடமே உள்ளது. வெளிக் காரணங்கள் உங்களைப் பாதிக்க அனுமதிக்காத வரையில் அதன் கட்டுப்பாடு உங்களிடமே உள்ளது. எவையெல்லாம் உங்களைப் பாதிக்க அனுமதிக்கிறீர்களோ அவையே உங்களைக் கட்டுப்படுத்தும். உங்கள் சிந்தனைகளில் நிறைந்து நிற்கும். உங்களை எது சேர வேண்டுமென்பதை நீங்களே தேர்ந்தெடுக்கும்போது தேவையற்ற அனைத்துக்கும் கவலைப்பட வேண்டியதில்லை. கவலைகளிருந்து மனிதர்கள் வரை நீங்கள் அனுமதித்தால் மட்டுமே உங்களை ஆட்கொள்ளும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

ஒரு கப்பலின் வெளியே உள்ள நீரால் அதை ஒருபோதும் மூழ்கடித்துவிட முடியாது. அதே நீர் கப்பலின் உள்ளே சென்றால் அதன் அளவைப் பொறுத்து அந்தக் கப்பலின் செயல்திறனைப் பாதித்து அதனை மூழ்கடித்துவிடும். அதே போன்றுதான் மனிதர்களுக்கும் தம்மைச் சூழ இருக்கும் சிக்கல்களை வெளியே வைத்திருக்கும் வரையில் பெரிதாகப் பாதிப்பு இருக்காது. எப்போது உங்களை வருத்தும் எண்ணங்களைச் சிந்தனையில் அனுமதிக்கிறீர்களோ அப்போது உங்கள் செயல்திறனைப் பாதித்து உங்களைக் கவலைகளால் மூழ்கடித்துவிடும்.

வாழ்வில் நடைபெறும் அனைத்தையும் மாற்றும் வலிமை நமக்கில்லை. இயற்கையின் காரணமாக நடக்கும் சிலவற்றை நாம் எதிர்கொண்டுதான் ஆக வேண்டும். கவலைப்படுவதற்குப் பதிலாக அவற்றை எவ்வாறு எதிர்கொள்வதெனச் சிந்தித்தால் நம் உள்ளத்தின் அமைதியைக் காத்துக்கொண்டு நிம்மதியாக வாழ முடியும். கவலைகளால் எவையுமே மாறப்போவதில்லை.

# ஆரோக்கியமும் ஆனந்தமும்

ஆரோக்கியமும் ஆனந்தமும் நிகழ்வு (24.08.24) Frankfurt நகரில் சிறப்பாக நடைபெற்றது. ஆடல்,பாடல் ஆரோக்கியம் பற்றிய பேச்சு, பட்டிமன்றம் போன்ற நிகழ்வுகள் சிறப்பாக நடை பெற்றன. ஆவண ஒளிப்படக்காட்சியும், நூல் வெளியீடும் நடைபெற்றது.

ஆரோக்கிய விழிப்புணர்வு இயற்கை உணவுகளை எடுப்பதால் உள்ள நன்மைகளை அறிய முடிந்தது. இதில் குறிப்பிடக் கூடிய விடயம் ஒரு இசைநிகழ்ச்சி நடைபெற்றது. மிக மகிழ்வாக இருந்தது. பழைய பாடல்களை பாடி அசத்தினார்கள். அந்நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்தது. நீண்ட நாட்களுக்குப்பின் பாடல்களைக் கேட்டது மகிழ்வைத்தந்தது. அடுத்து,""மகிழ்சியான வாழ்விற்கு அவசியம் தேவையானது சொத்தா? சொந்தமா? ""எனும் பட்டிமன்றத்திற்கு தமிழ்மணி நகுலா சிவநாதன் தலைமை ஏற்று நடாத்தினார். இதில் சங்கீத ஆசிரியை கலைவாணி ஏகானந்தராசா, ஆசிரியர் வசுந்திரா சிவசோதி, சொந்தம் அணியிலும் வசந்தம் இயற்கைப் பண்ணை நிறுவனர் திரு சக்திவேல் அவர்களும், அறிவிப்பாளர் முல்லை மோகன் அவர்களும் சொத்து அணியிலும் சிறப்பாகப் பேசினர்.





இந்நிகழ்வை சிறப்பாக நடாத்திய Sai natur prouduct உரிமையாளர்கள் றிசாந்தி நவநீதன் தம்பதிகளுக்குப் பாராட்டுகள்.







அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை கொண்டுவருவாரா அநுர குமார?

எதனையும் செய்ய முடியாது என்பது அவருக்கும் தெரியும். நாடாளுமன்றத்தில் உள்ள ஏனைய கட்சிகள் தமது திட்டங்களுக்கு ஆதரவளிக்க மாட்டார்கள் என்ற நிலையில்தான், நாடாளுமன்றத்தைக் கலைத்து அவசர பொதுத் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்ற தேவை அநுரகுமாரவுக்கு ஏற்பட்டது.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் தேசிய மக்கள் 113 உறுப்பினர்களாவது இருந்தால் மட்டுமே அவர்களால் ஆட்சியைக் கொண்டு செல்ல முடியும். பொதுத் தேர்தலில் அந்தளவுக்கு ஆசனங்களைப் பெறுவதற்கான முயற்சிகளை அவர்கள் மேற்கொள்வார்கள். 2020 ஓகஸ்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தேசியப் பட்டியல் மூலமான ஒரு ஆசனம் உட்பட மூன்று இடங்களை மட்டுமே தேசிய மக்கள் சக்தியால் பெற்றுக்கொள்ள முடிந்தது. அப்போது பெற்றதைவிட 100 ஆசனங்களாவது அதிகப்படியாகப் பெறவேண்டும் என்பதுதான் அநுரகுமாரவுக்கு தற்போதுள்ள நிர்ப்பந்தம்.

2019 ஜனாதிபதித் தேர்தலில் சுமார் இலட்சம் வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொண்ட அநுரகுமாரவால், தற்போது 56 இலட்சம் வாக்குகளைப் பெறமுடிந்தது. அதேபோல 113 ஆசனங்களைப் பெறுவது அவர்களுக்கு கடினமானதாக இருக்காது என்று ஜே.வி.பி. செயற்பாட்டாளர் ஒருவர் சுட்டிக்காட்டுகின்றார். அநுரவுக்கு சாதகமான அலை ஒன்றை செப்ரெம்பர் 21 ஜனாதிபதித் தேர்தலில் காணமுடிந்தது. இந்த அலை ஓய்வதற்கு முன்னதாகவே பொதுத் தேர்தலையும் நடத்தினால், அந்த வெற்றியை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுதான் அவரது



கருத்து! மறுபுறத்தில் பிரதான கட்சிகள் போயுள்ளன. சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி மட்டும்தான், அநுரவுக்கு நாடாளுமன்றத்தில் சவால்விடக்கூடியளவுக்கு இருக்கும். பாரம்பரிய கட்சிகள் எனச் சொல்லப்படும் ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே காணாமல் போயிருக்கின்றது. மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக் காணாமல் போகச் செய்துவிட்டார். அதேபோன்ற ஒரு நிலையில்தான் ராஜபக்ஷக்களின் பொது ஜன பெரமுனயின் நிலையும் இருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி மட்டும் சிறுபான்மையினக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்திருப்பதால், பொதுத் ஓரளவுக்கு சோபிக்கும். ஆனால், மற்றைய கட்சிகள் மீது மக்களும் நம்பிக்கை இழந்திருக்கின்றார்கள். அந்தக் கட்சிகளும் அரசியலில் தாக்கத்தைச் செலுத்தக்கூடியவையாக இல்லை. இவை அனைத்தும் அநுரகுமாரவுக்கு சாதகமான நிலைமைகள். நாடாளுமன்றத் தோ்தலில் தேசிய மக்கள் சக்தியால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை அநுரகுமரவுக்குக் கொடுத்திருக்கின்றது.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் தமது கட்சியின் சார்பில் ஒருவராவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவாக வேண்டும் என்ற இலக்குடன் செயற்பட வேண்டும் என்று அநுர விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பகுதிகளில் அவர்களுக்கு பாரிய வெற்றியை ஜனாதிபதித் தோ்தல் முடிவுகள் கொடுத்திருந்தன. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அவரால் அதிகளவு வாக்குகளைப் பெறமுடியவில்லை. ஜே.வி.பி.யினரது செயற்பாடுகள் தமிழ்ப் பகுதிகளை இலக்குவைத்ததாக இருக்கவில்லை என்பது இதற்குக் காரணம்.

தமிழ் மக்கள் எதிர்பார்க்குத் தீர்வை வழங்குவதற்கு அவர்கள் எந்தளவுக்கு தயாராவார்கள் என்பதும் இதிலுள்ள முக்கியமான பிரச்சினை. மாகாண சபைகளை தீவிரமாக எதிர்த்த ஜே.வி.பி.யினர் இப்போது அதனை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள். மாற்றம் ஒன்றுதான் மாறாதது சொல்வதற்கு ஏற்றவாறு தமது பழைய நிலைப்பாடுகள் பலவற்றை தேசிய மக்கள் சக்தி மாற்றிக்கொண்டிருக்கின்றது. அதில் பிரதானமானதுதான் மாகாண சபைகளை அவர்கள் இப்போது ஏற்பது. மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் அவர்களுடைய அணுகுமுறை எவ்வாறு இருக்கப்போகின்றது என்பதில்தான், தமிழ் மக்களின் நம்பிக்கையை அவர்கள் பெற்றுக்கொள்வது தங்கியிருக்கின்றது.

அரசியல் தீர்வு ஒன்பதை விட, அன்றாடப் பிரச்சினைகள் பலவற்றுக்கொன தீர்வையும் தமிழ் மக்கள் எதிர்பார்த்துள்ளார்கள். குறிப்பாக காணிப் பிரச்சினை, வெவ்வேறு தமிழ் மக்களுடைய காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றது. போர்க் குற்றங்களுக்கு இன்னும் பொறுப்புக்கூறப்படவில்லை. இது தொடர்பான சர்வதேச கடப்பாடுகளையும் ஏற்பதற்கு இதுவரையில் ஆட்சியிலிருந்த அரசுகள் தயாராக இருக்கவில்லை.

இவ்வாறு ஒரு பகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தீர்க்கப்படாதிருக்கும் நிலையில், அவற்றுக்குத் தீர்வு காணப்படாமல், சிங்கள மக்கள் எதிர்கொள்ளும் சிஸ்றம் சேஞ் ஒன்றை அநுரகுமா திசநாயக்கவினால் எவ்வாறு வழங்க முடியும்?







21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தப்பெல்லாம் தப்பே...

**செந்தழலாய் மோகத்தீ**
**செறிந்தவள் பார்வை**
**சுந்தரிபோல் புதுப்பொலிவில்**
**சோலையொடு மாறி**
**வைந்தழிக்கும் கோடைவெயில்**
**உட்டினத்தில் தோய்ந்தே**
**வருந்துகின்ற பெண்ணரவம்**
**வெம்மையது கொல்ல**

என்று மைவண்ணன் காவியத்தில் சூர்ப்பனகை பற்றி காப்பியக்கோ வடிக்கின்றார். இங்கு இராமன் சீதை கணவன் என்பதை அறிந்தும் இராமனை நாடிய சூர்ப்பனகைக் கதாபாத்திரம் மாசுள்ள பெண்களின் மனத்துக்கு ஒரு படிவமே.

இவ்வாறு புராணங்களும் காவியங்களும் கற்பிக்கும் முறை தவறிய பெண்களின் வாழ்க்கைக்கு காரணம் தப்பெல்லாம் தப்பே இல்லை. அது உள்ளத்தின் வெளிப்பாடு. அது எப்போது எப்படி மாறும் என்று சொல்ல முடியாது என்று வெளிப்படுத்துகிறது.

ஆனால், ஐம்பொறிகளை அடக்கும் போது ஐம்புலன்களும் அடங்கும். எமக்கு முன்னே விரிந்து கிடக்கும் அறிவியல், தொழில்நுட்ப உலகம் எம்முடைய பாதையை மாற்றப் பிறந்தது அல்ல. பாதையைச் சரியான வழிக்குக் கொண்டு செல்ல உதவி புரிய உருவாக்கப்பட்டது என்பதை உணர வேண்டும். ஒரு குடும்பம் சிதைந்தால், எதிர்கால மனிதர்கள் சிதைந்து போவார்கள். இதனால், உலகம் சிதையும். ■

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## உலகிலேயே முதன்முதலில்....

மூன்று தடவை பெண் பிரதமர்கள் தெரிவு செய்யப்படுள்ளனர். சமத் துவத்தில் மற்றுமொரு பரிமாணமும் கிடைத்திருக்கின்றது. ஆண் பிரதமராகப் பதவிவகிக்கும்போது, பெண் துணைப்பிரதமராகின்றார். பெண் பிரதமராகப் பதவிவகிக்கும்போது, ஆண் துணைப்பிரதமராகின்றார்.

அதுவே மரபாகவும் பேணப்படுகின்றது. இவ்வாறான, ஆண் பெண் சமத்துவம் சட்ட ஏற்பாடு அல்லது இடஒதுக்கீட்டின் அடிப்படையிலே நடைபெறுவதல்ல. மாறாக, ஆண் பெண் என்னும் தனிநபர்களின் திறமையின் அடிப்படையிலே ஏற்படுகின்ற சமத்துவமாக அமைகின்றது.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதனை சமூகம் நம்புவதன் அடிப்படையிலேயே, நியூசிலாந்தில் சமத்துவம் கொண்டாடப்படுகின்றது.

பெண்ணுரிமை என்னும் கோட்பா ட்டுடன் மட்டுமே நியூசிலாந்து திருப்தி கொள்ள வில்லை. சமத்துவமான சமூகத்தைக் கட்டியெழுப்புகின்ற இலட்சியத்தைப் பற்றிக் கொண்டிருக்கின்றது. அதன்மூலமாக, மானிடர் யாபேருமே சமம் என்னும் உன்னதத்தையே நியூசிலாந்து தேடுகின்றது. ■

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நீங்கள் உண்மையில்...

அவை நம் உடலில் வைட்டமின் உற்பத்தியில் பங்கு பெறுகின்றன. ஆனால், சில சமயங்களில் இவை மிகவும் தீயவையாக மாறி, நம் உடலில் செரிமானங்களை உருவாக்கும் ஆபத்தை ஏற்படுத்த முடியும். இதுபோன்ற பாக்டீரியாக்க ளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவது நம் உடலில் உள்ள வைரஸ்களின் மிக முக்கியமான வேலையாகும்.

ஒரு பாக்டீரியாவைப் பிடித்து அதன் உடலில் ஒரு சிறிய ஊசி போன்ற அமைப்பினூடாகக் குத்தி, அங்கே தனது னுயேு ஐ நுழைத்து, அந்தப் பாக்டீரியாவை ஒழிப்பதற்கான வேலையை உருவாக்கி விடுகின்றது. வேறு சில நேரங்களில், இந்த வைரஸ்கள் பாக்டீரியாக்களைக் கொல்லாது, மாறாக அவற்றின் உடலில் நுழைந்து உறங்கிக் கொள்கின்றன. பின்பு எதிர்பாராத நேரத்தில் அவற்றின் நோக்கத்தைச் சாதித்து, கொலை செய்ய ஆரம்பிக்கின்றன.

இந்த வைரஸ்களும் நம்மைப் போன்றே வாழ்வை விரும்புகின்றன. ஆகவே, சில வைரஸ்கள் பாக்டீரியாவை மாற்றிவிடுகின்றன, அதாவது பாக்டீரியாவுக்குச் சில புதிய பணிகளைச் செய்வதைக் கட்டாயப்படுத்துகின்றன. இவை குடலின் லேசான பூச்சுகளைக் காப்பாற்றுகின்றன அல்லது உணவில் உள்ள கார்போஹைட்ரேடுகளைச் சிதைக்கின்றன.

இதனால் நமது உடலில் வீக்கம் ஏற்படாமல் தடுப்பது போன்ற ஆரோக்கியமான செயல்பாடுகளை இவை செய்கின்றன. பொதுவாக வைரஸ்கள் என்றால் நம் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று நம்பியிருந்த நமக்கு, வரைஸ்களால் இவ்வளவு நன்மைகள் கிடைக்கும் என்பதை அறிய ஆச்சரியமாக இல்லையா? சுருக்கமாகச் சொல்லப்போனால் நமக்கு வைரஸ்கள் தேவை, அவற்றுக்கு நம்மால் வாழ்க்கை! ■

10 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தலைகீழாக வைக்கப்பட்டிருந்த...

பெயரை வைத்திருப்பதும். இந்த விடயங்கள் எல்லாம் பிரஞ்சுப் புரட்சியின் தொடர்ச்சியை நாங்கள் இன்னும் நடத்துகிறோம் என்பதன் சான்றுகளே. பிரஞ்சுப் புரட்சி அடித்தட்டு மக்களாலேயே எடுத்தாளப்பட்டது. அப்படியாகவே அந்த உரத்தோடு தான் உழைக்கும் மக்கள் இன்றும் அங்கே வாழ்கின்றார்கள். நாங்கள் எங்கள் புரட்சியை முடித்து வைக்கவில்லை. அவை வடிவங்கள் மாறி தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. எப்போதும் கீழ்த்தட்டில் இருக்கும் மக்களே இவைகளை எடுத்துச் செல்வர். இதனையிட்டு நான் பெருமை கொள்கிறேன் என்றார். எனது மனம் நெகிழ்ந்தது. ஆச்சரியப்பட்டேன். அவருக்கு வாழ்த்துச் சொன்னேன்.

அந்த மனிதரிடம் இருந்து விடைபெற்று அடுத்த கிராமத்திற்கு சென்றோம். அடுத்துச் சென்ற கிராமம் அழகே உருவாய் மலையொன்றில் சொருகப்பட்டிருந்தது. ■


07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## புட்டினின் போர்க்கால வேண்டுதல்!

திட்டமிட்டு உள்ளார்.இது சீனாவைத் தொடர்ந்து ரஷ்யாவின் இராணுவத்தை உலகின் இரண்டாவது பெரிய இராணுவமாக மாற்றும். உக்ரைன் போரில் உயிரிழப்புகள் :உக்ரைன் போரில் தொடர் உயிரிழப்புகள் அதிகரித்து வரும் நிலையில், ரஷ்ய பெண்களை எட்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளை பெற்றுக்கொள்ளுமாறு கடந்த வருடம் புட்டின் வலியுறுத்தி இருந்தார். ரஷ்ய பெண்கள் பெரிய குடும்பங்களைக் கொண்டிருப்பதே வரவிருக்கும் தசாப்தங்களில் எங்கள் இலக்கு என்றும் ரஷ்ய அதிபர் கூறியிருந்தார். ரஷ்யப் பெண்கள் எட்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்று, பெரிய குடும்பங்களாக மாற்றுமாறு விளாடிமிர் புடின் வலியுறுத்தினார். சோவியத் உடைவின் பின்னர் 1990 களில் இருந்து ரஷ்யாவின் பிறப்பு விகிதம் சீராக குறைந்து வருகிறது. ரஷ்ய மக்கள் தொகையை அதிகரிப்பது வரவிருக்கும் தசாப்தங்களுக்கு எங்கள் இலக்கு என்றும் புட்டின் கூறியிருந்தார். ரஷ்ய மக்களில் பலர் குடும்பத்தின் பாரம்பரியத்தை பராமரிக்கிறார்கள். அங்கு நான்கு, ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள் என்றும் திரு புட்டின் கூறினார். முன்பு ரஷ்ய குடும்பங்களில் எங்கள பாட்டி மற்றும் கொள்ளு பாட்டிகளுக்கு 7 மற்றும் 8 குழந்தைகள் இருந்தனர் என்பதை நினைவில் கொள்க. இந்த மரபுகளைப் பாதுகாப்போம், புத்துயிர் பெறுவோம். பல குழந்தைகளைப் பெறுவது, ஒரு பெரிய குடும்பம், ரஷ்யாவின் அனைத்து மக்களுக்கும் ஒரு விதிமுறையாக, வாழ்க்கை முறையாக மாற வேண்டும் எனவும் புட்டின் கோரியிருந்தார். ■





# ஏழு தேசிய விருதுகள் கண்ட இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான்

கானா பிரபா
(அவுஸ்திரேலியா)

ஆகஸ்ட் 15, 1992 ஆம் ஆண்டு ரோஜா திரைப்படம் வெளியாகிறது. தமிழ்த் திரையிசையின் புதிய போக்கை நிறுவிய ஏ.ஆர்.ரஹ்மான் என்ற அடுத்த யுக இசை நாயகனின் தோற்றம் அங்கே எழுகிறது. 32 ஆண்டுகள் கோலோச்சும் அவரது இசைப்பயணத்தில், ஆகஸ்ட் 16 ஆம் திகதி அவருக்கு இன்னொரு அங்கீகாரமாக சிறந்த பின்னணி இசையமைப்பாளருக்கான தேசிய விருது கிடைக்கிறது.

வெகுஜன ரீதியான வெற்றி பெற்ற கலைஞனுக்கு,அரச மட்டத்தில் வழங்கப்படும் விருதுகளில் ஓரவஞ்சனை காட்டப்படுவதுண்டு.ஆனால் ரோஜா படப் பாடல்கள் ஒட்டுமொத்த இந்தியா தாண்டி உலகம் முழுதும் வெவ்வேறு மொழிக்காரர்களாலும் கொண்டாடப்பட்டது. அதே சமயத்தில் தன்னுடைய முதல் படத்திலேயே இந்தியத் தேசிய விருதையும் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு அளித்து மகிழ்ந்தது.

மூத்த சகாப்தமான இளையராஜாவின் இசையில் "தேவர் மகன்" திரைப்படமும், இளவல் ஏ.ஆர்.ரஹ்மானின் "ரோஜா" வும் விருதித் தேர்வின் இறுதிச் சுற்றில் அமைய,"ரோஜா" வைத் தேர்ந்தெடுத்து, இளையவரைத் தட்டிக் கொடுக்க வேண்டும் என்று அங்கீகரித்தவர் நம்மவர் பாலு மகேந்திரா என்பதில் நாம் பெருமைப்பட்டும் கொள்ளலாம்.

இந்தியத் தேசிய விருதுகளில் சிறந்த பாடகிக்கான விருது அறிவிக்கப்பட்ட ஆண்டு 1968.அந்த ஆண்டில் ஏவிஎம் நிறுவனத்தின் "உயர்ந்த மனிதன்" திரைப்படத்துக்காக, மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதனின் இசையில் "பால் போலவே" பாடலுக்காக இசையரசி பி.சுசீலா அந்த வரலாற்றைத் தொடக்கி வைக்கிறார்.

1997 ஆம் ஆண்டில் ஏவிஎம் நிறுவனத்தின் பொன் விழா ஆண்டில் ஒளிர் விடுகிறது "மின்சாரக் கனவு". இதோ அடுத்த தலைமுறைப் பாடகி சித்ராவுக்கு "மானாமதுரை" பாடல் தேசிய விருதைக் கொடுத்ததோடு, பாடும் நிலா எஸ்.பி.பாலசுப்ரமணியம் அவர்களுக்கும் "தங்கத் தாமரை மகளே" பாடலுக்காகவும் இன்னொன்றைக் கணக்கில் வைக்கிறது. பாடலுக்கான நடன அமைப்புக்காக பிரபுதேவாவும் கூடவே இன்னொன்றை அள்ளுகிறார். இசைப் புயல் ஏ.ஆர்.ரஹ்மானைப் பொறுத்தவரை அவருக்குக் கிடைக்கும் இரண்டாவது தேசிய விருது. ரோஜா படத்தில் இருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு இளமைக் கொண்டாட்ட விருந்துக்கு ஓர் விருது. இந்தியாவின் தென்னகத்துப் படைப்பாளிகள் வடநாட்டில் கோலோச்சுவது என்பது மிக அரிது, அப்படியே அற்புதங்கள் நிகழ்ந்தாலும் அவர்கள் நின்று நிலைப்பது என்பது மின்னி மறையும் நட்சத்திரங்கள் போல. ஆனால் ரோஜாவில் தொடங்கிய ஓட்டத்தில், நேரடி ஹிந்தித் திரைப்படங்களிலும் ரஹ்மானின் தேவை உணரப்படுகிறது. அவை வெறுமனே புத்திசை தரும் சப்தங்களின் நாயகனாக மட்டுமன்றி, வரலாற்றுப் பின்புலம் தரும் படைப்புகளிலும் ஏ.ஆர்.ரஹ்மானின் ஆளுமைத்திறனை உள்வாங்குகிறார்கள். அப்படியாக அமைந்த ஒரு படைப்பு, ஆஸ்காரின் கதவுகளைத் தட்டிச் செல்லும் அங்கீகாரம் கொண்டதாகவும் விளங்குகிறது. அதுதான் "லகான்" (Lagaan: Once Upon a Time in India) என்ற



பெருமை மிகு படைப்பு. இந்தியத் திரைச் சரிதத்தில் இந்தப் படத்தை விலக்கி ஒரு வரலாறு எழுத முடியாது. ஏ.ஆர்.ரஹ்மானை உலக அரங்கிலும் உள் வாங்க இது போன்ற படைப்புகளே அடையாளமாக விளங்கின. இதோ இன்னொரு தேசிய விருதும் அவரின் கிரீடத்தில் கோஹினூர் வைரக்கலாக.

ஏ.ஆர்.ரஹ்மானுக்குக் கிடைத்த ஒவ்வொரு விருதும் ஒவ்வொரு விதமான படைப்புலகக் களன்களாகவே அமைந்தது அவருக்குத் தீனி கொடுத்தது."வெள்ளைப் பூக்கள் உலகம் எங்கும் மலரவே"கேட்டாலே உணர்வுப் பெருக்கெழும். அப்பேர்ப்பட்ட பாடல்கள் பொதிந்த "கன்னத்தில் முத்தமிட்டால்", மனித உறவுகளின் சிக்கல்களைக் கொண்டு புனையப்பட்டது.இப்படியானதொரு கதைக்களனிலும் தனக்கான அங்கீகாரத்தைப் பதிப்பிக்க முடியும் என்று, ஜனரஞ்சக அபிமானத்தோடு அடுத்த தேசிய விருதை வாங்கிக் கொண்டார்.

ஏ.ஆர்.ரஹ்மானுக்குக்கிடைத்த ஏழு தேசிய விருதுகளில், நான்கு அவரை அறிமுகப்படுத்திய மணிரத்னம் படைப்புகளாகவே அமைந்தது இன்னொரு சிறப்பு. அப்படியாக அவருக்குக் கிடைத்த ஐந்தாவது தேசிய விருது "காற்று வெளியிடை" கொடுத்தது. இந்தியத் தேசிய விருதுகளில் பின்னணி இசைக்கெனத் தனியானதொரு அங்கீகாரத்தை 1994 ஆம் ஆண்டில் நிறுவியவர்கள் மீண்டும் அதைத் தொடர வைத்தது 2009 ஆம் ஆண்டில் மலையாளத் திரைப்படமான "பழசி ராஜா" வழியாக.அந்தப் படத்துக்கான இசை விருது இசைஞானி இளை யராஜாவுக்கு வழங்கப்பட்டது.

இங்கே பின்னணி இசை உலகிலும் ஏ.ஆர்.ரஹ்மானுக்கான இரு வேறு களங்கள் வாய்க்கின்றன. நடிகை ஸ்ரீதேவியின் 300 வது படமாகவும், அவர் முழு நீளக் கதாபாத்திரத்திலும் நடித்து வழங்கிய Mom திரைப்படமே இந்த நாயகியின் இறுதிப் படமாக அமைகின்றது. ஸ்ரீதேவி அளவுக்கு தென்னகத்தில் இருந்து வட நாட்டுக்குச் சென்று கோலோச்சியவர் யாருமிலர். அந்த வரலாற்றின் நீட்சி தான் ஏ.ஆர்.ரஹ்மான். ஸ்ரீதேவியின் இறுதிப் படமே அவருக்கான தேசிய விருதைக் கொடுத்ததோடு, ஒரு திகில் படம் என்ற ரீதியில் ரஹ்மானுக்கு இன்னொரு புதுப் பரிமாணத்தில் இசை அனுபவமும், பின்னணி இசையில் தேசிய விருதும் கிடைக்கிறது. தமிழ் இலக்கிய உலகின் மகோன்னதமான படைப்பாளி கல்கி அவர்களின் "பொன்னியின் செல்வன்" தமிழர் கருவறைகளில் தங்கிய காவியம்.ஆனானப்பட்ட எம்.ஜி.ஆர் கூட இந்தப் படைப்பைத் திரைப்படமாக எடுக்க முனைந்து முடங்கிப் போனது. ஆனால் காலத்தின் கட்டாயத்தில் அது மணிரத்னம் வழியாகத் தான் கனிய வேண்டும் என்ற இலக்கு வைத்திருந்திருக்க வேண்டும் போல.

இந்திய சினிமாச் சரித்திரத்தில் வசூல் சாதனையில் புதிய அத்தியாயத்தைப் படைத்தது "பொன்னியின் செல்வன் பாகம் 1".

இந்திய அளவில் கல்கியின் இலக்கியப் படைப்பை ஒரு திரைமொழியில் அழகியலாகக் காட்டும் வல்லமையின் வெற்றி தான் அந்த வசூலின் பிரதிபலிப்பு. இன்று தனது ஏழாவது தேசிய விருதாக, சிறந்த பின்னணி இசைக்கான விருதை "பொன்னியின் செல்வன் பாகம் 1" இற்காகப் பெற்றிருக்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான். இந்தப் படைப்புக்காக அவர் உள்வாங்கிக் கொண்ட பாரம்பரிய இசைக் கருவிகள், புதிய பாடலாசிரியர்கள் என்று தன் தனித்தன்மையைப் பறைசாற்றியதை பொன்னியின் செல்வன் இசைத்தொகுப்பு வழியாகக் கேட்டு இன்புறும் போது அனுபவ ரீதியாக உணரலாம். "பொன்னியின் செல்வன்" அடுத்த தலைமுறைக்கும் கடத்தப்பட்டிருக்க ஏ.ஆர்.ரஹ்மானும் ஒரு முக்கிய காரணியாக இயங்கியிருக்கிறார். அவருக்கான விருதுக் கௌரவம் என்பது ஏ.ஆர்.ரஹ்மான் என்ற புத்திசை வீரனின் அடுத்த பாய்ச்சலுக்கான இன்னொரு உத்வேகம். ■



M&M FAMILY
TOGETHER WE SHALL PREVAIL

வெற்றிமணியின்
30 ஆவது
ஆண்டு நிறைவு
இதழ் கண்டு
மகிழ்கின்றோம்.

குரு அரவிந்தன் (கனடா)

## ‘ஆக்குவாய் காப்பாய்’ கனடியத் தமிழ்த் திரைப்படம்

# தமிழ்ப்படங்களைத் தயாரிப்பதில் இந்தியாவுக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் கனடா!

தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் ஒன்றான கனடாவில் தயாரிக்கப்பட்ட ‘ஆக்குவாய் காப்பாய்‘ என்ற திரைப்படம் பற்றிய ஊடகச் சந்திப்பு சென்ற ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி ரொறன்ரோ பிறைமா நடனப்பள்ளி மண்டபத்தில் மாலை நடைபெற்றது. இந்தப்படம் கனடா நாட்டில் வசிக்கும் ஒரு தமிழ்ப் பெண்ணின் வாழ்க்கைப் போராட்டங்களை மையப்படுத்திய கதைக்கருவைக் கொண்டிருக்கின்றது.

லூனார் மோஸன் பிக்சர்ஸ் மற்றும் ஆர்.புரொடக்ஸன்ஸ் இணைந்து தயாரித்த இந்தப் படம் கனடா எஸ். மதிவாசனின்


இயக்குனர் மதிவாசன்

எழுத்து, இயக்கத்தில் உருவாகி இருக்கிறது. இதில் கதாபாத்திரங்களாக கிருந்துஜா ஸ்ரீகாந், ஜெயப்பிரகாஸ், டேனிஸ் ராஜ், செந்தில் மகாலிங்கம், மதிவாசன் சீனிவாசகம், சுரபி யோகநாதன், ஆஸ்லி சுரேஸ்குமார், ஆதியா தயாளன், தனிஸா, சுதர்ஸி இக்னேஸியஸ், ரிஸீத் தலீம், மார்க் டிபேக்கர், டாக்டர் கரு கந்தையா, டாக்டர் கதிர் துரைசிங்கம், டாக்டர் வரகுணன் ஆகியோரும் இந்தப் படத்தில் நடிக்கின்றனர். ஜீவன் ராம்ஜெயம் மற்றும் தீபன் ராஜலிங்கம் ஆகியோர் ஒளிப்திவு செய்திருக்கிறார்கள். ரியூ ஆர். கிருஸ்ணா இந்தப் படத்திற்கு இசை அமைத்திருக்கின்றார். மகாஜனா கல்லூரியின் பிரபல நாடக நடிகரும், வைத்திய கலாநிதியுமான கதிர் துரைசிங்கம் இந்தப் படத்தில் வைத்தியராகக் கௌரவப் பாத்திரம் ஏற்று நடித்திருக்கின்றார்.

இதன் மூலக்கதையைச் எழுத்தாளரும் நடிகருமான சகாப்தன் எழுதியிருக்கின்றார். இந்தக் கதையை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்த ‘ஆக்குவாய் காப்பாய்‘ என்ற நாடகம் மனவெளி கலையாற்றுக் குழுவினால் அரங்காடல் நிகழ்ச்சியில் ரொறன்ரோவில் இரண்டு காட்சிகளும், கனடா, மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் ரொறன்ரோவிலும், மொன்றியலிலும், லண்டன் மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் லண்டனில் ஒரு தடவையும் மேடையேற்றப்பட்டன.மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் நாகமுத்து சாந்திநாதனின் நெறியாள்கையில், நாடகத்தில் சுமுதினி சக்திவடிவேல், தயாபரன் ஆறுமுகம், டாக்டர் கதிர்துரைசிங்கம், சகிலா தவராஜா ஆகியோர் நடித்திருந்தனர். புலம்பெயர்ந்த மண்ணில் கனடியத் தமிழர்கள் நாடகக்கலையைத் தொடர்ந்தும் தக்கவைத்திருப்பது பெருமைக்கும், பாராட்டுக்கும் உரியது.

கனடாவில் எனது ‘முள்ளுவேலி‘ என்ற சிறுகதையை வேலி என்ற பெயரில் மதிவாசன் தயாரித்து, நெறியாள்கை செய்த போது சிறந்த ஈழத்து நடிகரான அமரர் கே.எஸ்.பாலச்சந்திரன் அதில் நடித்திருந்தார். இந்தப் படத்தின் திரைக்கதை வசனத்தை நான் எழுதியிருந்தேன். இதைத் தொடர்ந்து ‘சுகம் சுகமே,‘ ‘சிவரஞ்சனி‘ போன்ற இந்திய – கனடா கூட்டுத் தயாரிப்பான படங்களுக்கும் திரைக்கதை வசனம் எழுத எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. ‘சுகம் சுகமே‘ என்ற படத்தின் சிறந்த திரைக்கதை வசனத்திற்காக ஜனகன் பிச்சேர்ஸாரின் விருதும் கிடைத்தது. சுகம் சுகமே படத்தில் டாக்டர் கதிர் துரைசிங்கமும் நடித்திருந் தார். தமிழ்ப்படங்களைத் தயாரிப்பதில் இந்தியாவுக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் கனடா நாடு இருப்பதும் குறிப்பிடத்தக்கது. ■









---


துயர் பகிர்வும், நன்றி நவிலலும்

# இது ஒரு தசாப்தத்தின் வரலாறு

## அமரர் திருமதி பராசக்தி கோபாலபிள்ளை

அன்னை மடியில் 23.02.1926 – ஆண்டவன் நிழலில் 01.09.2024


அமரர் திருமதி பராசக்தி கோபாலபிள்ளை

இலங்கை வடமாகாணம் யாழ்ப்பாணம்.யாழ்-மாளிப்பாய் வீதி. சிவன் கோவில் மேற்கு வீதியை பிறப்பிடமாகவும். யாழ் - கொட்டடி வில்லூன்றி பிள்ளையார். கோவிலடியை வாழ்விடமாகவும். பிரான்ஸ் கொலம்பஸ் தற்காலிக வதி விடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி காலமானார்.

இவர் காலம் சென்ற அமரர்கள் திரு திருமதி சின்னத்தம்பி பாக்கியம் தையலம்மை தம்பதிகளின் மூத்த மகளும். தீவகம்நயினாதீவு 5ம் வட்டாரம். அமரர்கள் திரு திருமதி போதா முருகேசு செல்லாச்சி.தம்பதிகளின் மருமகளும், காலம் சென்ற கோபால் பிள்ளை(முன்னாள் அரச சுங்க இலாகா உத்தியோகத்தர்). அவர்களின் அன்பு மனைவியும்.

கமலாதேவி (முன்னாள் அரச மருத்துவமாதுயாழ் அரசினர் வைத்தியசாலை) குலேந்திரன்(M.G,S). கனகராஜா.(அகில்) இரத்தினசபாபதி (எம்.ஜி.ஆர்) விமலாதேவி(லண்டன்) ஞானேஷ்வரன்(கோபரா ஞானம் ஜெர்மனி).சிவராஜா (எம்.ஜி.பி.) சியாமளா தேவி. தவராஜா.ஆகியோர்களின் அன்பு தாயாரும் அமரர். தருமலிங்கம்முன்னாள் கணக்காளர் யாழ் துறைமுக ஊழியர் சங்கம்) கோமளாதேவி றஞ்ஞினிதேவி. யமுனா குகதாசன்(கணக்காளர் லண்டன்) றமணிதேவி விமலேஷ்வரி சிவகுமார் நிர்மலா. ஆகியோரின். அன்பு மாமியாரும் ஆவர்.

அமரர்கள்.தங்கராஜா(ராஜாகூல்பார்). தியாகராஜா (எஸ்.டி.ஆர்).நித்தியலக்சுமி.. பத்மநாதன். மற்றும் தனபாலசிங்கம்(.அரச ஓய்வு நிலை ஊழியர் யாழ் அரச அதிபர் பணிமனைஇலங்கை)தர்மராஜா(லண்டன்) ஆகியோரின் பாசமிகுசகோதரியும். அமரர்கள்.கணேசு சிவக்கொழுந்து. நாகரெத்தினம் (ஆசிரியை) ராசமணி.சின்னராஜா.(ஓய்வு நிலை புகையிரத ஊழியர்)சண்முகராஜா. (முன்னாள் வர்த்தகர்) தங்கரெத்தினம் சோமசுந்தரம் (கிளாக்கர்) மற்றும்.சரஸ்வதி.(ஆசிரியை) சோதீஸ்வரி ஜெயலட்சுமி மீனலோஜினி ஆகியோரின் அன்பு மைத்துனியும். அமரர்கள் வேலுப்பிள்ளை. பூபதி இராசரெத்தினம் முன்னாள் வர்த்தகர்) சாமிநாதன் (முன்னாள் வர்த்தகர். யாழ்மலாயன் கபே. ) பொன்னம்மா மற்றும் வரலக்ஷ்மி (நயினாதீவு)ஆகியோரின் உடன் பிறவாத சகோதரியும், ஆவார்.

சுகந்தன் மயூரன் ஜனகன் அகிலா அகிலன் அகில்யா.சுஜன் கஜன் கரன்.திசாந்தன்மகிந்தன் அனுசியா. தீனதயாளன்.கஸ்தூரி,அட்சயா.அட்சயன்.சியாம்குமார். சினேஷ்குமார் சியோக்குமார் ஷான்குமார்.வேணி விஷாந்தி. கல்பனாமதன்ராஜ் தபீனா பிரசன்னாநிரோதா கிருஷ்ணா. நீரஷாநிவிதா. மதுஷா கஸ்தூரி ஆகியோரின் பேத்தியும். வேணுஷா வினீஷ் விதுஷன் மாதவி.ஜெய்சன் ஜெய்சிகா.ஜெய்ரோன் ஜெய்நிஷா. அஷாந்த.றிசாந்த். கிறிசாந்த் அத்விக். ஆராதனா அஜய். அக்சய்.சியாரன் சியானா யுவன் அஞ்சலி மாயா. திறிஸ். தைஸ் கைஸ் குமார். கைசாலி கயில் குமார் கசயினா கைனா கம்சிதன். ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவர்.

எமக்கு தொலைபேசி மூலமும் நேரில் வந்தும் எமது அம்மாவின் இறுதிச்சடங்கில் கலந்தும்,மலர்வளையம், பூச்செண்டு வைத்த அனைத்து உள்ளங்களுக்கும்,-கலந்து கொள்ளாமல் தவித்த உள்ளங்களுக்கும் எமது குடும்பசார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்

தகவல்: GOPARA GNANAM / Germany.



# குட் பேட் அக்லி படத்தில் விஜய்

தமிழ் சினிமாவில் ஆரம்ப காலத்தில் ராஜாவின் பார்வையிலே என்ற படத்தில் விஜய் நாயகனாக நடிக்க, இரண்டாவது நாயகனாக அந்த படத்தில் நடித்திருந் தார் அஜித்.

அதன் பிறகு ஒரு கட்டத்தில் இரண்டு பேருமே தமிழ் சினிமாவில் முக்கிய நாய கர்களாகிவிட்ட நிலையில், எதிரும் புதிருமான போட்டி யாளர்களாக இருந்தார்கள். தற்போது தனது 69ஆவது படத்தோடு விஜய் அரசிய லுக்கு செல்லபோவதால் இதுவரை அவருக்கு எதிராக கருத்து பதிவிட்ட அஜித்தின் ரசிகர்கள், இப்போது அவரை பெருமைப்படுத்தும் வகையில் கருத்துக்களை கொடு த்து வருகிறார்கள்.



அதை போன்று வெங்கட் பிரபு இயக்கத்தில் நடித் த கோட் படத்தில் அஜித்தின் வசனத்தை விஜய் பேசி நடித்திருந்த நிலையில், தற்போது ஆதிக் ரவிச்சந் திரன் இயக்கத்தில் தான் நடித்து வரும் குட் பேட் அக்லி படத்தில் விஜய்யின் பிரபலமான வசனம் ஒன்றை பேசி நடிக்கிறாராம் அஜித் குமார்.

# "GOAT" இல் நயன்தாரா நடிக்காதது ஏன்?



வெங்கட்பிரபு இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவான புழுயுவு திரைப்படம் செப்டம்பர் 5ஆம் திகதி உலகம் முழுவதும் வெளியானது. இந்த படத்தில் விஜய்யோடு பிரசாந்த், பிரபுதேவா, மீனாட்சி சௌத்ரி மற்றும் சினேகா உள்ளிட்டவர்கள் நடித்துள்ளனர். படம் கலவையான விமர்சனங்களைப் பெற தொடங்கியது.

ஆனாலும் வசூலில் குறை வைக்கவில்லை.. படம் இதுவரை 300 கோடி ரூபாவுக்கு மேல் உலகளவில் வசூலித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த படத்தில் அஜித், ரஜினி, சூர்யா மற்றும் விஜயகாந்த் என பல முன்னணி நடிகர்களின் ரெஃப்ரன்ஸ்களை அமைத்திருந்தார் இயக்குநர் வெங்கட்பிரபு. அதுபோல சிவகார்த்திகேயன் மற்றும் த்ரிஷா போன்றோரின் கேமி யோக்களும் ரசிகர்களை கவர்ந்தன.

இந்த படத்தில் விஜய்க்கு ஜோடியாக சினேகா நடித்தி ருந்தார். ஆனால் முதலில் அந்த கதாபாத்திரத்தில் நயன்தாராவைதான் நடிக்க வைக்க ஆசைப்பட்டதாக வெங்கட்பிரபு கூறியுள்ளார். ஆனால் சில காரணங்க ளால் நயன்தாராவால் அந்த படத்தில் நடிக்க முடிய வில்லை என்று கூறியிருந்தார். இந்நிலையில் கோட் படத்தில் பிரபுதேவா இருந்ததால்தான் அவர் அந்த படத்தை நிராகரித்துள்ளார் என இப்போது தகவல்கள் பரவி வருகின்றன.



# அம்மாவுக்கு கொடுத்த அன்பை எனக்கும் தாருங்கள்

தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி என பலமொழிகளில் சூப்பர் ஸ்டார் நடிகையாக திகழ்ந்தவர் ஸ்ரீதேவி. அவர் சில ஆண்டுகளுக்கு முன் னர் டுபாயில் இயற்கை எய்தினார். இதையடுத்து அவரின் மூத்தமகளான ஜான்வி கபூர் இந்தி சினிமாக்களில் தொடர்ந்து நடித்து முன்னணி நடிகை யாக அறியப்படுகிறார்.

பொலிவுட் படங்களில் மட்டும் இதுவரை நடித்து வந்த அவர், தமிழ் படங்களிலும் நடிக்க ஆசைப்படுவதாக கூறியுள்ளார். தெலுங்கில் ஜூனியர் என் டி ஆர் நடிக்கும் தேவரா படத்தில் கதாநாயகியாக ஒப்பந்தமானதன் மூலம் தென்னிந்திய சினிமாவில் அறிமுகமாகிறார்.

இரு பாகங்களாக உருவாகும் இந்த படத்தின் முதல் பாகம் செப்டம்பர் 27 ஆம் திகதி வெளியாகின்றது . இதற்கான புரமோஷன் நிகழ்ச்சி சென்னையில் நடக்க அதில் கலந்து கொண்டார் ஜான்வி.அப்போது பேசிய அவர் "சென்னை எனக்கு மிகவும் தனித்துவமான ஊர்.

ஏனென்றால் என் அம்மாவுடன் இருந்த சில அற்புதமான தருணங்கள் எனக்கு இந்த ஊரில்தான் வாய்த்தது. நீங்கள் என் அம்மா மீது காட்டிய அன்புதான் எங்களின் இப்போதைய நிலைக்குக் காரணம்.

அதற்கு நான் எப்போதும் கடமைப் பட்டிருக்கிறேன். அதே அன்பை எனக்கும் கொடுப்பீர்கள் என நம்பு கிறேன்" எனப் பேசியுள்ளார்.

# நெருக்கமாக நடிப்பது எளிதல்ல

தமிழில் பேட்ட, மாஸ்டர், தங்கலான் உள்ளிட்ட படங்களில் நடி த்தவர் மலையாள நடிகையான மாளவிகா மோகனன். தற்போது ஹிந்தியில் யுத்ரா என்ற படத்தில் நடித்துள்ளார். சித்தாந்த் சதுர்வேதி, ராகவ் ஜுயல் ஆகியோர் முதன்மை வேடத்தில் நடித்துள்ளனர். இந்த படம் வரும் செப்., 20இல் வெளியாகிறது. மாளவிகா மோகனன் யுத்ரா படத்தில் முத்தக்காட்சி மற்றும் நெருக்கமான காட்சிகளில் நடித்துள்ளார். இதுபற்றி அவர் கூறுகையில்,

சினிமாவில் நெருக்கமான மற்றும் முத்தக்காட்சிகளில் நடிப்பது எளிதல்ல. நடிகர், நடிகை இடையே நல்ல புரிதல் மற்றும் சௌகரிய மான சூழல் இருக்க வேண்டும். பொதுவாக இதுபோன்ற காட்சிகளில் நடிக்க படப்பிடிப்பு தளத்தில் -இன்டிமேட் கோ ஆர்டினேட்டர் ஒருவர் இருப்பார். நடிகர்கள் கூச்சமின்றி நடிக்க அவர்களுக்கு இவர்கள் உதவுவார்கள். ஆனால் எங்கள் படப்பிடிப்பில் அப்படி யாரும் இல்லை. இருப்பினும் நானும், சித்தாந்தும் எப்படியோ நடித்துவிட் டோம் என்கிறார்.

தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
"பண்டாரவன்னியன் புத்தகசாலையில்"
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

தொடர்புகளுக்கு:
பண்டாரவன்னியன் புத்தகசாலை
வவுனியா, இலங்கை
+94772244616
youtube@akkakuruvi

இது வெற்றிமணியின் ஒரு இலவச விளம்பரம். நம் இளைஞர்கள் முயற்சிக்கு கைகொடுப்போம்!






















அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்